# நிறங்கள்

சிறுகதைத்தொகுப்பு



தமிழ் எழுத்தாளர் சங்கம்-யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறங்கள்

ஜேர்மனி
தமிழ் எழுத்தாளர்களின்
சிறுகதைத் தொகுப்பு

வெளியீடு

**தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி**

இணைவெளியீடு
**சிந்தனை வட்டம்**
இல 14, உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை 20802
ஸ்ரீலங்கா
294 /2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'நிறங்கள்'**

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு

| | | |
|---|---|---|
| நூலாக்கம் | : | வ.சிவராஜா<br>க.அருந்தவராஜா<br>பொ.சிறிஜீவகன்<br>அ.புவனேந்திரன் |
| பதிப்பு | : | 1ம் பதிப்பு ஐப்பாசி 2008 |
| பதிப்புரிமை | : | தமிழ் எழுத்தாளர் சங்கம்<br>ஜேர்மனி |
| வெளியீடு | : | தமிழ் எழுத்தாளர் சங்கம்<br>ஜேர்மனி |
| இணை வெளியீடு | : | சிந்தனை வட்டம்<br>14, உடத்தலவின்னை மடிகே<br>உடத்தலவின்னை, ஸ்ரீலங்கா. |
| அச்சுப்பதிப்பு | : | சிந்தனை வட்டஅச்சீட்டுப் பிரிவு<br>14, உடத்தலவின்னை மடிகே<br>உடத்தலவின்னை, ஸ்ரீலங்கா. |
| அட்டை வடிவமைப்பு | : | செல்வன்.பு.பானுஸ்கந்தா<br>டியுஸ்பேர்க், ஜேர்மனி |
| நூல் வடிவமைப்பு | : | மேழிக்குமரன் |
| பக்கங்கள் | : | 172 |

ISBN: 978-955-1779-18-4

தொடர்புகளுக்கு

V.Sivarajah
Am Windhoevel – 18a
47249 Duisburg, Germany.
Tel: 0203 8073898
E-Mail:
mann_erde_sivarajah@hotmail.com

K.K.Arunthavarajah
P.Fach. 120116
59485 Soest, Germany.
Tel: 02921 343137
E.Mail:
arunthavarajah@gmail.com

ஈழத்துச்
சிறுகதை இலக்கியப் பரப்பில்
கோலோச்சி,
தமிழகத்திலும் மணம் பரப்பி
மறைந்த

எழுத்தாளர்

# செ.யோகநாதன்

அவர்களுக்கு
இந்நூல்
*சமர்ப்பணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIRANKAL

Erste Auflage: October 2008

Copyright: Tamilischer Schriftsteller Verein - Germany

Herausgeber: Tamilischer Schriftsteller Verein – Germany

Mitherausgeber: Chinthanai Vattam
14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Srilanka

Originaltextcopyright: Schriftstellervereinigung
Herr V. Sivarajah
Herr K.K. Arunthavarajah
Herr P. Srijeevaghan
Herr A. Puvaneenthiran

Umschlaggestaltung: Herr.P.Banuskantha
Duisburg, Germany.

Druck und Bindung: Chinthanai Vattam Printing Division
14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Srilanka

**ISBN: 978-955-1779-18-4**

Kontakt:

**V.Sivarajah**
**Am Windhoevel – 18a**
**47249 Duisburg, Germany.**
**Tel: 0203 8073898**
**E-Mail:**
**mann_erde_sivarajah@hotmail.com**

**K.K.Arunthavarajah**
**P.Fach. 120116**
**59485 Soest, Germany.**
**Tel: 02921 343137**
**E.Mail:**
**arunthavarajah@gmail.com**



# பதிப்புரை

'ஜெர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்' பூரண அனுசரணையுடன் 'ஜெர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்துடன்' இணைந்து சிந்தனை வட்டத்தின் 294வது வெளியீடாக 'நிறங்கள்' சிறுகதைத் தொகுதியினை வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

புலம்பெயர்ந்த ஈழத்தவர்களின் தமிழ் வளர்க்கும் ஆர்வத்தை வெளிப்படையாகக் கொண்டுள்ள ஜெர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆண்டுதோறும் ஒரு தமிழ் நூலை வெளியிடவேண்டும் என்ற உயரிய குறிக்கோளின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்லாது, புலம் பெயர்ந்த சிறார்கள் மத்தியில் தமிழை வளர்க்கவும் அரும் பாடுபட்டு வருகின்றது. தமிழ் இலக்கிய ஒன்றுகூடல்கள், தமிழ் இலக்கிய நூல் வெளியீட்டு விழாக்கள் என்று பல்வேறு நடவடிக்கைகளினூடாகவும் இவர்கள் செயல்பட்டு வருவது உண்மையிலேயே பாராட்டக்கூடிய ஒரு விடயமாகும்.

இச்சிறுகதைத் தொகுதியில் ஜெர்மனியில் புலம் பெயர்ந்து வாழும் 14தமிழ் எழுத்தாளர்களின் 14 கதைகள் இடம்பெற்றுள்ளன. அனைத்துக் கதைகளும் புலம்பெயர் சூழலில் புலம்பெயர்ந்தவர்களின் மனோநிலையை நன்கு வெளிப்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன.

ஈழத்தில் வாழக்கூடிய நாம் புலம்பெயர்ந்த மக்கள் அனைவரும் சொகுசான முறையில், பூரண வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று தான் எண்ணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளோம். ஆனால், அவர்களது வாழ்க்கையின் உள்ரங்க உணர்வுகளையும், தான் பிறந்த மண்ணையும், வாழ்ந்த சூழலையும், ஒட்டிப் பழகிய உறவுகளையும் பிரிந்து தனிமையில் வாழும் அவர்களின் மனோநிலைகளைப் பற்றியும், தன்னுடைய பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டி தன்னுடைய உள்ளார்த்த உணர்வுகளை அடக்கிக் கொண்டு அவர்கள் படும் வேதனைகளையும் நாம் சிந்திக்கத் தவறிவிடுகின்றோம்.

இந்த அடிப்படையில் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் மனோநிலையின் ஒரு சிறுதுளியையே இந்நூலிலுள்ள சிறுகதைகள் எமக்கு உணர்த்துகின்றன.

ஈழத்தில் வாழக்கூடிய எழுத்தாளர் பெருந்தகைகளின் சிந்தனைகள் ஒரு கோணத்தைக் கொண்டது. ஆனால், புலம்பெயர் எழுத்தாளர்களின் சிந்தனைகள் வித்தியாசமான ஒரு கோணத்தைக் கொண்டதாகும். குறிப்பாக மன அழுத்தங்களும், விரக்தி மனோநிலைகளும் புலம்பெயர் இலக்கியங்களில் காணப்படுவது புதினப்பட வேண்டியவொரு விடயமல்ல. அவர்களுடன் அந்த சூழலில் நேரடியாக அனுபவிக்கும்போது இவ்வுணர்வுகளின் உள்ளார்த்தங்களை எளிமையாக உணர்ந்து கொள்ளலாம். இவ்வடிப்படையில் புலம் பெயர்ந்த மக்களுடன் அவர்களுடன் நேரடியாக நின்று கண்ணூடாகக் கண்டவன் என்றடிப்படையில் இக்கதைகளின் கருப்பொருட்கள் யதார்த்தத்தைப் புலப்படுத்தும் நிலைகள் என்பதையும், அவர்களுடைய நிலையில் இவை உயர் இலக்கியங்கள் என்றும் என்னால் உறுதியாகக் கூற முடியும்.

சிந்தனைவட்டத்தின் ஏனைய வெளியீடுகளுக்கு ஆதரவு நல்கும் வாசகநெஞ்சங்கள் இந்நூலுக்கும் ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அன்புடன்
கலாபூஷணம் புன்னியாமீன்
**முகாமைத்துவப் பணிப்பாளர் (சிந்தனைவட்டம்)**



# ஜெர்மனியில் இருந்து தாயகத்தை ஏக்கத்துடன் தேடும் கதைகள்...

ஜேர்மனி மண்ணில் இயங்கும் தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளிக்கொண்டு வரும் இந்த 'நிறங்கள்' சிறுகதை தொகுப்பில் ஜேர்மனியில் வாழும் பதினான்கு இளம் எழுத்தாளர்களின் பல்வேறு வகையான உணர்வோட்டங்கள் சிறுகதை எனும் கட்டமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து போன தேசத்தில் நம்மவர்கள் முகம் கொடுக்கும் வாழ்நிலை பிரச்சினைகளை இந்த சிறுகதைகள் பதிவு செய்வதோடு பல்வேறு தகவல்களையும் புரிந்து கொள்வதற்கும் அதன் மூலம் அவர்களின்பால் அக்கறை கொள்வதற்கும் இந்த கதைகளின் மூலமாக முடிகின்றது. கடல் கடந்து வாழும் நம்மவர்களின் மனோபாவத்தையும் நாம் இந்த சிறுகதைகளின் வாயிலாக அறிந்து கொள்கிறோம்.

ஜெர்மனியில் வாழும் நம் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் பல்வேறு கதைகளாக முன்வைக்கப்படுவதிலிருந்து அங்குள்ள மனித வாழ்வின் நிர்க்கதி நிலையும் தாயகம் பற்றிய ஏக்கங்களும் தனி மனிதர்களாக சிதறிப் போயுள்ள புலம் பெயர்வு தரும் துயரமும் ஒவ்வொரு கதைகளிலும் பேசப்படுகின்றது. எங்கு சென்றாலும் நம்மவர்களிடம் இன்றும் இருக்கும் தாயக நினைவுகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தாயக மண்ணில் கூடி வாழ்வதற்கான ஏக்கங்களும் நாம் எங்கிருந்தாலும் தவிர்க்க முடியாது என்பதையே உணர்த்துகின்றது.

இந்த தொகுப்பில் உள்ள 14 சிறுகதைகளையும் தொடர்ச்சியான வாசிப்பின் மூலம் வெவ்வேறு மன உணர்வுகளை ஒரே திரையில் பார்ப்பது போல் ஒரு மனநிலை ஏற்பட்டாலும், இந்த சிறுகதைகளில் புலம்பெயர்ந்தவர்களின் எழுத்துத் திறமையும் ஜெர்மனிய சூழ்நிலையில் தமது தாய்மொழியை மறக்காமல் இன்றும் தமக்கான அடையாளங் களைத் தேடும் நம்மவர்களின் அக்கறையையும் உணர்வ தோடு, புலம் பெயர்வு வாழ்வில் ஆக்க இலக்கிய முயற்சி களை இது போன்றதொரு சிறுகதைகளின் வாயிலாக தொகுப்பாக்க எடுத்த முயற்சி பாராட்டத்தக்கதுமாகும்.

ஒவ்வொரு சிறுகதைகளிலும் தாயகம் பற்றிய ஏக்கங் கள் மட்டும் நெருப்பு அனல் போல் கணக்கின்றது. தொப்புள் கொடி உறவுகளை மறந்து எங்கோ ஒரு தேசத்தில் வாழ்ந் தாலும் அங்குள்ள வெவ்வேறு தேசத்தவர்களுடனும் நம்மவர் களின் நட்பையும் அன்பையும் பதிவு செய்யும் முதல் சிறு கதையான வ. சிவராசா எழுதியுள்ள 'வெள்ளை மனம்' கதையில் வரும் கதாபாத்திரத்தை சொல்லலாம்.

பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளில் தாய்மை உணர்வையும் அது பெண்கள் சார்ந்த அக உணர்வுகளையும் தனிமையின் மொழியில் சொல்வதுதான் அந்த கதைகளின் தனித்துவமாக அமைந்துள்ளது.

மற்றொரு சிறுகதையான அரவணைப்பு என்ற மேழிக் குமரனின் சிறுகதை குழந்தையுள்ளத்தின் தனிமையும் சோக முமான உணர்வுகள் குறிப்பிட்ட கதையின் தன் கூற்றின் நடையில் மிகவும் அழகான விதமாக சொல்லப்பட்டுள்ளது. இக்கதை அன்பு இல்லாத அரவணைப்பற்ற தனிமையில்



ஏங்கி தவிக்கும் குழந்தையின் மனோவியலை படம் பிடிக் கின்றது. ஜெர்மனிய மொழியில் சில வார்த்தைகளை இக் கதையின் நெடுகிலும் கையாளப்பட்டிருக்கின்றதை படிக்கும் போது அதற்கான அர்த்தத்துடன் அந்த வார்த்தைகளை ஆங்கில வார்த்தைகளை பேச்சு வழக்கில் எழுதியதை போல் இருக்கின்றது.

'வேற்றுமை' என்ற சிறுகதையை ஜீவகன் எழுதியுள் ளார். இந்தக் கதையின் நிகழ்காலம் ஜெர்மனி என்றாலும் நம்மூரில் நடப்பது போல் உள்ளது. என்னதான் நம்மவர்கள் புலம்பெயர்ந்து போனாலும் போன இடத்தில் தமது சாதி மனோபாவத்தையும் மேலாதிக்க மனோநிலையையும் போலி கௌரவத்தையும் எங்கு சென்றாலும் விட்டுவிட முடியாமல் தவிப்பதையும், தலைமுறை இடைவெளியில் ஏற்படும் அக மாற்றம் நல்ல திசையை நோக்கி போவதையும் சுட்டிக்காட்டும் அதேவேளையில் இக்கதையின் பாத்திரங்கள் ஜேர்மனியில் வாழ்ந்தாலும் மனம் இன்னும் பூர்வீகத்தைவிட முடியாத முரண்பட்ட மனோ நிலையும் இக்கதை சொல்லும் செய்தி யாக உள்ளது.

திருமதி. சுந்தராம்பாள் பாலச்சந்திரன் எழுதியுள்ள சிறுகதையின் பெயர் 'சாகா நினைவுகள்'. இக்கதை கணவன் மனைவியின் நேசபூர்வ அன்பில் பிரிவு தரும் வலியை அழ காக பெண் மொழியில் சொல்கிறார். இச்சிறுகதையின் ஓட் டம் மிகவும் நேராகப் போகின்றது. கதையின் கதாபாத்திரங் களின் பிளவுபட்ட உடைந்த மனநிலையும் முரண்பாடும் பதிவுசெய்யப்படுகின்றது.

அதேபோல் மற்றொரு சிறுகதை 'பாதை மாறிய பயணங்கள்' என்ற கதையை திருமதி. கலைவாணி ஏகானந்த ராசா எழுதியுள்ளார். 'பாதைகளின் பயணங்கள்' எப்படி வாழ்வைத் தீர்மானிக்கின்றது, மனிதனின் உணர்வுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை மாற்றத்தை சூழ்நிலைகளும் காலப்பகுதிகளும் வெவ்வேறு வகையுடன் ஆசைகள், ஏக்கங்கள், எண்ணங்கள், கனவுகளை திசைமாற்றி வைக்கின்ற போக்கையும் மனித உறவுகளுக்கான அறுந்துவிடாத பாசத்தின் நம்பிக்கையையும் காதலின் உண்மைத்தன்மை என்னவெல்லாம் செய்யும் என்பதையும் இந்த கதை சுட்டிக் காட்டுகின்றது. மனித நேயம் பற்றியும் இக்கதையின் உள்ளீடாக ஓடுவதனால் 'பாதை மாறிய பயணங்கள்' கொஞ்சம் கொஞ்சமாக மனத்தை லயிக்கின்றதற்கான இடத்தைப் பெறுகின்றது.

இந்த தொகுப்பில் பெண் எழுத்தாளர்களின் பங்கும் அவர்களின் புலம்பெயர்வு வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இடைவெளிகளும் எழுதுவதற்கும் சிந்திப்பதற்குமான வாசல்களைத் திறந்திருக்கின்றது. இந்த தொகுப்பில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பைப் பற்றி பார்க்கும்போது அவர்களின் கதைகளும் அவர்கள் பேசும் விசயங்களும் ஜேர்மனிய சூழ்நிலைகளில் புதிதுதான்.

மீனா சிவலிங்கம் எழுதியுள்ள 'ஆத்ம திருப்தி' என்ற கதைகூட பெண்ணின் மொழியில் எழுதப்பட்டதால் தனித்துவம் கொண்டதாக இருக்கின்றது. ஜெர்மனிய இனவாத சூழலில் ஒரு படித்த பட்டதாரி படும் மனவேதனையை, தகுதியை, திறமையை மீறிய வேலையை செய்வதனால் ஏற்படும் வேதனை உணர்வை தனது கதையில் நேர்த்தியாக பதிவு செய்துள்ளார் மீனா சிவலிங்கம். இந்த கதை படிப்பதற்கும் சுவையான நடையில் எழுதப்பட்டுள்ளது. அந்நிய மண்ணில் நம்மவர்கள் படும் துயரம் சொல்லில் அடக்க முடியாதது.

பல்வேறு வகையான எழுத்தாளர்களும் தமது படைப்புகளில் புலம்பெயர்ந்த வாழ்நிலையில் ஏற்பட்ட தனிமை, துயரம் பற்றி நிம்மதியில்லாத வாழ்வின் காரணத்தையும் அந்நியமாகும் சூழல் பற்றிய பதிவுகளையும் அனைத்து வகையான கதைகளிலும் தொட்டுச் செல்கிறார்கள். குறிப்பிடும்



படியான இக்கதைகளை புலம் பெயர்ந்தவர்களின் சாட்சியாகப் பார்ப்பதற்கும் துணைபுரிகின்றது. ஒட்டு மொத்தத்தில் எல்லாக் கதைகளிலும் எங்கோ ஒரு இடத்தில் தாயகம் பற்றிய ஏக்கம் இருப்பதன் மூலகாரணம் நம்மவர்களின் தீராத தனிமை உணர்வுதான்.

''கடிதத்தை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் கண்ணீர் வழிந்தது. எனக்கும் விம்மி வெடித்தது. தம்பி நீ எங்கையாவது உயிரோடு சந்தோஷமாக இரு. எங்களைப் பற்றி யோசிக்காதே. இந்த வரிகளை திரும்பத் திரும்ப வாசித்தேன். துக்கம் தொண்டையை அடைத்தது. எத்தனை சோகங்களைச் சுமக்கும் அந்த உறவுகள் இன்னும் எங்களைத் தேற்றுகின்ற நிலையிலே இருக்கிறார்கள்''. இது 'வேலை' என்ற கதையின் ஒரு பகுதி. இந்தப் பகுதியின் வரிகள் இன்றைய நமது நாட்டின் சூழலில் சராசரியாக பேசப்படும் வார்த்தைகள். பதற்றமான பீதியான மரணப் பயத்தில் உள்ள சூழலில் வாழும் நம்மிடம் இந்த வார்த்தைகள் இன்று பொதுவான சொற்களாகி விட்டதோடு கதையின் கதாபாத்திரங்கள் வாழ்வை எதிர்கொள்வதை போல்தான் நாமும் அன்றாடம் இந்த வாழ்வை எதிர்கொள்கிறோம்.

திருமதி. வேணி கிருபாகரன் எழுதியுள்ள 'பொய்யாயினவெல்லாம்' என்ற கதை புலம்பெயர்ந்த மண்ணில் நம்மவர்களின் குடும்பங்களில் நடக்கும் பெண் பார்க்கும் விடயம் பற்றியும் சீதனம், அழகு, குடும்ப கௌரவம் என்று இழுபடும் வாழ்க்கைக்கு உறுதியில்லாத தமிழ் குடும்பங்களின் போலித்தனங்களை பற்றியும்தான் இந்த கதையும் பேசுகின்றது. ஒரு முதிர் கன்னியின் இருண்ட அறையின் கண்ணீரை மிகவும் சோகமான வகையோடு சொல்லி நம்மையும் சிந்திக்க வைப்பதோடு, பரிவுணர்வையும் தூண்டிவிடுகின்றது. பெண் எழுதியிருப்பதனால் பெண்ணின் வலியை அவருக்கேயான எளிய மொழியில் அழுத்தமாக பதிவு செய்கின்றது. ஆண்களின் மேல் ஒரு வகையான கோபத்தையும் இக்கதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தீர்வற்ற முடிவு சொல்லிச் செல்கின்றது. தமிழ் எழுத்தாளர்களின் இந்த 14 கதைகளும் ஜெர்மன் மண் ணிலிருந்து தமிழ் மேல் அபிமானத்தில் அக்கறையுடன் அங்கே இருந்து வெளிவருவதுதான் இதன் சிறப்பம்சம் என்று நான் கருதுகின்றேன்.*

*இந்த முயற்சியை பெரிதும் வரவேற்பதோடு இது போன்ற முயற்சிகள் தொடரவேண்டும் என்ற வாழ்த்துக்களையும் இத்தருணத்தில் எழுதி செல்கிறேன்.*

**- வி. தேவராஜ் -**

*பிரதம பொறுப்பாசிரியர்'*
*வீரகேசரி வாரவெளியீடுகள்*
*27.08.2008*



*மூத்த கவிஞரும், எழுத்தாளரும், நூலாசிரியருமான*

# *ஏறாவூர் அனலக்தர்*

*அவர்கள்*

*அன்புடன் வழங்கிய*

# *வாழ்த்துரை*

புலம்பெயர்ந்தாலும் தம் தாய்மொழியையும், மண்ணையும் மறவாத ஈழ மண்ணின் மைந்தர்கள் ஜேர்மன் மண்ணிலிருந்து வெளியிடும் '*நிறங்கள்*' சிறுகதைத் தொகுதியில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஈழத்தில் காணப்படும் யுத்த அவலங்கள் நிமித்தம் தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் தன் புதிய வாழ்வை ஸ்தீரப்படுத்திக் கொள்ள புல்வேறுபட்ட சிரமங்கள், தியாகங்கள் மத்தியிலும் தாய்மொழியை மறந்துவிடாமல் அதை வளர்ப்பதற்காக வேண்டி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நிச்சயமாக ஈழத்துத் தமிழிலக்கியப் பரப்பில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும். இருப்பினும் ஈழத்துத் தமிழிலக்கிய ஆய்வுகள் புலம் பெயர்ந்தவர்களின் தமிழிலக்கியங்களை ஏனோ இன்னும் இனங்கண்டு கொள்ள தயங்குகின்றது. எதிர்காலத்திலாவது இத் தயக்கத்தை விடுத்து புலம்பெயர் இலக்கியத்திலும் ஈழத்துத் தமிழிலக்கியத்தின் ஓர் அங்கமாக கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'நிறங்கள்'* சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கதைகளும் புலம்பெயர்ந்த உள்ளங்களின் மனோ நிலையை மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

இந்த உணர்வுகள் வெளிப்பார்வைக்கு புலப்படாதவை. புலம்பெயர்ந்தவர்களின் மனோநிலையின் வெளிப்பாடுகள் நிச்சயமாக எமது இலக்கியவாதிகளுக்கும் ஒரு படிப்பினையே.

ஜெர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் புலம்பெயர்ந்த நாட்டிலும் தமிழை வளர்ப்பதற்காக வேண்டி மாபெரும் தியாகங்களை செய்து வருகின்றது என அறிகின்றேன். இவர்களின் முயற்சிகள் வெற்றியடைய நான் மனதாரப் பிரார்த்திக் கின்றேன்.

நிச்சயமாக இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற நல்ல படைப்புகளை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

மீண்டும் இம்முயற்சிக்கு என் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*கவிஞர் அன்லக்தர்*
ஏறாவூர் - இலங்கை
23.08.2008



# உங்களோடு சில நிமிடங்கள்...

**வணக்கம்!**

ஈழத்து இலக்கிய வரலாறு என்பது ஈழத்து தமிழ் ஆக்கங்களின் நீண்ட வரலாற்றை, தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்து தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் பங்களிப்பை, தனித்துவத்தை, ஈழத்து இலக்கியத்தின் தொடர்ச்சியை பதிவுசெய்கின்றது.

பழங்காலம் முதற்கொண்டே இலங்கை தமிழ் இலக்கியத்துக்குப் பல பங்களிப்புகளை வழங்கியுள்ளது. இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் புலவர் பலர் வாழ்ந்து தமிழ் நூல்கள் பல இயற்றித் தந்துள்ளனர். இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே ஈழத்துப் பூதன் தேவனார் என்ற புலவர் தமிழ் வளர்த்திருக்கிறார். அவர் இயற்றிய ஏழு பாட்டுகள் சங்க இலக்கியத்துள் சேர்ந்துள்ளன.

இலங்கையின் எழுத்துலகை நோக்கும்போது

இலங்கை எழுத்தாளர் சங்கம் இலங்கையின் தமிழ் சிங்கள மொழிகளைத் தாய்மொழியாகக்கொண்ட எழுத்தாளர்களின் ஒன்றிணைந்த இயக்கமாக நிறுவனமயப்படுத்தப்பட்ட ஓர் எழுத்தாளர் அமைப்பு ஆகும். சுவாமி விபுலாநந்த அடிகளாரைத் தலைவராகவும், சிங்கள எழுத்தாளர் மார்ட்டின் விக்கிரமசிங்கவை உப தலைவராகவும் கொண்டு 1947 இல் இலங்கை எழுத்தாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1950 க்கு முன்னமே இச்சங்கம் இயக்கமிழந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், இரண்டாம் உலகப் போர் முடிவடைந்ததை உடனடுத்த காலப்பகுதிகளில் எழுந்த சோசலிச அலை காரணமாக இலங்கையில் சோசலிச இலட்சியங்களைக்கொண்ட பல எழுத்தாளர்கள் தோன்றினர். அவர்கள் முன்னர் தனித்தனியாக இயங்கி வந்தபோதும் காலப்போக்கில் நிறுவனமயமாகவேண்டிய தேவை வலுவாக உணரப்பட்டது. 1954 ஜூன் 27 ஆம் நாள் கொழும்பு மருதானை வீரரத்ன மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தொடக்கி வைக்கப்பட்டது.

இன்று, ஈழத்துச் சிறுகதை வரலாறு செங்கை ஆழியான் க. குணராசா அவர்களால் எழுதப்பட்டு டிசம்பர் 2001 இல் வரதர் வெளியீடாக வெளிவந்தது. 2001 ஒக்டோபர் வரை வெளிவந்த 274 ஈழத்துச் சிறுகதை நூல்கள் ஆய்வுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. 399 ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளனர். ஈழத்தின் மூத்த எழுத்தாளர் வரதர் அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. ஈழத்தின் சிறுகதை வரலாற்றை

சமுதாய சீர்திருத்தக் காலம் (1930- 1949)
முற்போக்குக் காலம் (1950 - 1960)
புத்தெழுச்சிக் காலம் (1961 - 1983)
தமிழ்த் தேசியவுணர்வுக் காலம் (1983 - )

என்னும் காலப் பகுப்புக்களாக வகுத்து இந்நூல் அமைந்துள்ளது.

இலக்கியங்களை வகைப்படுத்தும் போது இலங்கையிலிருந்து வெளிவந்த தமிழ் இலக்கியங்கள் இலங்கையின் பண்டைய காலத்துத் தமிழ்ப் பெயரான ஈழம் என்னும் பெயரால் ஈழத்து இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன.

ஈழத்து இலக்கியமானது இனக்குழுக்கள் பிரதேசவாரியாகவும், வதிவிடங்களின் அடிப்படையிலும் பல்வேறு பிரிவுகளாகப் பாகுபடுத்தப் படக்கூடியது.



இனக்குழும அடிப்படையில் முஸ்லீம் மக்களின் பேச்சு, எழுத்து, மொழி தமிழாக இருப்பினும் தங்களை தனித் தேசிய இனமாக அடையாளப்படுத்திக் கொள்வதால் ஈழத்து முஸ்லீம் இலக்கியம் ஈழத்து இலக்கியத்தின் பெரும் பிரிவுகளில் ஒன்றாக அமையும்.

நிலவியல் சார்ந்து வடக்கு, கிழக்கு, மேற்கு, மலையகம் என்றவாறான பிரிப்புகளை மேற்கொள்ளலாம். எனினும் வடக்கு, கிழக்கு, மேற்கிலிருந்து வெளிவரும் இலக்கியங்கள் மலையக இலக்கியம் போன்று தெளிவான நிலவியல் அடையாளத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. வெளிப்பாட்டு மொழி சார்ந்தும் கலாச்சாரப் பின்புலங்கள் சார்ந்துமே வேறுபாடுகளைக் காணலாம்.

இதைத்தவிர விடுதலைப்போராட்டத்தை அடியொற்றி எழுந்த ஈழப் போராட்ட இலக்கியம், சாதி ஒழிப்புப் போராட்டத்தை அடியொற்றி எழுந்த பஞ்சமர் இலக்கியம் (தலித் இலக்கியம்) என்பனவும் தம்மளவில் சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினை காரணமாக பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து வெளிப்படும் இலக்கியம் ஈழப் புலம்பெயர் இலக்கியம் இதே வெளிப்பாட்டு மொழி, கலாச்சாரப் பின்னணியில் ஈழத்து இலக்கியமாகவே அழைக்கப்படுகின்றது.

காலப்போக்கில் புலம்பெயர் நாட்டின் கலாசாரத் தாக்கங்கள் காரணமாக இவ்வாறான இலக்கியங்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் என்பதிலிருந்து அந்தந்த நாட்டுத் தமிழிலக்கியங்களாக பரிணமிக்கலாம். உதாரணமாக மலேசியத் தமிழ் இலக்கியம், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற விழா ஒன்று சிறுகதை இலக்கியத்துக்கு வலுவூட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உலகைப் போஷித்து வரும் புரவலர் காசிம் உமர் தான் இந்த இன்ப அதிர்ச்சியைத் தந்திருப்பவர். புரவலர் புத்தகப் பூங்கா என்ற தமிழ் நூல் வெளியீட்டகத்தைத் தொடக்கி வரையறுக்கப்பட்ட நிபந்தனைக்கு அமைய இதுவரை ஒன்பது நூல்களை வெளியிட்டிருக்கிறார். இவ்வெளியீட்டகத்தின் மூன்றாவது சுற்று நூல்களுக்கான அறிமுக விழா 25.05.2008 ஆம் திகதி கொழும்பு, சுகததாச விளையாட்டு அரங்க உள்ளக ஹோட்டலில் மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் நடைபெற்றது. விழாவுக்கு, கொழும்பு தமிழ்ச் சங்கத்தலைவர் பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமை தாங்கினார்.

அவரின் தலைமையுரை சிறுகதை எழுத்தாளர்களுக்கு ஒரு ஆவணமாகும்.

சிறுகதை இன்று உலக வடிவம். அதற்குத் தர நிர்ணயமிருக்கின்றது. எமது ஆக்கங்கள் உலகத் தரத்தை எட்டிப் பிடிக்க வேண்டும். வாசகர் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. வாசிப்புத் தரமும் உயர்ந்துவிட்டது. எனவே, எழுத்தின் தரமும் உயர வேண்டும். நாளொன்றுக்கு ஒன்றாக நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் தோன்றிய இலக்கிய வடிவமே புனைகதை. சமூக அதிர்வுகளை உண்மையோடு நிகழ்த்துகின்றது. வா.வே.சு. ஐயர் போன்ற சிறுகதை முன்னோடிகள் சிறுகதைகளை ஆங்கில வடிவத்தில் படித்தே தமிழில் அறிமுகம் செய்தனர் எனத்தான் பேசப்படுகிறது. ஆரம்பத்தில் சிறுகதை மிகவும் சிறப்பாக எடுத்துச் செல்லப்பட்டது கதைகூறும் இயலில் தான். இதில் 32 நியமங்கள் உட்படும். விஞ்ஞான ஆராய்ச்சிகள் வளர்ந்து கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் சிறுகதை ஆசிரியர்கள் மார்ச்சிய இலக்கியம், பின் நவீனத்துவம், பின் காலனித்துவ இலக்கியம், சூழல் இயலோடு இணைந்த பெண்ணியத் திறனாய்வு ஆகிய இலக்கியத் திருப்பங்களை அறிந்திருக்க வேண்டும் என்று பேராசிரியர் தெரிவித்துள்ளார்.



இருபத்தைந்து வருடங்களைக் கடந்துவிட்ட புகலிடவாழ்வு. குந்த வந்த இடத்தையே சொந்தம் கொண்டாட வேண்டிய நிர்ப்பந்தம். நமது மொழி, கலை, கலாசாரம் என்பனவெல்லாம் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நிலை. ஆங்காங்கு புகலிட மொழிகளின் கலப்படம், திசைச் சொற்களாகி ஆதிக்கம் செலுத்தும் யதார்த்தம்.

இவற்றினிடையே புகலிடஇலக்கியமும் பிரசவக்களம் கண்டு கொண்டிருக்கிறது. ஜேர்மனியில் வாழும் தமிழர்கள் மத்தியிலும் அது நிகழ்வாகிப் பதிவாகிக் கொண்டிருக்கிறது.

இருபத்தைந்து வருடங்கள் கடந்து விட்டாலும் இன்னும் எமது வேர்கள் தாயகத்தில்தான். அந்த நினைவுகளிலிருந்து மீளமுடியாமல், இங்கு இன்னும் அசைபோட்டபடி நாங்கள்...

ஜேர்மனியில் வாழும் பதின்னான்கு சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதை இலக்கியப்பதிவு, நூல்வடிவில் உங்கள் கைகளில்.... இவை எல்லாமே புகலிடக் கருக்களைக் கொண்ட வலிகள் அல்ல. தாயக நினைவுகளையும் தாங்கிய பிரசவங்களும் தான். இந்தப்பதிவுகள் எமது அடுத்த சந்ததிக்கான ஆவணங்களாவதற்கு எடுக்கப்பட்டிருக்கும் சிறிய முயற்சியேயானாலும், இச்சிறுகதைகளை வாசிக்கும் உங்களுக்குப் பலதரப்பட்ட புதிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் எமக்கும் மகிழ்ச்சி தான்.

ஜேர்மனியில் வாழும் தமிழர்களின் நிகழ்வுகளைப் பதிவுகளாக்கியிருக்கும் சிறுகதைகளில், எழுத்தாளர்கள் ஜேர்மன் மொழிப் பிரயோகத்தை ஆங்காங்கு கையாண்டிருக்கிறார்கள். இது இலங்கையில் ஆங்கில, டச்சு, போர்த்துக்கீச மொழிகளின் பிரயோகம் கலந்திருப்பது போலத் தவிர்க்க முடியாததாகின்றது. இதனை ஏனைய புலம்பெயர் நாடுகளின் படைப்புகளிலும் காணமுடிகிறது.

கவிதைகளில், கட்டுரைகளில் முடிந்தவரை தமிழ்ப்பிரயோகத்தைக் கையாண்டாலும் சிறுகதைகள், நாவல்களில் பேச்சுவழக்கு வடிவத்துக்கு திசைச்சொற்களாக மாறிவரும் ஜேர்மன் சொற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்களனாகிறது. அதுவும் இங்கு பிறந்து வாழும் பிள்ளைகளின் உரையாடல்களில் இது யதார்த்தமாகின்றது. ஜேர்மன் சொற்களுக்கான தமிழ்மொழிபெயர்ப்பு அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ளது. அதேபோல எழுத்தாளர்களின் பெயர்களுக்குப் பக்கத்தில் அவர்கள் வாழும் நகரங்களின் பெயர்களை ஜேர்மன் மொழியில் இணைத்துள்ளோம்.

எமது இச்சிறுகதைத் தொகுப்புக்கு "நிறங்கள்" என்று பெயரிட்டுள்ளோம். இப்பெயர் இதிலுள்ள எந்தச் சிறுகதையினையும் குறிப்பதல்ல. ஒவ்வொரு எழுத்தாளர்களும் எண்ணத்தால், எழுத்தால் வெவ்வேறு நிறங்களைக் கொண்டவர்கள். இவர்களின் கதைகளின் கருக்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறங்கள். இவர்களின் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நிறங்கள். வாசிக்கும் உங்களின் பார்வைகளும் வெவ்வேறு நிறங்கள். நாம் வாழும் நாட்டினரின் எம்மீதான பார்வைகளும் வெவ்வேறு நிறங்கள்.

தாயகத்தில் வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து வந்து இங்கு வாழ்ந்து வரும் பதினான்கு எழுத்தாளர்களின் சிறுகதைகளின் தொகுப்பே "நிறங்கள்" என்ற இந்நூல். அந்த வகையில் இவர்களின் அந்தந்தப் பிரதேச வட்டாரச் சொற்களுடன் கூடிய சிறுகதைகளை வாசிக்கும்போது வாசகர்களுக்கு புதிய அனுபவமொன்றை ஈட்டித்தரும் என்பது எமது நம்பிக்கை.

ஆண்டுக்கொருமுறை ஒரு நூல் வெளியிடுவது என்பதனை எமது வேலைத்திட்டமாகக் கொண்டுள்ளோம். அந்தவகையில் ஆனி 2006இல் "ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்" என்ற நூலை வெளியிட்டோம். இலங்கை எழுத்தாளர் கலாபூசணம். பீ.எம்.புன்னியாமீன் அவர்களின் நூறாவது நூலான "புலம்பெயர் ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரக்கொத்து பாகம் - 1 என்ற நூலை பங்குனி 2007இல் வெளியிட்டோம். ஜேர்மனியில் வாழும் பதின்னான்கு சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து "நிறங்கள்" என்ற பெயரில் ஐப்பசி 2008இல் வெளியிடுகிறோம்.



இலங்கையில் தமிழ் இலக்கிய நூல் வெளியீட்டகங்கள் மிகவும் சொற்பமே! நம்பிக்கை தந்து கொண்டிருந்த வெளியீட்டகங்களும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் செயலிழந்துள்ளன. ஆனால் கண்டியில் உள்ள உடத்தலவின்னனையில் இருந்து 'சிந்தனை வட்டம்' என்ற வெளியீட்டகம் மூலம் 290க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு வைத்துள்ள கலாபூசணம் பீ.எம். புன்னியாமீன் அவர்கள் பாராட்டுக்குரியவர். அவரினூடாக எமது இந்தச் சிறுகதைத் தொகுப்பு வெளிவருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

எமது அன்பான வேண்டுகோளை ஏற்று எமது இந்நூலுக்கு வாழ்த்துரைகள் வழங்கிய, வீரகேசரியின் பிரதம ஆசிரியர் திரு. தேவராஜ் அவர்களுக்கும், பிரபல எழுத்தாளரும், கவிஞருமான கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஏறாவூர் அனலக்தர் அவர்களுக்கும், இந்நூலுக்கு அட்டை வடிவமைப்புச் செய்து வழங்கிய செல்வன். பு.பானுஸ்கந்தாவுக்கும், இந்நூல் வெளிவர எமக்குப் பலவகைகளில் உதவிய எழுத்தாளர் திரு.தில்லைநடராஜா (இலங்கைக் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்) அவர்களுக்கும் எமது நன்றிகள் பற்பல.

இந்நூல் தொடர்பான தங்களின் ஆரோக்கியமான விமர்சனங்களை எதிர்பார்த்தபடி நாங்கள்..........

*நூலாக்கக்குழு சார்பில்*

*திரு.வ.சிவராஜா*
தலைவர்
தமிழ் எழுத்தாளர் சங்கம் ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | வெள்ளைமனம் | வ.சிவராஜா |
| 2. | அரவணைப்பு | மேழிக்குமரன் |
| 3. | வேற்றுமை | ஜீவகன் |
| 4. | நான் அவனில்லை | அம்பலவன்புவனேந்திரன் |
| 5. | சாகாநினைவுகள் | சுந்தராம்பாள் |
| | | பாலச்சந்திரன் |
| 6. | தண்ணீரில் மீன் அழுதால் | பசுபதிராஜா |
| 7. | பொய்யாயினவெல்லாம் | வேணி கிருபாகரன் |
| 8. | பாதைமாறிய பயணங்கள் | கலைவாணி |
| | | ஏகானந்தராஜா |
| 9. | ஏக்கம் | இராஜேஸ்வரி சிவராஜா |
| 10. | சாமி தந்த வரம் | வரதன் |
| 11. | வேலை | புத்திசிகாமணி |
| 12. | ஆத்மதிருப்தி | மீனா சிவலிங்கம் |
| 13. | கண்ணீரில் கலந்த நினைவுகள் | ஜெயா நடேசன் |
| 14. | தாயும் மகளும் | புனிதமலர் இராஜேஸ்வரன் |




# நிறங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் எழுத்தாளர் சங்கம். ஜேர்மனி





# வெள்ளைமனம்

வ-சிவராசா Duisburg

சுகமான தூக்கத்தை விட்டெழுந்த நந்தினி.... அவசர.. அவசர மாக காலைக் கடன்களை முடித்துக்கொண்ட போது அவளது கணவனும் எழுந்து தனது கடன்களை முடித்துக்கொண்டு காலை உணவுக்குத் தயாரானான்.

கோப்பி தயாரித்துக்கொண்டிருந்த நந்தினிக்கு உதவியாகப் பாணில் பட்டரும் ஜாமும் பூசி வைத்தான். அமைதியான அந்தக் காலை நேரத்தில் இனிய பேச்சுக்களோடு இருவரும் உணவு உண்டுகொண்டிருக்க கடிகாரம் ஆறு தடவை அடித்து அவசரப் படுத்தியது.

நந்தினி உசாரானாள். எட்டு மணிக்கு வேலையில் நிற்க வேண்டிய மிசேலுக்கு ஒரு மணி முன்னரே வேலையில் நிற்க வேண்டிய நந்தினியின் அவசரம் புரிந்ததும் தானும் விரைவாக முடித்துக் கொண்டான்.

ஐரோப்பியக் கலாச்சாரத்தில் வழமைபோலவே நந்தினி கணவ னைக் கட்டி அணைத்து முத்தமிட்டு அன்பைப் பகிர்ந்துகொண்டு அவசரமாக விடைபெற்று வெளியேறினாள்..

கதவைத்திறந்து வெளியே வந்தவளின் முகத்தில் குளிர் சில்லிட்டது. நிலம் முழுவதும் பனிகொட்டியிருந்தது. பூமாதேவிக்குப் புது வெள்ளைப் பட்டாடை சாத்தியது போல் பசுமையாக இருந்தது.

தெருமின்விளக்குகள் இலேசாக ஒளியைப் பரப்பிக் கொண்டி ருந்தன. தெருவில் விரைந்து சென்றுகொண்டிருந்த வாகனங்களைப் போலச் சிலர் விரைவாக நடந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தியாக நந்தினியும் நடந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதோரம் குளிர் சிலிர்த்தாலும் காற்றில் கலந்து வந்த பறவைகளின் சத்தமும் வெள்ளி முகம் காட்டிவந்த பகலவனின் புத்தொளியும் கண்டு பூரித்து நடந்தாள். பஸ்வண்டித் தரிப்பிடத்தை அடைந்த நந்தினி தான் செல்லவேண்டிய வண்டி வரும்வரை சில நிமிடங்கள் காத்து நின்றாள்.

உறுமலோடு விரைந்து வந்து நின்ற அந்த வண்டியில் ஏறிய நந்தினி ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு தனது வியட்நாமியத் தோழியை தேடினாள்.

கண்கள் அங்குமிங்குமாய் அலைந்ததே தவிர அவளைக் கண்டுகொள்ளவில்லை. பாடசாலை மாணவர்களால் நிறைந்திருந்த வண்டி கலகலப்பால் குலுங்கியது.

வெள்ளை மனம் படைத்த வெள்ளை உள்ளங்களின் காதல் நெருடல் சந்தோசம் புன்னகை ஆகா! என்ன ஆனந்தம்? அவர்களின் வெப்பக் காற்றில் நந்தினியும் தன் குளிரை மறந்திருந்தாள். அந்த இளம் மாணவர்களோடு பிரயாணம் செய்வது அவள் மனதுக்கு எப்போதும் சுகமானதாக இருந்தது.

இரண்டு நாட்கள் நகர்ந்தபின்....அன்று கிம்சூ வேலைக்கு வந்தாள். நந்தினி முகம் மலர்ந்து சுகம் விசாரித்தாள். அவளும் தன் உடல் நிலைபற்றி நந்தினியோடு அளவளாவி மகிழ்ந்தாள்.

தொழிற்சாலையின் அலுவலகப்பிரிவில் கடந்த ஒருவருடத் திற்கும் மேலாகக் கணனித்துறையில்பணிபுரிவதால் இருவருக்கு மிடையே நட்பு மலர்ந்திருந்தது. குறிப்பாக ஆசியப் பெண்மணி களாக இருந்ததால் நட்பு வேரூன்றி நின்றது. நல்ல நட்பு....நல்ல பெண்மணிகள் ஆனால்.......பார்ப்பவர் கண்களுக்கு அவர்களின் குறை தெரிந்தது.

நந்தினி ஒரு கண்பார்வையை மட்டும் கொண்டிருந்தாள். வியட்நாம் பெண்மணியான கிம்சூ....ஒரு கால் ஊனமானவள். அதாவது எங்கட தமிழில் அவள் நொண்டி..கிம்சூ பிறப்பிலேயே





அந்தக் குறையைக் கொண்டுவந்தவள். ஆனால் நந்தினியின் கதையோ வேறு...

நந்தினியும்...கிம்சூவும் நல்ல நண்பிகள். உள்ளம் திறந்து பேசக் கூடிய அளவுக்கு உண்மையாக நட்புக்கொண்டிருந்தனர். இது மட்டுமல்ல இருவரும் மிகவும் கெட்டிக்காரிகள். கடமை கண்ணியம் கட்டுப்பாடுடையவர்களாக உழைத்துப் பாராட்டுப் பெற்றவர்கள்.

கம்பனி வளர்ச்சிக்குப் பாடுபட்டு உழைக்கும் பெண்மணிகள் என்று பலராலும் பாராட்டுப் பெற்ற இவர்கள் ஆசிய நாட்டுப் பாரம்பரியம் கலாச்சாரம் பண்பாடு விருந்தோம்பலில் கூடிப் புகழ் நாட்டி நின்றுவரும் இளம் பெண்கள். அன்றும் இருவரும் வேலை முடிந்து பஸ் வண்டியில் ஏறிக் கொண்டனர்.

வழமைபோலவே இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டனர். உடன்பிறப்புக்கள், உறவுகள், சொந்த நாடு, இனம், மொழி என்று ஒரு வலைப்பின்னலைப் போல பேசிக்கொண்டிருந்தனர். சற்றுக் களைத்திருந்த நந்தினி சற்றுக் கண்ணயர கிம்சூவும் அவள் தோளோடு சாய்ந்து தூங்கிவிட்டாள்.

நந்தினி கண்ணயர்ந்தாளே தவிர மனத்திரையில்....பழைய நினைவுகள் படமாக ஓடிக்கொண்டிருந்தன. ஊர் நினைவுகள் தொடர் நாடகம் போல்.....இளம் வயதுப் பாடசாலை நினைவுகள் ஊஞ்சலாடின....

கோவில் திருவிழா நினைவுகள்....காதல் அரும்பிய கல்லூரி நாட்கள்.....காப்பாற்ற முடியாத காதல் கதைகள்....கடிந்து பேசிய ஆசிரியையின் முகம்...,மாணவ மாணவிகளின் மட்டமான பகிடிகள்.....வெட்கமும் வேதனையும் தந்தவலிகள்....

அதனைவிட மேலாக கண்ணன் மேல் வைத்திருந்த காதல்! ....கண்ணனும் நந்தினியும் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டி ருந்த போது காதல் உணர்வு துளிர்த்தது.

பாடசாலையின் திறமையான மாணவர்களில் இவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக் கிண்ணங்கள் இருவரிடமும் நிறைந்தன. பேச்சுப் போட்டிகளிலும் ஏனைய கலை நிகழ்வுப் போட்டிகளிலும் கணக்கற்ற பரிசில்கள் குவிந்தன....

இவையெல்லாம் ஒருவர்மேல் ஒருவர் காதல் வளரவும் காரண மாகின என்றுகூறலாம்.. மெல்லத் துளிர்த்த காதல் அரும்பு கட்டிய போது ஆசை இறக்கை கட்டிப் பறந்தது. பார்க்க வேண்டும் என்று எண்ணம் வரும் போதெல்லாம் எங்கே சந்திப்போமென ஏங்கினர்..

பல தடைகளைத் தாண்டி கோவில் திருவிழாக்கள் சினிமாப் படமாளிகைகள் நூல் நிலையம் எனக் கால்கள் ஓடின..காதல் வளர்ந்து பெரிய விருட்சமாகும் என்று கனவில் மிதந்தனர். அன்பு இருவரையும் ஆட்டிப் படைத்ததும் மெல்லிடையாள் நந்தினி கண்ணனின் கைகளை இறுகப்பற்றினாள்.

கண்ணன் தைரியத்தோடு எந்த எதிர்ப்பு வந்தாலும் நாங்கள் ஒன்றாய்ச் சேருவோம் இல்லையானால் ஒன்றாய் இறப்போம் என்று சொன்னான்..

நந்தினியும் நம்பிக்கையோடு நடந்தாள். கண்ணன் நந்தினி காதல் விடயம் பெற்றோரின் காதில் விழுந்தது..பூகம்பம் வெடித்துச் சிதறியது. சாதிப்பேய் குறுக்கே தாண்டவம் ஆடியது.

பெற்றோர் பேயாக மாறினர். பாழாய்ப்போன சமுதாயத்தினர் பெற்றோருக்கு ஆதரவாகினர். காதலுக்குச் சமாதி கட்டுவதே அவர்களின் முடிவாகி நின்றது. எதிர்த்துப் பேசியறியாத இளம் தலைமுறையினர் இரகசியமாகக் காதலரைச் சேர்த்து வைக்க முற்பட்டனர். காலத்தை எதிர்பார்த்து காத்து நின்றனர்.

காலம் ஓடியது கண்ணனின் தந்தை படித்தவர். பெரிய பணக்காரர். ஊரில் பெரிய புள்ளி..அள்ளி வீசிய பணமும் கண்ண னின் கல்வித்திறனும் சேர்ந்து அவனுக்குப் பெரிய உத்தியோகத் தைப் பெற்றுக் கொடுத்தது.





ஆனால் ஏழைக் குடும்பத்து நந்தினியோ அருகிலுள்ள சிறுவர் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக வேலைக்குச் சேர்ந்து கொண் டாள். மனம் கலங்கிய நந்தினி தான் மணக்கப் போகும் கண்ணன் பெரிய வேலையில் இருப்பதை எண்ணிச் சற்று மகிழ்ச்சியடைந்தாள்.

கண்ணன் நந்தினியைத் தேடியபடியே இருந்தான்.ஆதலால் அவள் நிம்மதி கொண்டாள். அவர்களின் காதல் ஊரார் கண் மறைவில் வளர்ந்து கொண்டேயிருந்ததனால் நந்தினி வெற்றிக்கான நாளை எதிர்பார்த்தபடியே வேலைக்குப் போய்க்கொண்டிருந்தாள்.

கால நகர்வில் அன்று காலை பத்து மணி. பாடசாலையில் சிறுவர்கள் அங்குமிங்குமாக ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர். பல வண்ணச் சிறகடித்த வண்ணத்துப் பூச்சிகள் தன் முன்னே பறந்தடிப்பது போல் ஓர் ஆனந்தக் களிப்பில் நந்தினி நின்றிருந்தாள்.

கள்ளங்கபடமில்லாத வெள்ளை உள்ளங்கள் துள்ளித்திரி வதைக் கண்டு அவள் கண்களே சிரித்தன. தன்னை மறந்து நின்றாள். ஒரு நொடி...ஒரேயொரு நொடி எங்கோ விமானம் இரைவது போன்ற பிரமை குண்டு விழுந்து வெடித்துச் சிதறியது. காதுகளைப் பொத்தக் கை எடுத்தவள்.....பொத்தென்று நிலத்தில் சரிந்து விழுந்தாள்...மீண்டும் எழுந்து இரத்தம் வடிய..வடிய....குஞ்சுகளைத் தேடிப் பாதுகாத்தாள்.

அவளது காதுகள் செவிடானது போல் அடைத்திருந்தன. சிறிது நேரத்தின் பின் ஐயோ.!...அம்மா!..என்ற அலறல் ஒலி....கடவுளே எங்களைக் காப்பாற்ற மாட்டாயோ.....என்ற அவலக்குரல்கள் வானத்தைத் தொடுமளவுக்கு ஓங்கி ஒலித்தன.

நந்தினியின் கண்களிலும் தாரை..தாரையாய் நீர் வடிந்தது... அது வெறும் கண்ணீரல்ல..செந்தீக்குழம்பு ஆறாய்ப் பாய்ந்தது. எரிந்த கண்ணைப் பொத்திப் பிடித்தவள் மற்றக் கண்ணால் பார்த்து ஓவென்று அலறினாள்.

வண்ணச்சிட்டுக்கள் சிறகொடிந்தது போலச் சிதறிக்கிடந்தன. பிஞ்சு உடல்கள் வெறும் பிண்டங்களாகப் பிய்த்தெறிந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பெரும் ஒப்பாரி வைத்தனர் ஆசிரியர்கள். ஆசிரியை ஒருத்தி நந்தினியின் பக்கத்திலேயே மண்டை பிளந்து.....மூளை சிதறி.... கோரமான நிலையில்.....உயிர்கள் பல ஒரு நொடியில் பறிக்கப் பட்டிருந்தன..

ஆனால் ......

நந்தினிக்கு ஒரு கண்தான் பறிபோயிருந்தது. இன அரக்கர்களின் கொடுமைக்கு அளவே இல்லையா....ஆயிரம் பல்லாயிரம் உயிர் பறிப்புக்களிடையே இப்படியாகப் பள்ளிப்பிள்ளை களும் விடுவிக்கப்படவேயில்லை என்று நந்தினி குமுறியழுதாள்.

குழந்தைகளாகத் தன் மடியில் விளையாடிய அந்தப் பிஞ்சு மனங்களை நினைத்தபடி வைத்தியசாலையிலிருந்து புலம்பினாள். ஒரு கண்ணை இழந்த நந்தினி மீண்டும் சிறுவர்களோடு சேர்ந்து வாழ வந்த போது சிலர் அவளைக் குருடி என ஏளனமாகவும் அனுதாபத்தோடும் பார்த்தனர்.

இந்த விடயமெல்லாம் அறிந்த கண்ணன் ஒரு கணம் தடுமாறிப் போனான். நந்தினி குருடியா....அப்படியென்றால்.....நான் இனி எப்படி... அவளோடு வாழ முடியும்... அழகு படிப்பு பணம் பதவி எல்லாம் இருந்து கொண்டும் ஒரு குருடியைக் கட்டினால் என்னுடைய கௌரவம் என்னாவது!..

என்னுடைய எதிர்காலம் என்னாவது என்று எல்லாம் சுய நலப்புத்தி..அற்ப ஆசைகளால் இவன் மனம் அலைந்தது. இறுதியில் நந்தினியை மறக்கவேண்டும்..அவள் காதலைத் துறக்கவேண்டும் என முடிவெடுத்தான்.

அப்போது தான் அழகாக கௌரவமாக வாழமுடியும் என்று கோழைத்தனமான முடிவை எடுத்தான்.சில காலத்தின் பின் நந்தினிக் குத் தெரியாமலே தன் பெற்றோரால் தீர்மானிக்கப்பட்ட அழகான பணக்காரப் பெண்ணையே மனைவியாக்கிக்கொண்டான்.





நந்தினி அவன் மீது வைத்திருந்த காதல் அன்பு யாவும் காற்றோடு கலைந்தன. தனது கண் ஒன்றே காதலுக்கு முடிவு கட்டியதை நினைத்து வருத்தப்பட்டாள். இப்படி ஒரு துரோகத்தை ஆண்கள் சாதாரணமாகச் செய்யத் தயங்கமாட்டார்கள் என்ற உண்மையைப் புரிந்து வேதனைப்பட்டாள்.

ஆனால்... தான் கொண்ட உயிர்க்காதலை எண்ணிக் குமுறி னாள். இனித்தனக்கு வாழ்க்கையே இல்லை எனத்துயரப்பட்டாள்.

மகளின் துயர் கண்டு பெற்றோரும் கலங்கித் திருமணப் பேச்சை எடுத்தனர். வந்தவர்கள் அத்தனைபேரும் கண்ணைக் குத்திக் காட்டினர்.

சிலர் இரண்டாந்தாரமாகக்கூடக் கேட்டார்கள் இன்னும் சிலர் வயது தாண்டியவர்கள்கூட அவளை மணம் முடிக்கக் கேட்டார்கள். ஆனால் நந்தினியோ தனது அறிவு ஆற்றலால் அவளின் பாதை புதிய உலகை நோக்கித் திரும்பினாள்....

வெளிநாட்டில் வாழ்ந்த சகோதரன் நந்தினியை அழைத்துக் கொண்டான். தான் படிப்பித்த அந்தக் குழந்தைகளையும் தனது பெற்றோரையும் உறவுகளையும் ஊரையும் ஏன் நாட்டையும் விட்டுப்பிரியமுடியாத மன நிலையில் போராட்டம் மனக்கஸ்டம்.... தான் இழந்த கண்ணுக்குப் பரிகாரம் தேடிவிடலாம் என்ற ஆசையு டனும் நம்பிக்கையுடனும் வெளிநாடு வந்தாள்.

சகோதரியின் வாழ்வு இருண்டுவிடக் கூடாதென்ற நம்பிக்கை யில் இங்கும் பல தமிழ் மாப்பிள்ளைகள் பார்த்த போது எல்லாருமே அவளின் கண்ணைக் காரணங்காட்டித் தட்டிக்கழித்துவிட்டனர்.

நந்தினி மிகவும் வேதனைப்பட்டாள் வாடி நின்றாள். வந்த நாட்டிலும் ஈரமுள்ள இதயங்கள் இல்லையா!..அல்லது ஆசா பாசங்கள் அன்பு பாசம் பரிவு இரக்கம் என்பது இங்குள்ள நம்மவர் மனதிலும் இல்லாமல் போய்விட்டதா!.. என்று சிந்தித்துப்பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒன்றைப் புரிந்து கொண்டாள். வெள்ளையர்களில் பெரும்பான்மையினர் பணம் பதவி சாதி மதங்களைக் காதலிப்ப தில்லை..அன்பான உள்ளங்களையே நேசிப்பதையே கண்டு மகிழ்ந்திருக்கிறாள்.

காலம் மெல்ல உருண்டு நந்தினியின் வயது கால் நூற்றாண்டு அதாவது இருபத்தைந்தாவது பிறந்த நாள் இனிய நந்நாள் இனிய நினைவோடு பிறந்தநாள் விழா. இவ்விழாவில் தனது ஜேர்மனிய நண்பர்களையும் அழைத்திருந்தாள். எல்லோரும் வாழ்த்துக்களைப் பரிமாறி பரிசுகளைக் கொடுத்து மகிழ்ந்தனர்.

அங்கே வந்திருந்த ஜேர்மனியரான மிசேல் அழகான மலர்க் கொத்தை நந்தினியிடம் கொடுத்து அவளை முத்தமிட்டு இதயபூர் வமான பிறந்தநாள் வாழ்த்துக்கள்!....என்றான். கூடியிருந்த சிலர் ஆச்சரியத்தோடு பார்க்க இருவரும் வெட்கத்தால் தலைகுனிந்தனர். மீண்டுமாய் நான் நந்தினியிடம் தமிழ் படிக்கிறேன்..... எனக் கொச்சைத் தமிழில்......

"நான் விரைவில் நந்தினியை மணம் முடிக்கப் போகிறேன்" என்று பகிரங்கமாகத் தமிழிலும் டொச்சிலும் கூறியதுடன் நாம் இருவரும் எங்களைப்பற்றி அறிந்து புரிந்து கொண்டுதான் இந்த முடிவை எடுத்துள்ளோம் என்றதும் நந்தினி வெட்கத்தால் அறைக்குள் ஓடிவிட்டாள்.

இதைக்கேட்ட சிலர் மௌனமாகினர்..சிலர் முகம் மாறி ஏதோ... கிசு கிசுத்தனர். தமிழ் மட்டுமல்ல தமிழரையும் ஓரளவு புரிந்து கொண்ட மிசேல் நந்தினியின் சகோதரனும் உங்களைப் போலதான் இருக்கிறார். அவர் விரும்பாமலிருக்கலாம் ஆனால் திருமணம் செய்யும் இரு மனங்களும் பூரண விருப்பத்துடனே முடிவெடுத் திருக்கிறோம் என்று சொன்னதோடு எல்லோருடனும் சேர்ந்து உணவு உண்டுவிட்டு நன்றி கூறி விடைபெற்றான்.





அது கோடைகாலம் நமது ஊரைப்போல வெய்யிலடித்த இனிய பொழுது. நந்தினியின் திருமணம் நடந்தது. உறவுகளும் நண்பர்களுமாக சுமார் ஐம்பது அறுபது பேர் கூடியிருந்தனர். மிகவும் எளிமையான முறையில் கலியாண விழா திட்டமிட்டபடி நடந்தேறியது.

மிசேலின் பெற்றோர் மிகவும் குதூகலத்தோடு நந்தினியைத் தமது மகளாகச் சுவீகரித்துக்கொண்டனர். தமது அன்பையும் நிறைந்த ஆசியையும் கூறி அவர்களைக் கௌரவப்படுத்தினர். அவர்கள் நேயம் மிக்க மனிதர்களாக நடந்துகொண்ட விதம் கண்டு நந்தினி உளம் மகிழ்ந்தாள்.

தனது ஊனத்தை மறந்தாள். உலகத்தைப் பார்த்தாள்.!....பஸ் வண்டி சட்டென நிறுத்தப்படவே திடுக்கிட்டெழுந்த நந்தினி கிம்சூவும் தன் தோளில் சாய்ந்து தூங்கியதைக் கண்டாள். மெல்லத்தட்டி மறக்காதே சனிக்கிழமை வந்துவிடு!...என்று கூறவே அவள் விடைபெற்றாள்.

அன்று சனிக்கிழமை காலைவேளை..சில்லுப்பூட்டி ஓடும் சிறுமிபோல நந்தினி வீட்டுக்குள் ஓடிக்கொண்டிருந்தாள். மிசேலும் ஓடி ஆடி அவளுக்கு உதவிபுரிந்தான். சிறிது நேரத்தின் பின்பு மிசேல் வெளியே சென்றுவிட்டான்.

நந்தினியோ பம்பரமாகச் சுழன்று வேலைகளை முடித்துவிட்டு சாப்பாட்டு மேசையை அலங்கரிப்பதும் மணிக்கூட்டைப் பார்ப்ப துமாகத் தவித்தாள். கிம்சூ குடும்பத்தவர்கள் வரும் நேரமாகிவிட்டது இன்னும் மிசேலைக் காணவில்லையே!...விருந்தினர்கள் வரும் போது நான் தனியாகவா....சீ.....அவள் தடுமாறும் போது அழைப்பு மணியும் ஒலித்தது..

நந்தினி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு கதவைத் திறக்க கிம்சூவின் கணவரோடு மிசேல் கதைத்தபடி பின்னே....கிம்சூ சிரித்தபடி நின்றாள். நந்தினி தன் கணவரே அழைப்பு மணியை ஒலிக்க வைத்து வேடிக்கை செய்ததைக்கேட்டு சிரித்தபடி விருந்தினரை வரவேற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு குடும்பத்தவர்களும் அன்பால் கூடியிருந்து தாயகத்து அறுசுவை உணவை உண்டு களித்தனர். அந்தச் சாப்பாட்டின்போது தான் கிம்சூ தனது நாட்டைப் பற்றியும் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினாள்.

தனது சொந்த நாடான வியட்நாம் மீது அமெரிக்கா குண்டு வீசி அழித்தபோது நாட்டின் சகல வளங்களும் அழிக்கப்பட்டது. மண் நாசமானது மட்டுமல்ல மனித வாழ்வும் சீரழிந்தது. பிறக்கும் பிள்ளைகளில் கூட பரம்பரை பரம்பரையாகப் பாதிப்புத் தொடர்கிறது.

எனது பாட்டி...எனது அம்மா...இப்போது நான்.... பார்த்தீர்களா போரின் வலியின் கொடுமை என்று சொல்லித் தனது முடமான காலைக் காட்டினாள். என்னவோ எல்லோர் கண்களும் இமைக்க மறந்து நின்றன.

ஆனால் கிம்சூவின் கணவன்.... மிகத்தெளிவாக நான் தொலைக்காட்சி புத்தகங்கள்,உட் பத்திரிகைகள் மூலம் வியட்நாம் போரைப்பற்றி எல்லாம் அறிந்திருக்கிறேன். நன்கு படித்துத் தெளிந்திருக்கிறேன். எங்கள் திருமணத்தின் பின்பு எனக்கும் கிம்சூவிற்குமாகப் பிறக்கவிருக்கும் குழந்தை அந்தப்போரின் வலியோடு வடுவோடு பிறக்காமலிருக்கு இன்றைய விஞ்ஞான உலகத்தில் எல்லா வழிகளையும் கண்டு வெற்றி பெற்றிருக்கின்றேன்.

இப்போ எங்கள் குழந்தை வலி தெரியாமல் வளர்கிறது. வடுத்தெரியாமல் பிறக்கும் என்று சொல்லி கிம்சூவின் வயிற்றைத் தடவி அவளை முத்தமிட்டுக்கொண்டான். அதுவரை ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்த மிசேல் குழந்தைபோல என்னுடைய நந்தினியும் மிக விரைவில்!... இரண்டு கண்களாலும் என்னைக் கட்டியாளப் போகிறாள் என்று சொல்லிக் குதூகலிக்க, நந்தினியும் கணவனைக் கட்டியணைத்து முத்தமிட்டுச் சிரித்தாள். ஒரு கணம் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.... தன் முன்னே இருக்கும் இவர்கள் யார்!.... இரத்த பாச உறவுகளா!....அல்லது சொந்த பந்தங்களா!.. இவர்கள் யார்!...கடவுளின் அவதார புருஷர்களா....





அல்லது என்னுடைய கணவனும் கிம்சூவின் கணவனும் சாதாரண மனிதர்கள்தானா....சிந்தித்தாள். இவர்களின் அன்பைப் பண்பை மனித நேயத்தை எந்த அளவுகோல் கொண்டு அளவிடுவது என வியந்தாள். ஆச்சரியப்பட்டாள்.

ஆனந்தக் கண்ணீர் அவள் கண்களிலிருந்து பொல.. பொலவெனச் சொரிய.....கிம்சூ அவளின் கண்ணீரைத் துடைத்து அவளின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள்.

சிறிது காலத்தின் பின்பு ஒரு கோடைகால விடுமுறையில் மீண்டும் இரு தம்பதிகளும் சந்தித்தனர். விமான நிலைத்தில் கிம்சூ தன் கணவருடன் தன் தாய் நாட்டுக்குப் போவதற்காக வந்திருந்தாள்.

சர்வதேச விமான நிலையம் என்றபடியால் சனம் நிறைந்து வழிந்தது. அந்த நெருக்கடியில் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த நந்தினியை கண்டுகொண்டாள். நந்தினியும் மிசேலும் கைகோர்த்த படி நின்றதைப் பார்த்ததும் கிம்சூ தன்னையறியாமலே நந்தினி என்று பலத்த சத்தமாகக் கூப்பிட்டுவிட்டாள்.

கறுப்புக்கண்ணாடியும் சட்டெனத்திரும்பியது. கிம்சூவும் மகிழ்ச்சியோடு ஓடிப்போய்க் கட்டியணைத்ததும் நந்தினி அன்பில் திணறினாள். அவளோ...இந்தக்கண்ணாடியை இன்னுமா அணிந்திருக்கிறாய்!.. .எனத் தானே கழற்றினாள். கண்பார்வை பெற்ற அவளின் முகத்தைப் பார்த்த கிம்சூவின் குதூகலத்தை மிசேல் மட்டுமல்ல குழந்தையோடு விளையாடிக்கொண்டிருந்த அவள் கணவனும் கண்டு ரசித்தான்.

நந்தினி தன் வாழ்வுக்கு ஒளி தந்த....தன் கண்களுக்கு ஒளி தந்த மிசேலைப் புகழ்ந்து குதூகலித்தாள். தெய்வத்துக்கு நிகராகப் போற்றினாள். மிசேலின் உதவியால்தான் இன்று இரண்டு கண்களா லும் உலகத்தைப் பார்ப்பதாகவும் தான் இருளில் தவித்த உலகத் தைக் காட்டுவதற்கு அழைத்துப் போவதாகவும் சொல்லிப் பெருமைப் பட்டாள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிம்சூவும் தாங்கள் குடும்பமாகத் தாயகம் போவதற்கு வந்திருப்பதாகக் கூறி விரலால் சுட்டினாள்.

இரு குடும்பத்தவர்களும் பயணப் பொதிகளையும் விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு அருகே இருந்த கோப்பிக்கடைக்குள் புகுந்து கோப்பியும் அருந்தி சிற்றுண்டிகளும் உண்டுவிட்டு வெளியே வந்து பயண அதிகாரிகளிடம் தமது பயணச்சீட்டுக்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்த வேளையில்

நான்கு தமிழர்களை விலங்கிடப்பட்டபடி பொலிசார் அழைத்து வந்து அவர்களது கடவுச்சீட்டுக்களைப் பரிசோதனை செய்தனர். அப்போது அவர்களில் ஒரு தமிழர் அவளை உற்றுப் பார்த்தார். அவளோ கண்டுகொள்ளவில்லை. மீண்டும் அவளையே பார்த்த போது அவளும் நோக்கியபோது தனது பழைய காதலன் கண்ணன் போல் என்று நினைத்தாள். மீண்டும் பார்த்தாள் தாடி நீண்ட தலைமுடி வாடிய முகம் பழைய உடைகள்... கண்ணன் தான்...என அடையாளம் கண்டுகொண்டாள்.

அதிர்ச்சி அடைந்தாள்..எப்படி.....எப்படி...என அவள் மனம் துடித்தது. மௌனமாக நின்றாள்....கண்ணன் தன்னை ஏமாற்றிய பழைய நினைவுகளும் அவள் கண் முன்னே வந்து போயின...கண்ணனும் அந்த மூன்றுபேரும் பலவந்தமாக விமானத்தில் ஏற்றப்பட்டார்கள்.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த சில தமிழர்கள், குறுக்கு விசாரணையில் ஈடுபட்டு அவர்கள் நாலுபேரும் அடிதடியிலும், போதைப் பொருள் சம்பந்தமாகவும் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இப்போ திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்னும் செய்தி நந்தினிக்கும் எட்டியது.

சோதனைகள் வேதனைகள் ஏமாற்றங்களைச் சுமந்த அவள் மனம் நோகவே இல்லை.. தனது உறவுகள் தனது நாடு மேலாக தான் படிப்பித்த அந்த மாணவ மணிகளை பார்க்கப் போகிறேன் என்ற அவா!...





மேலாக ஒற்றைக்கண்ணோடு வெளிநாடு வந்த நான் இப்போ இரு கண்களோடும் எனக்குப்பிடித்த கணவனோடும் என் தாய் நாட்டையும் என் சொந்த பந்தங்களைப் பார்க்கப் போகிறேன் என்ற பெருமிதமும் ஆவலும் அவளின் மனதைப் பெருமிதப் படுத்தியது.

மிசேலும் நந்தினியும் கைகோர்த்தபடி விமானத்துக்குள் நுழைகிறார்கள்..சிறிது நேரத்தின் பின் எயர் லங்கா விமானம் உயர..உயரப் பறந்து மறைந்தது...அவளது நினைவுகள் முழுவதும் தனது கண்பற்றியே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவணைப்பு

## மேழிக்குமரன்-Soest

ட்றிங்..... ட்றிங்..... ட்றிங்..... ட்றிங்.....

இரண்டாவது தடவை எலாம் அடிக்குது. முதலாவது தடவை எலாம் அடிச்சது எனக்கு கனவில் கேட்டது போல் இருந்தது. இதுவும் என்ரை அரைத்தூக்கத்திலதான் கேட்குது. முதலாவது அப்பாவுக்கு, இரண்டாவது அம்மாவுக்கு. மூன்றாவதுதான் எனக்கு. அதுவரைக்கும் நான் நித்திரை கொள்ளலாம்.

இந்த எலாம் அடிப்பது எனக்கு விருப்பமில்லை. சில வேளையளிலை நான் அம்மாவுடனும் அப்பாவுடனும் விளையாடிக் கொண்டிருக்கும்போது இந்த எலாம் அடித்துக் குழப்பிவிடும். அப்போதுதான் நான் விளையாடியது கனவு என்று தெரியும். கனவில் மட்டும்தான் என்னால் அப்பா அம்மாவுடன் விளையாட முடியுது.

நேற்று முழுவதும் சரியான Schnee (பனி) கொட்டியது. இரவு படுக்கப் போகும்போதுகூடப் பார்த்தேன் சரியான Schnee. வெள்ளைப் பூக்களை யாரோ வானத்திலிருந்து கொட்டுகிறார்கள் என்று நான் நினைப்பதுண்டு. இன்று Schuleவுக்குப்(பாடசாலை) போகும்போது நான் நேற்று செய்த பனிமாமாவை பார்த்துவிட்டுத் தான் போகவேண்டும்.

Winterஇல் (குளிர்காலத்தில்) சினே Schnee(பனி) கரையும் வரை அந்தப் பனிமாமாதான் எனக்கு நல்ல நண்பர். ஒவ்வொரு நாளும் Schule (பாடசாலை)யால் வரும்போது அவரை அழகு படுத்திப் பார்த்து விளையாடிவிட்டுத்தான் வருவேன். எனக்குச் சூரியனைப் பிடிக்காது. அவர் என்னுடைய பனிமாமாவை கரைத்துக் கொன்று விடுவார்.





என்னுடைய தலை Deckeக்கு(படுக்கைப்போர்வை) வெளியே இருப்பதால் குளிர் முகத்தில் அடிக்கிறது. அதோட அம்மா Wohnzimmer(விறாந்தை) Lichtரை(விளக்கு) எரிய விட்டிருக்கிறா. கதவுக்குள்ளால அந்த வெளிச்சம் என் கண்ணைக் கூசச்செய்யுது. அம்மா அங்கையும் இங்கையும் நடந்து திரியிற சத்தம் எனக்கு இந்த நேரத்திலை விருப்பம் இல்லை. காதுக்குள்ளை என்னவோ செய்யுது.

Deckeவாலை (படுக்கைப்போர்வை) தலையையும் சேர்த்து மூடிக்கொண்டு காலை முடக்கி குடங்கிக் கொண்டு படுக்கிறதிலை எனக்கு விருப்பம் அப்பதான் அப்பாவும் அம்மாவும் நானும் விளையாடிற கனவு வரும். தலையை மூடிக்கொள்ளுறன். நித்திரை வந்தும் வராதமாதிரிப் படுத்துக் கிடக்கிறன்.

யாரோ எனது Deckeவை(படுக்கைப்போர்வை) விலத்தி எனது தலையைத் தடவுகிறார்கள். எனது கன்னத்தில் ஒரு முத்தம். வேறுயார்? எனது அம்மாதான். அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொள்கிறேன். அம்மாவின் கன்னதில் முத்தமிடுகிறேன். எனக்கு அழவேண்டும் போலிருக்கிறது.

“அம்மா இந்த Wochenende வுக்கும் (வாரவிடுமுறைக்கும்) நீங்கள் வேலைக்குப் போறியளோ. வேண்டாம் அம்மா. வீட்டிலை இருங்கோ.”

“இல்லைடா மயூரி அம்மாவுக்கு வேலை. வேணுமெண்டா அபர்ணா வீட்டிலை கொண்டு போய் விட்டிட்டுப் போறன் அங்கை அபர்ணாவோட விளையாடு.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் அம்மா நீங்கள் வீட்டிலை நில்லுங்கோ."

"மயூரி உனக்கு எட்டு வயதாகுது. நீ ஒண்டும் சின்னப்பிள்ளை இல்லை. அம்மாவுக்கு லீவு இல்லை."

அப்ப மத்தியானம் வேலையாலை வந்து மற்ற வேலைக்குப் போகாம நில்லுங்கோ. அம்மா Bitte (தயவுசெய்து)...... அம்மாவின் கன்னத்தில் கொஞ்சினேன்.

"இல்லை மயூரி நான் அந்த வேலையை சனி ஞாயிறிலை மட்டுந்தான் செய்யிறன். அதுவும் கையிலை காசு தருவினம். நான் போகாட்டி வேற ஆரையும் எடுத்துப்போடுவினம். வாற சனிக் கிழமை நான் வரேக்கை பிள்ளைக்கு ஒரு மோதிரம் வாங்கிக் கொண்டு வாறன். அபர்ணாவின்ரை பிறந்தநாளுக்குப் போகேக்கை நீ புது மோதிரம் போட்டுக் கொண்டு போகலாம்."

"எனக்கு மோதிரம் வேண்டாம் நீங்கள் நில்லுங்கோ. ஒருநாளும் என்னோட நீங்கள் நிக்கிறேல்லை." எனது கண்களில் கண்ணீர்..................

"மயூரி நான் சொன்னாக் கேக்க வேணும். எனக்கு றெயினுக்கு (தொடருந்து) நேரமாச்சு நான் போட்டு வாறன்."

அம்மா போகிறா. நான் Deckeவைப் (படுக்கைப்போர்வை) போர்க்க மனமில்லாமல் படுக்கையில் கிடந்து அழுகிறேன். இது ஒவ்வொருநாளும் எங்கட வீட்டிலை நடக்கிறதுதான். இனிமேல் அம்மாட்டை கேட்கக்கூடாதெண்டுதான் நினைப்பன். ஆனால் மனம் கேளாது.

அப்பாவுக்கும் ஒவ்வொருநாளும் இரண்டு வேலை. அம்மாவுக் கும் ஒவ்வொருநாளும் இரண்டு வேலை. Wochenende வுக்கும் (வாரவிடுமுறைக்கும்) இரண்டு வேலை. வீட்டிலை என்னோட நிக்கி றேல்லை. நான் பாவம்தானே. சிலநேரத்திலை இருண்டா





எனக்குப் பயமா இருக்கும். அழுகை அழுகையா வருது. கண்ணைத் துடைச்சுக் கொள்ளுறன்.

ட்றிங்..... ட்றிங்..... ட்றிங்..... ட்றிங்.....

நான் எழும்ப வேண்டிய மூன்றாவது எலாம் அடிக்குது. நிப்பாட்டிவிட்டு Deckeவைப் (படுக்கைப்போர்வை) போத்துக் கொண்டு படுக்கிறன். ஒவ்வொரு நாளும் எலாம். அடிச்சாப்பிறகு படுக்கிற பத்து நிமிசம் எனக்கு Zufriede nheit (மகிழ்ச்சி).

நான் முதலாம் வகுப்புக்குப் போகேக்க எனக்கு எலாம் அடிச்சா விருப்பம் இல்லை. அப்ப எனக்கு Schuleவுக்கு (பாடசா லை)க்குப் போக விருப்பமில்லை அல்லது பயம். இப்ப எனக்கு எலாம் அடிச்சா சந்தோசம். சூலதான் எனக்கு உலகம் அங்கதான் என்ர Freundin(நண்பி) சபீனா இருக்கிறா.

எழும்பி முகம் கழுவிப்போட்டு. பாணோட Erdbeermar melade (ஸ்ரோபரிப்பழஜாம்) பூசிச் சாப்பிடுகிறன். எனக்கு எட்பெயர் மம்லடாவெண்டால் (ஸ்ரோபரிப்பழஜாம்) சரியான விருப்பம். Orangensaft (தோடம்பழரசம்) குடிச்சிட்டு கோப்பை கிளாஸ் எல்லாம் கழுவி வைக்கிறன்.

உடுப்பு போடுறன். நேற்று மத்தியானம் சாப்பாடு சூடாக்கேக்கை என்ரை வலதுபக்க மூண்டாவது விரலிலை அடுப்பு சுட்டுப்போட்டுது. சரியான கொதிவலியாக இருக்குது. Schuh (சப்பாத்து) போட எடுக்கும்போது பக்கத்திலை உள்ள Schrank கிலை (அலுமாரி) அந்த விரல் பட்டிட்டுது. ஐயோ சரியா வலிக்குது ஊ.....ஊ..... வாயாலை ஊதுறன்.

சபீனா சொல்லுவா தனக்கு நோ வந்தா அம்மா வாயாலை ஊதித் தடவி விடுவாவாம். என்னுடைய அம்மாவுக்கு நேரமில்லை. கண்ணீர் வருது. ஏன் எல்லாத்துக்கும் அழுகிறன்? எனக்கு தெரியேல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சில நேரத்திலை கேட்பன் சபீனா உங்களுக்கு வாய் உளையாதோ எண்டு. அவ சிரிச்சுப்போட்டு அதுக்குப் பதில் சொல்லாமல் கதைச்சுக் கொண்டே இருப்பா.

எங்கட ரீச்சர் மிகவும் நல்லவ. அவவின்ர பெயர் Frau Lusia. அம்மா சொல்லுவா தாங்கள் படிக்கேக்க பிழைவிட்டால் Lehrer(ஆசிரியர்) அடிப்பார் எண்டு. எங்களுக்கு Lehrerin (ஆசிரியை) அடிக்கவேமாட்டா. நான் படிக்க விருப்பப்பட்டு என்ன கேட்டாலும் சொல்லித்தருவா.

நான் படிக்கிற பாடங்களிலை Deutsch (ஜேர்மன்மொழி) படிக்க எனக்கு சரியான விருப்பம். ஆனா நான் எவ்வளவு நல்லா எழுதினாலும் என்னுடைய Lehrerin (ஆசிரியை) Sehr gut (விசேடசித்தி) போடமாட்டா ஏன் எண்டு தெரியாது. எப்பவும் gut போடுவா (திறமைச்சித்தி).

அப்பாவும் அம்மாவும் ஒருமுறை வீட்டிலை இருக்கேக்க கதைச்சவை. இங்க ஜேர்மன் பிள்ளையளுக்குத்தானாம் Deutsch க்கு Sehr gut (விசேடசித்தி) போடுவினம். Ausland (வெளிநாட்டு) பிள்ளையளுக்கு போடமாட்டினம் எண்டு. சிலவேளை அதுதான் எனக்கும் போடவில்லையோ தெரியாது.

சிலவேளை நினைப்பன் ஜேர்மன் பிள்ளையாய் பிறந்திருந்தால் நல்லதெண்டு. ஆனா அப்பிடியெண்டா என்ர அம்மா எனக்கு இல்லாமல் போயிருப்பா. அது எனக்கு விருப்பமில்லை.

அம்மாவுக்கு என்னோட இருக்க நேரமில்லைத்தான். ஆனால் காலையிலை அம்மாவின் தடவல் அந்த முத்தம் எனக்கு எப்பவும் வேணும். சிலவேளை நினைப்பன் அம்மா காலையிலை தாற அரவணைப்பே எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு. அப்ப அம்மா என்னோடையே இருந்தா. கண்ணிலை கண்ணீர்................. Schule(பாடசாலை) முடிஞ்சுது. சபீனாவோட கையைப் பிடிச்சுக் கொண்டு ஓடிவாறன். சபீனா ஓ வெண்டு சத்தம் போடுவா.





நேற்று இரவு செய்த Hausaufgaben (வீட்டுப்பாடங்களை) கொப்பியளைத் திரும்பிப் பார்க்கிறன். எல்லாத்தையும் எடுத்து பாக்கிலை (பை) வைக்கிறன். நேரத்தைப் பார்க்கிறன். இன்னும் பத்து நிமிசம் இருக்கு ஏழு ஐம்பதுக்குத்தான் சபீனா தன்ரை வீட்டு வாசலிலை வருவா. நான்போய் அவவோட சேர்ந்து போவன். என்னைக் கண்டால் சபீனாவுக்கு சந்தோசம். எனக்குந்தான்.

இந்தப் பத்து நிமிசத்திலையும் ரீ.வி.யிலை Kinder Programm (சிறுவர் நிகழ்ச்சி) பார்ப்பம். எனக்கு இரண்டு நண்பர்கள். ஒன்று சபீனா மற்றது என்ரை ரீவி. அம்மா சொல்லுவா. எப்பவும் Kinder Programm (சிறுவர் நிகழ்ச்சி) பாக்கக் கூடாதெண்டு. இப்ப அம்மா இல்லைத்தானே.

நேற்றுப்பாத்த அதே கதைதான் இப்பவும் போகுது. இந்தக் கதை நான் நெடுகப் பாத்து எனக்குப் பாடமாய் போச்சு.

ஐயய்யோ நேரம்போச்சுது. சபீனா பாவம் எனக்காகப் பாத்திருப்பா. கெதியா ரீவியை மூடிட்டு திறப்பை எடுத்துக் கொண்டு கதவைமூடுறன். எனது முதுகிலை என்ரை பாக். சரியான பாரம். ஒவ்வொருநாளும் தூக்கி தூக்கி முதுகு நோகுது. யாரிட்டை சொல்லுறது.?

வெளியிலை நல்ல குளிர். எங்கபாத்தாலும் ஒரே Schneeweiss (வெள்ளைப்பனி). நல்ல வடிவா இருக்கு. எனக்கு வின்ரர் என்றால் நல்ல விருப்பம். Weissblumengarten (வெள்ளைப் பூங்கா) மாதிரி எல்லா இடமும் அழகா இருக்கும். ஆனா குளிர் எனக்குப் பிடிக்காது. ஏனென்டா நான் குளிருக்கு கட்டிப்பிடிச்சுக் கொண்டு படுக்க அம்மா பக்கத்தில இல்லை.

நான் Kindடிலை(குழந்தை) இருந்து Kinder zimmerரிலேயே (குழந்தை அறை) படுத்துப் பழகிப் போச்சு. சில நேரத்தில இரவிலை முழிச்சிடுவன். அப்ப அம்மாவை கட்டிப்பிடிச்சுக் கொண்டு படுக்க வேணும் போல இருக்கும். இருட்டுக்குள்ள தடவித்தடவிப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக்கு பக்கத்திலை படுத்திடுவன். அம்மா என்னைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு படுப்பா. ஆனா அடுத்தநாள் பேசுவா.

"மயூரி நீ உன்ரை அறையிலைதான் படுக்க வேணும். உப்பிடி இரவிலை வந்து பழக்கக் கூடாது."

அம்மா இப்படிச் சொன்னதும் நான் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போவன். இப்ப எல்லாம் பழகிப் போச்சு. சிலவேளை எழும்பினாலும் அம்மாவோட படுக்க வேணும்போல இருக்கும். ஆனா அடுத்தநாள் பேசுவா எண்டு நான் போறதே இல்லை.

"கலோ பனிமாமா." ஓடிப்போய் நான் செய்த பனிமாமாவுக்கு முத்தம் கொடுக்கிறேன். 'இருங்கோ மத்தியானம் Schule வால வந்து உங்களோட விளையாடுறன்.'

நான் இஞ்சை பிறந்த பிள்ளை. அதனாலை எனக்கு சரியா தமிழ் பேசவராது. யோசிக்கும்போதும், கதைக்கும்போதுகூட Deutschம் (ஜேர்மன் மொழி) தமிழும் கலந்துதான் யோசிக்கிறன். கதைக்கிறன். அப்பா அம்மாகூட இப்ப அப்படித்தான் கதைக்கினம்.

கெதியா நடக்கிறன். ஆனா வின்ரர் காலத்திலை கவனமாக நடக்க வேணும். Winter schuh (குளிர்கால சப்பாத்து) போட்டிருக்கிறன் அதனாலை பயமில்லை.

விழுந்து நோ வந்தா மருந்து போட அப்பாவுக்கு அம்மாவுக்கு நேரமில்லை. பெரிய நோவாயிருந்து Arzt சிட்டை(வைத்தியர்) போகவேண்டி வந்தா அப்பா வேலைக்குப் போக முடியாதெண்டு பேசுவார். சிலவேளை அடிப்பார். சிலவேளை யார் கூட்டிச்செல்வ தெண்டு அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை வரும்.

Winterலை (குளிர்காலத்திலை) நிறைய உடுப்புப் போட வேணும். தலைக்குத் தொப்பி போடவேணும். மெல்லிய குளிர்காத்து முகத்தை வருடும்போது இதமாக இருக்கும். ஆனால் சிலவேளை களில் குளிரும். வாயால ஊதினா புகைமாதிரி வரும்.





Schule(பாடசாலை) முடிஞ்சா சந்தோசம். அம்மாவோட வீட்டிலை இருக்கலாம். எனக்கு கவலை நான் யாரோட இருக்கிறது தனியத்தானே........

சபீனாவின்ரை வீடு வந்திட்டுது. சபீனா கையைக் காட்டிட்டு Wiedersehen (மீண்டும் பார்க்கிறேன்) சொல்லிப்போட்டு வீட்டுக்குள்ள போறா. அவவுன்ர அம்மா சபீனாவைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கிறா. நான் வீட்டுக்குப் போனா......

கொஞ்சம் இருட்டாய் இருக்குது. அது ஒருவிதமான பயம். ஆனா Schnee (பனி) கொட்டவில்லை.

திரும்பவும் வவ் வவ் வவ்

பிறவுண் என்னைக் கண்டவுடன் வாலை ஆட்டிக் குலைக்குது. சரியான குளிர் நான் பிறவுணை கட்டிப்பிடித்து தடவிக் கொடுக்கி றேன். அதற்கு என் அரவணைப்பு சுகமாக உள்ளது. அது மெது வாக அனுங்குவது போலச் சத்தம் போடுகிறது. அதைக்கேட்டு Oma (பாட்டி) வருகிறா

"ஆ மயூரி வந்து விட்டாயா. எப்படி இன்று படிப்பு."

"நன்றாக இருந்தது."

"நீ தூரத்தில் வரும்போதே பிறவுண் கண்டு விட்டது. நீ அதனுடன் விளையாடிவிட்டுப் போ." பாட்டி உள்ளே போகிறா.

நான் சிறிது நேரம் பிறவுணுடன் விளையாடிவிட்டு பிரிய மனமின்றி முத்தம் கொடுத்துவிட்டு போகிறேன். அதற்கும் என்னைப் பிரிய மனமில்லை. அது மெதுவாக அனுங்குவது போலச் சத்தம் போடுகிறது.

என்னுடைய பனிமாமா எனக்காக காத்திருக்கிறார்.

'கலோ மாமா எப்படிச் சுகமா?' ஓ அவர்தான் பதில் சொல்ல மாட்டாரே. நான்தான் பேச வேண்டும். அவருடைய கையின் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Schnee (பனி) கொஞ்சம் விழுந்திருந்தது. யாரும் விழுத்தினார் களோ தெரியாது. மாமாவின் கையைச் சரிப்பண்ணுகிறேன்.

எனக்கு சினோவிலை விளையாட சரியான விருப்பம். ஆனா யாரோட விளையாடுறது. எப்போதாவது சபீனாவுடன் Pause (பாடசாலை இடைவேளை) விளையாடுவேன்.

என்னுடன் Schneeயில் (பனியில்) விளையாட யாரும் இல்லை என்று யோசிக்கும்போதுதான் எனக்கு ஒரு அக்காவோ, அண்ணாவோ, தம்பியோ, தங்கச்சியோ இருந்திருந்தால் எவ்வளவு நல்லாக இருக்கும் என்று யோசிப்பேன். என்னுடைய தனிமையில் எனக்கு விருப்பமே இல்லை.

அம்மாவின் Freundin (நண்பி) சாந்தி அன்ரி ஒருநாள் வீட்டுக்கு வந்திருந்தா. அப்ப இரண்டு பேரும் கதைச்சது இப்பவும் எனக்கு ஞாபகத்திலை இருக்கு.

"ஏன் புனிதம் மயூரியும் மேல்வகுப்புகளுக்கு வரப்போறாள். நீர் வீட்டிலை இருந்தா அவளுக்குப் படிக்க உதவியாயிருக்கு மெல்லே. அதோட குழந்தை பாவம் தனியவெல்லே வீட்டிலை இருக்கிறாள்."

"அது எனக்கும் தெரியுது அக்கா. நாங்கள் உழைக்கிறது வேற ஆருக்கு. எல்லாம் மயூரிக்குத்தானே. இந்த வீட்டையும் வாங்கிப் போட்டம். அந்தக் Kredit (கடன்) முடியும்வரை இரண்டு பேரும் உழைச்சாதானே சரிக்கட்டலாம். மயூரிக்கும் நகைநட்டு எண்டு செய்ய வேண்டாமே. அவள் என்ன சின்னப்பிள்ளை. வளர்ந்திட்டாள். அவள் எல்லாம் சமாளிப்பாள்."

அம்மா சொன்னது எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. எனக்கு வீடும் வேண்டாம். நகையும் வேண்டாம் நட்டும் வேண்டாம். அம்மாதான் வேணும் என்பது அம்மாவுக்கு விளங்கவில்லை.

போனவருசம் அம்மம்மா வந்தபோது. அம்மா கட்டிப்பிடிச்சு அழுதா.





வவ் வவ் வவ்

நான் நடந்து போற Strasseவிலை (வீதியில்) பிறவுண் நிக்குது. அதுதான் என்னைக் கண்டவுடனை குலைக்குது. அது அந்த வீட்டு Omaவுடைய(பாட்டியுடைய) நாய். அதுக்கு கிட்டப் போய் முத்தம் கொடுக்கிறன். பிறவுண் வாலை ஆட்டுது. நான் முகத்தை தடவி விடுறன். Oma வருகிறா.

Guten Morgen Frau Hodla (காலை வணக்கம் கோட்லா) பாட்டிக்கு வணக்கம் சொல்கிறேன். அவவும் பதிலுக்குச் சொல்கிறா. நான் Wiedersehen (மீண்டும் பார்க்கிறேன்) என்று சொல்லிவிட்டு நான் நடக்கிறேன். எனக்கு நாய் என்றால் சரியான விருப்பம். அப்பாவிடம் கேட்டேன் நாய் வளர்த்தால் அலர்ஜி வரும். தேவையில்லாத செலவு என்று மறுத்துவிட்டார்.

"கலோ சபீனா." சபீனாவின் முகம் மலருகிறது. என் மனம்கூட சபீனாவைக் கண்டால் மலர்ந்துவிடும்.

"கலோ மயூரி......"

நேற்று பாடசாலை முடிந்து போனது முதல் இப்போது சந்திக்கும்வரை நாங்கள் செய்தது, பார்த்தது எல்லாமே Schule வுக்குப் (பாடசாலை) போகுமுன்பு இருவரும் சொல்லி முடித்துவிடுவோம்.

சிலவேளை இரண்டு மூன்று நிமிசம் இருக்கும் அப்போது நாங்கள் மற்றச் சிறுவர்கள் விளையாடுவதைப் பார்ப்போம். எங்களுக்குத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் Guten Morgen (காலைவணக்கம்) சொல்லுவம்.

சரியா எட்டு மணிக்கு வகுப்பறைக்குப் போவம். எனக்குப் பக்கத்திலைதான் சபீனா இருப்பா. எனக்கு நிறையக் கதைக்கப் பிடிக்காது. சபீனா வாய்ஓயாமல் கதைச்சுக்கொண்டே இருப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு விருப்பமே இல்லை ஆனாலும் ச்........ச்...........ச்

சாப்பிட்டிட்டு Hausaufgaben (வீட்டுப்பாடங்களை) செய்யுறன். அப்பிடியே மேசையிலை நித்திரையாய் போனன் முழிச்சுப் பார்த்தால் ஆறுமணி. இருட்டா இருக்கு லைற்றைப் போடுறன். இன்னும் பத்து நிமிசத்திலை ரிவியிலை எனக்குப் பிடிச்ச Kinder Programm (சிறுவர் நிகழ்ச்சி) வரும். ஒவ்வொரு நாளும் தவறாமல் பார்ப்பன். சிறுவர்களுக்காக ஒவ்வொருநாளும் ஒவ்வொரு புதுக்கதை வரும். அது எனக்கு விருப்பம்.

குளிச்சிட்டு வந்து Pizzaவை (பிஸ்சா. இத்தாலிய உணவு) Mikrowelleயில் (சூடாக்கியில்) வைக்கிறேன். எடுத்துச் சாப்பிடுகிறேன். சிறிதுநேரம் Bibliothekகில்(நூலகத்தில்) எடுத்த புத்தகம் ஒன்றை வாசிக்கிறேன். கதவைப் பூட்டிவிட்டு திறப்பை எடுத்து எனது பாக்கில் வைத்துவிட்டுப் படுக்கப் போகிறேன்.

அப்பாவும் அம்மாவும் வந்து சாப்பிட்டுட்டுப் படுக்கப் போவார்கள். சிலநாட்களில் இருவருக்கும் சண்டை வரும். அதுக்குப் பலகாரணங்கள். ஸ்ரீலங்காவிலை சொந்தக்காரருக்கு காசு அனுப்பிறதைப் பற்றிச் சண்டை வரும். இங்கை வீட்டுக் கடனைப் பற்றிச் சண்டை வரும். ஆனால் என்னைப்பற்றி ஒருநாளும் சண்டைவராது.

போனவருசம் அம்மம்மா வந்திருந்தா. எனக்கு அம்மம்மா விலை சரியான விருப்பம். என்னோடை விளையாடுவா. என்னோட சாப்பிடுவா. என்னோட ரிவிபார்ப்பா. நான் ரிவியிலை வாற டொச் சிலை உள்ளதை தமிழிலை சொல்லுவன். அம்மம்மா ஸ்ரீலங்கா விலை Lehrerin ஆக (ஆசிரியையாக) இருந்தவவாம். எனக்கு இங்கிலிஷ் சொல்லித் தருவா. என்னட்ட Deutsch(ஜேர்மன் மொழி) கேட்டுப் படிப்பா. இன்னுமொரு முக்கியமான விசியம். என்னோடயே படுப்பா. நான் அம்மம்மாவைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு படுப்பன். அம்மம்மா ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கதை சொல்லுவா.





அம்மா எனக்கு உங்கட மடியிலை படுக்க வேணும் போல கிடக்கு எண்டு சொல்லிப்படுத்தா.

அம்மாவுக்கே அப்பிடியெண்டா நான் சின்னப்பிள்ளை எனக்கும் அந்த ஏக்கம் இருக்குந்தானே எண்டிறதை அம்மா ஏன் விளங்கிறா இல்லை. எனக்கு விளங்கேல்லை.

பனிமாமாவுக்கு டாட்டா காட்டிவிட்டு வீட்டுக்குள் போகிறேன். ஒரே அமைதியாக இருக்கு. நான் ரிவியைப் போடுறன். அந்தச் சத்தம் எனக்குப் பழகிப்போன விருப்பம். சாப்பாட்டு மேசை யிலை Brief (கடிதம்) கிடக்கு. அம்மாதான் எழுதி வைச்சிருக்கிறா. ஒரு வேலை முடிஞ்சு வந்து மற்ற வேலைக்குப் போட்டா. அப்பா வீட்டுக்கு வராமலே மற்ற வேலைக்குப் போட்டார்.

மயூரி மேசையிலை சாப்பாடு வைச்சிருக்கிறன். சாப்பிடு. இரவுக்கு Kuehlschrankகிலை (குளிர்சாதனப்பெட்டியிலை) பிள்ளைக்கு விருப்பமான சம்பியன் பிற்சா வாங்கி வைச்சிருக்கிறன். சூடாக்கிச்சாப்பிடு. திறப்பை கதவிலை விடாதை. முத்தங்களுடன் அம்மா.

அம்மாவோட வீட்டிலை ஒண்டா இருந்தே Briefலை (கடிதம்) முத்தம். சாப்பாடு எல்லாம்.

ரெலிபோன் மணி அடிக்குது.

“ஹலோ மயூரி அம்மா பேசுறன். சாப்பிட்டிட்டியா”

“இல்லை அம்மா இப்பதான் வீட்டுக்குள்ள வந்தனான். இனித்தான் சாப்பிடப் போறன்.”

“சரி மயூரி இரவுக்கு அப்பாவும் நானும் லேட்டாத்தான் வருவம். நீ சாப்பிட்டுட்டு படு”.

“சரி அம்மா”.

“ச்.....ச்....ச” அம்மா முத்தம் கொடுக்கிறா.“மயூரி அம்மாவுக்கு முத்தம் கொடு.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு விருப்பமே இல்லை ஆனாலும் ச்........ச்............ச்

சாப்பிட்டிட்டு Hausaufgaben (வீட்டுப்பாடங்களை) செய்யுறன். அப்பிடியே மேசையிலை நித்திரையாய் போனன் முழிச்சுப் பார்த்தால் ஆறுமணி. இருட்டா இருக்கு லைற்றைப் போடுறன். இன்னும் பத்து நிமிசத்திலை ரிவியிலை எனக்குப் பிடிச்ச Kinder Programm (சிறுவர் நிகழ்ச்சி) வரும். ஒவ்வொரு நாளும் தவறாமல் பார்ப்பன். சிறுவர்களுக்காக ஒவ்வொருநாளும் ஒவ்வொரு புதுக்கதை வரும். அது எனக்கு விருப்பம்.

குளிச்சிட்டு வந்து Pizzaவை (பிஸ்சா. இத்தாலிய உணவு) Mikrowelleயில் (சூடாக்கியில்) வைக்கிறேன். எடுத்துச் சாப்பிடுகிறேன். சிறிதுநேரம் Bibliothekகில்(நூலகத்தில்) எடுத்த புத்தகம் ஒன்றை வாசிக்கிறேன். கதவைப் பூட்டிவிட்டு திறப்பை எடுத்து எனது பாக்கில் வைத்துவிட்டுப் படுக்கப் போகிறேன்.

அப்பாவும் அம்மாவும் வந்து சாப்பிட்டுட்டுப் படுக்கப் போவார் கள். சிலநாட்களில் இருவருக்கும் சண்டை வரும். அதுக்குப் பல காரணங்கள். ஸ்ரீலங்காவிலை சொந்தக்காரருக்கு காசு அனுப் பிறதைப் பற்றிச் சண்டைவரும். இங்கை வீட்டுக் கடனைப் பற்றிச் சண்டை வரும். ஆனால் என்னைப்பற்றி ஒருநாளும் சண்டைவராது.

போனவருசம் அம்மம்மா வந்திருந்தா. எனக்கு அம்மம்மா விலை சரியான விருப்பம். என்னோடை விளையாடுவா. என்னோட சாப்பிடுவா, என்னோட ரிவிபார்ப்பா. நான் ரிவியிலை வாறடொச் சிலை உள்ளதை தமிழிலை சொல்லுவன். அம்மம்மா ஸ்ரீலங்கா விலை Lehrerinஆக (ஆசிரியையாக) இருந்தவவாம். எனக்கு இங்கிலிஷ் சொல்லித் தருவா. என்னட்ட Deutsch(ஜேர்மன் மொழி) கேட்டுப் படிப்பா. இன்னுமொரு முக்கியமான விசியம். என்னோடயே படுப்பா. நான் அம்மம்மாவைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு படுப்பன். அம்மம்மா ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கதை சொல்லுவா. கண்ணகியின்ரை முழுக்கதையும் எனக்குச் சொல்லியிருக்கிறா. அதில் சிலது விளங்கும். சிலது விளங்காது. ஆனாலும் விருப்பமாய்





கேட்டுக்கொண்டே தூங்கிப் போவன். அம்மம்மா கதை சொல்லிக் கொண்டே என்னுடைய தலையை கோதிவிடுவா.

அம்மம்மாவை நினைச்சா எனக்கு இப்பவும் அழுகைதான் வரும். ஒருநாள் அம்மம்மா அம்மாவோட எனக்காகச் சண்டை போட்டவ. அது என்ர மனதிலை பதிஞ்சுபோயிருக்கு.

ஏன்டி புனிதம் உன்ரை மனசிலை என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறாய். மயூரியை வீட்டிலை தனிய விட்டுட்டு. அப்பிடி என்ன உழைப்பு வேண்டிக் கிடக்கு. இரண்டு பேரும் உழைச்சுக் கடசியிலை என்ன சுகத்தைக் காணப் போறியள். அந்தக் குழந்தைக்கு தேவை உங்கட பணம் இல்லை. அரவணைப்பு. பேசாமல் வேலையை விட்டுட்டு மயூரியோட வீட்டிலை இரு.

அம்மா என்னவோ காரணம் எல்லாம் சொன்னா. ஆனா அம்மம்மா கேக்கேல்லை. எனக்காகவே நான் நினைச்சதைப் பேசினா. அதிலை எனக்கு அம்மம்மாவை மறக்க முடியாது.

அம்மம்மா போனபோது எனக்கு கவலை தாங்க முடிய வில்லை. அம்மம்மாவை கட்டிப்பிடிச்சுக் கொண்டு ஓவெண்டு அழுதன். அம்மம்மாவும் அழுதா. அவவுக்கும் என்னை விட்டுப்போக விருப்பமில்லை.

மயூரி அழாதை நான் அடுத்தவருஷம் கட்டாயம் வருவன் எண்டு சொல்லிப்போட்டுப் போனா.

அவவாற நாளை நான் பார்த்துக் கொண்டேயிருக்கிறன். ஏனென்டால் அம்மம்மாவோட நான் கட்டிப்பிடிச்சுக்கொண்டு படுக்கலாம்.

தூக்கம் வருகிறது படுத்துக் கொள்கிறேன். ஏக்கத்துடன்.

மீண்டும் நாளைக்காலையில் ட்றிங்..... ட்றிங்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேற்றுமை

## ஜீவகன் Kamen

செல்வராசா குடும்பத்தினரும், முத்துலிங்கம் குடும்பத்தினரும் குடிபெயர்ந்து ஜேர்மனியின் கம் நகரத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் குடும்பம் இலங்கையில் சந்தித்ததே கிடையாது. வேறு வேறு கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இங்கு வந்தபின்பே சந்தித்துக் கொண்டனர். இருகுடும்பத்தினரும் இன்று மிகவும் அந்நியோன்னியமாக, ஒரே குடும்ப உறவுகள்போல் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் நட்பும் அன்பும் மற்றவர்கள் கண்களுக்குப் பொறாமையைக்கூடத் தோற்றுவிக்கும் அளவுக்கு நெருக்கமானதாக விளங்கியது. உதவிகள் ஒத்தாசைகள் என்பன குடும்பங்களுக்கு இடையில் பரிமாறப்பட்டு வரலாயினர்.

செல்வராசா குடும்பம், முத்துலிங்கம் குடும்பத்தைவிட இரண்டு வருடங்கள் முதல் இங்கு வந்து சேர்ந்தவர்கள். செல்வராசாவுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவன் ரஞ்சன். மற்ற இருவரும் பெண்கள். செல்வராசா வந்த காலத்தில், சமூகசேவை நிறுவனங்களும், ஜேர்மன் மக்களும் தாராள மனத்துடன் உதவிகளைச் செய்தார்கள். காலப்போக்கில் இவ்வுதவிகள் குறைந்தும், ஜேர்மன் மக்களின் உதவிகள் இல்லாமலே போய்விட்டது.

செல்வராசா தன் சுய முயற்சியாலும், மற்ற உதவிகளினாலும் தனது குடும்பத்தின் முன்னேற்றத்தை நன்றாக ஏற்படுத்திக் கொண்டார். பிள்ளைகளும் கல்விகற்று நன்றாக வளர்ந்து வந்தனர். இந்நகரத்தின் பல்வேறு கிராமங்களிலும் ஆங்காங்கு ஒருசில தமிழ்க்குடும்பங்களும், தனி இளைஞர்களும் வாழ்ந்து வந்தனர்.





சில சமயங்களில் சமூகசேவை நிறுவனத்தில் கண்டு கொள்வதுண்டு. செல்வராசாவுக்குக் கதைப்பதற்கான விருப்பம் இருந்தும் சந்தர்ப்பமும், சூழ்நிலையும் நன்றாக அமையவில்லை. வணக்கம் கூறுவதுடனும், நலம் சொல்வதுடனும் அவரவர் சென்று விடுவார்கள்.

மொழிகற்பிக்கும் ஆசிரியரின் உதவியுடனும், பிள்ளைகளின் உதவியுடனும் செல்வராசா ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொணடார். தான், தனித்துத் தனது தேவைகளைப் நிறைவேற்றக் கூடிய மொழியாற்றலையும் பெற்றுக் கொண்டார்.

இதுவரை ஆங்காங்கு தோட்டங்களிலும், சில உணவுக் கடைகளிலும் வேலை செய்தவர், சுய தேடலின் மூலம் உணவு வகைகளைத் தரம்பிரித்து பொதிபண்ணும் பண்டகசாலையில் வேலை பெற்றுக் கொண்டார்.

இக்கால நேரத்தில்தான் முத்துலிங்கம் குடும்பத்தினரும் வந்து சேர்ந்தனர். இவர்கள் சமூக சேவை நிறுவனத்திற்கு வந்த சமயம், அங்கு பணிபுரியும் அதிகாரி செல்வராசாவை வரவழைத்து இவர்களுக்கான நடைமுறைகளை மேற்கொண்டார்.

செல்வராசா முத்துலிங்கத்திடம் நடைமுறை விடயங்களை எடுத்துக் கூறினார். செல்வராசாவின் உதவி செய்யும் பண்பையும், அன்பையும் பார்த்து முத்துலிங்கமும் அவர் குடும்பமும் சந்தோசம் கொண்டனர். முத்துலிங்கமும் செல்வராசாவும் நட்புடன் பழகிக் கதைக்கலாயினர்.

"நாங்கள் வந்து நாலைந்து நாளாகிவிட்டது... பெரிய விடுதியிலை, பல்வேறு நாட்டுச் சனத்தோடை.... ஒரு அறையிலை இருக்க விட்டான்கள். இப்ப இங்கும் அப்படித்தான் செய்யப் போறாங்களோ அண்ணை" என்று கேட்டார் முத்துலிங்கம்.

"இனி நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு ஒரு தனியிடம் தருவார்கள். அதிலிருந்து கொண்டு ஒரு நல்ல வீடு தேடியெடுத்து அங்கு இருக்கலாம். இதற்கான ஒழுங்குகளை செய்து தருகின்றேன்... நீங்கள் யோசிக்காதை யுங்கோ"... என்று செல்வராசா கூறிக் கொண்டிருக்க,

அங்கு வந்த அதிகாரி இவர்கள் இருப்பதற்கான இடத்தின் விலாசத்தையும், வீட்டிலக்கத்தையும் கூறித் திறப்பையும் கொடுத் தார். யாவற்றையும் பெற்றுக் கொடுத்த செல்வராசா இவர்களைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அவர்களை செல்வராசா குடும்பத்தினர் வரவேற்று, உணவு பரிமாறி நன்றாக உபசரித்தனர். பல்வேறு நடைமுறை விடயங்களையும் கதைத்தும் கொண்டனர். பின்பு அவர்களைத் தங்கவேண்டிய இடத்திற்குக் கூட்டிக் கொண்டுபோய்ப் பார்த்துவிட்டு, திரும்பி வந்து அன்று செல்வராசா வீட்டிலேயே தங்கிக் கொண் டனர்.

அடுத்தநாள், தேவையான எல்லா பொருள்களையும் வாங்கி யும், மற்றும் உதவிகளையும் செய்து கொடுத்த செல்வராசா "விரைவாக நல்லதாக வேறு வீடு எடுத்து, அங்கு குடியிருக்கலாம், கொஞ்ச நாளைக்குப் பொறுத்திருங்கள்" எனக் கூறிக் கொண்டார்.

செல்வராசாவின் பெருமுயற்சியுடன் இரண்டு மாதத்திற்குள் நல்லதொரு வீடு கிடைத்துவிட்டது. வீடு செல்வராசாவின் வீட்டுத் தெருவிற்கு அடுத்த தெருவில் அமைந்திருந்தது. செல்வராசாவின் வீட்டிற்கு அருகில் அல்லது அதே தெருவில் கிடைத்திருந்தால் இன்னும் நல்லாயிருந்திருக்கும் என்ற நினைப்பு முத்துலிங்கத்திற்கும் மனைவிக்கும். இருந்தும் இது போதும் என்ற மனத்திருப்தி.

இரண்டு பெண்பிள்ளைகளையும் பாடசாலையில் சேர்த்தும் விட்டாச்சு. பெரும் நிம்மதிப் பெருமூச்சுடன், செல்வராசா குடும்பத் திற்கு பெரும் நன்றி கூறினார்கள்.





இரு குடும்பத்தினரும் மிகுந்த சந்தோசத்துடன் வாழ்ந்து வரலாயினர். முத்துலிங்கத்தையும் டொச்மொழியைப் படிக்க ஒழுங்கு செய்து கொடுத்து, பின் தனது வேலையிடத்திலேயே வேலையும் பெற்றுக் கொடுத்தார் செல்வராசா.

இவர்களின் நட்பு நன்றாகவே வளர்ந்து சென்றது. ஒவ்வொரு வர் வீட்டிற்குச் சென்று வருவதும், விருந்துண்பதுமாகவும், விசேட மாகத் தயாரிக்கப்படும் உணவுகள் வீட்டுக்கு வீடு பரிமாறப்படு வதாகவும் காலம் கடந்தது.

பிள்ளைகள் ஒவ்வொரு குடும்பப் பெற்றோரையும் மாமா, மாமி என்றே அழைத்து உறவு கொண்டாடினர். தாமும் சேர்ந்து விளையாடிக் கதைத்து நட்புடன் பழகினர். சேர்ந்து படித்தனர். கல்வியில் தேர்ச்சியும் பெற்று வந்தனர். செல்வராசாவின் மூத்த பையன் ரஞ்சன் ஆபிருஅ (Abitur) (க.பொ.த.உ.த) படித்துப் பாஸ் பண்ணி (சித்தியடைந்து) முன்சர் யூனிவேசிற்றியில் கல்வியைத் தொடரலானான்.

ரஞ்சன் தந்தையை விட உயரமாக வளரலானான். வளர்ச்சிக்கேற்ற உடற்பருமனும், தாயைப்போல் நிறமுமுடையவன். அவனது அழகுத் தோற்றம் கண்டவரைக் கவரும் தன்மை கொண்டது. அழகுடன் அறிவும் நிரம்பப் பெற்றவன். சுறுசுறுப்பும் அமைதியான குணமும் கொண்டவன். இரண்டு தங்கைகள் மேலும் அன்பும் பாசமும் கொண்டவன். அவர்களின் படிப்பிற்கு உதவி செய்து கவனித்து வந்தான்.

இதுபோலவே முத்துலிங்கம் மாமாவின் மக்கள் தர்சினிக்கும், அவள் தங்கைக்கும் படிப்பிற்கு உதவி செய்து வந்தான். தர்சினியும் தங்கையும், பாடசாலையில் திறமையுடன் படித்து வந்தனர். பிள்ளை களின் வளர்ச்சியில் பெற்றோர்கள் மனநிறைவைக் கண்டனர்.

தர்சினி அடுத்த வருடம் ஆபிருஅ (Abitur) (க.பொ.த.உ.த) பரீட்சை எழுத வேண்டும். இதன் காரணமாக தர்சினி கூடுதல் நேரத்தைப் படிப்பில் செலவு செய்தாள். விளங்காத பாடங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சனிடம் கேட்டுப் படித்தும் வந்தாள். ஆனால் முன்புபோல் ரஞ்சனைக் காண்பது கடினம். யூனிவேசிற்றி சென்று வருவதினால் எப்போதும் சந்திக்க முடிவதில்லை.

தர்சினி இரவுபகலாக தன் படிப்பில் கவனம் செலுத்திப் படிப்பதைப் பார்த்துப் பெற்றோர்கள் பெருமகிழ்வு கொண்டனர். தர்சினியோ தானும் ஆபிருஅ (Abitur) (க.பொ.த.உ.த) பாஸ் பண்ணி, ரஞ்சனைப்போல் முன்சர் பல்கலைக்கழகத்தில் படிக்க வேண்டும் என்ற அவாவும், ரஞ்சன்மேல் பாச உணர்வும் கொண்ட வளாக இருந்தாள்.

தர்சினி சுமாரான அழகுடையவள். மெலிந்த உடல்வாகும், சிவந்த நிறமும், கவர்ச்சியான புன்னகை சிந்தும் முகமும் கொண்ட வள். இவளது பழகும் தன்மையும், பண்பான பழக்கமும் ரஞ்சனின் மனதிலும் இடம் பிடித்திருந்தது. இருவரும் தம்முள் எண்ணங்களை வளர்த்து மறைத்துக் கொண்டனரேயன்றி வெளிப்படுத்தவில்லை. இருவரும் தம்மனங்களில் ஒருவருக்கொருவர் என்ற நினைப்பில் மூழ்கியிருந்தனர். எண்ணம் வளர்த்து, நினைவினைப் பெருக்கி வண்ணக் கோலம் காணக் காலத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

தர்சினி பரீட்சையில் சித்தியடைந்து, முன்சர் பல்கலைக் கழகத்தில் இடம் கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்திருந்தாள். ரஞ்ச னுக்கும் பெரும்மகிழ்ச்சி. வாழ்த்துக் கூறி மனம் மகிழ்ந்தான். வீட்டிலிருந்தே பல்கலைக் கழகத்துக்குச் சென்று வந்தனர்.

ஒருசில நாட்கள் தவிர மற்ற நாட்களில் இருவரும் ஒன்றாகவே சென்று வந்தனர். இருவரும் ஒருமித்தே சென்று வருவதினால், கதைத்துப் பழகும் நேரங்கள் கூடுதலாக அமைந்துவிட்டன. கதைத்து உரையாடுதல் நீடித்தது. பல்வேறு விடயங்களுடன், வாழ்வியல் எண்ணங்கள் பற்றியும் கதைக்கலானார்கள்.

இதனால் ஒவ்வொருவர் மனதிலும், எண்ணத்திலும் நெருக்கமான, ஆழ்ந்த அன்பு ஏற்படலாயிற்று. அறிவும், ஆற்றலும் கொண்ட ரஞ்சன் தனது எண்ணத்தைச் சொல்லத் தயங்கிய வண்ணமே இருந்தான்.





சுட்டித்தனமாகவும், மனதில் தோன்றியதைத் தைரியமாகக் கூறும் தர்சினி, தனது எண்ணத்தை தெரியப்படுத்தலானாள். "எங்கள் குடும்பம் நல்ல நட்புடனும், நல்லுறவுடனும் இருக்கின்றது. இது இப்படியே நீடித்திருப்பது நல்லதல்லோ" என்று கேட்டாள்.

"ஆமாம் அதற்கென்ன? எங்கள் குடும்பம் இரண்டும் நீடித்த நட்புடன்தானே இருக்கின்றன. அதில் என்ன குறை"? என்று பதிலுடன் கேள்வியைத் தொடுத்தான், ரஞ்சன்.

"குறையில்லா இந்த நிலை மேலும் இறுக்கமான நட்பாக இருக்க வேண்டும்" என்றாள் தர்சினி.

"அதென்ன மேலும் இறுக்கம், அதற்கென்ன செய்ய வேண்டும்"? என்றான்.

அவள் மெதுவாக "நாமிருவரும்தான் அதனை ஏற்படுத்த வேண்டும்" என்றாள்.

"எப்படி"

அவள் தாமதிக்க எதுவுமின்றி உடனடியாகவே, „நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து திருமணம் செய்ய வேண்டுமே" என்றாள்.

ஒரு நிமிடம் இன்ப வெள்ளத்தில் மூழ்கி எழுந்த ரஞ்சன், அவளது முகத்தை வருடியெடுப்பதுபோல் உற்றுப்பார்த்து மகிழ்ந்தான்.

"எனது பேராசையும் இதுதான்" என்றான்.

இந்த இனிய நன்நாளிலிருந்து அவர்களின் காதல் வாழ்வு இன்பமாக நகர்ந்தோடிக் கொண்டிருந்தது. அவர்கள் தங்கள் படிப்புடன், எதிர்கால வாழ்வியல் பற்றியும் நன்றே உரையாடிப் பகிர்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துலிங்கமும் மனைவியும் தங்களுக்குள் தாங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிக் கதைத்துக் கொண்டனர். இருவருக்கும் ரஞ்சனின்மேல் ஒருவிதமான பாசஈர்ப்பு நிலை. இந்த நிலையில் ஒரு நாள், மனைவி கதையைத் தொடக்கினாள்.

„தர்சினிக்கும் வயது வந்துவிட்டது. அவளின் பட்டப்படிப்பும் முடியப் போகின்றது. அவளுக்குத் திருமணத்தைச் செய்து வைச்சால் நல்லது" என்றாள்.

"ஓம் நீ சொல்லுவதும் சரிதான், அவளுக்கேற்ற மாப்பிளை யாய்ப் பார்க்கவெல்ல வேணும்" „என்ன சொல்லுறியள், மாப்பிளை பார்க்கப் போறியளோ? கையிலை வெண்ணெய் இருக்க நெய்க்கலைந்த கதைமாதிரியல்லோ இருக்கு"

"என்ன சொல்லுகிறாய், விளக்கமாகச் சொல்லன்"

"என்னத்தைச் சொல்ல, உங்களுக்குத் தெரியாதாக்கும். எங்கடை ரஞ்சன்தானே பிள்ளைக்கேற்ற மாப்பிள்ளை, அவைகளும் ஒருத்தருக்கொருத்தர் என்ற நினைப்பிலைதான் இருக்கினம். அவன் பொடியனும் நல்ல குணமும், நல்ல நடத்தையும் கொண்டவன். அப்பா அம்மாவின் சொற்கேட்டுப் பெரியவர்களை மதிக்கும் பண்பும் கொண்டவன். அவனை எங்கடை பிள்ளைக்குக் கட்டிவைத்தால் என்ன குறை"?

"ஓமப்பா எனக்கும் அந்த ஆசைதான், இதற்குச் செல்வரா சாவும் மனைவியும் ஒத்துக்கொள்ள வேண்டுமெல்லோ"

"ஒருக்காக் கதைத்துப் பாருங்கோவன்"
"ஓம், ஒரு நல்ல நாளைப் பார்த்துக் கதைப்போம்"

முத்துலிங்கத்தின் அழைப்பின்பேரில், செல்வராசாவும் மனைவியும், முத்துலிங்கம் வீட்டில் கூடியிருந்தனர். முத்துலிங்கம் விடயத்தைத் தொடக்கினார்.





"மருமகன் ரஞ்சனுக்கும் மகள் தர்சினிக்கும் சோடிப் பொருத்தம் நன்றாக அமைந்திருக்கு, இருவரையும் இணைத்துப் பார்க்க ஆசைப்படுகின்றோம். சின்னஞ்சிறிசுகள், ஒன்றாகவே பழகிப் படித்து வருகுதுகள், நாங்கள் முடிவெடுத்துச் சொன்னால் அதுகள் சந்தோசப்படுங்கள். நீங்களும் சரியென்று சொல்லுவீர்கள் என்று நினைக்கின்றேன்" என்றார் முத்துலிங்கம்.

இதனைக் கேட்டு செல்வராசாவுக்கும் மனைவிக்கும் மிகுந்த மகிழ்ச்சிதான். செல்வராசா உண்மையை நம்பி வாழ்பவர். அவர் கொஞ்சநேரம் யோசித்துவிட்டு,

"நாங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர் கிராமத்தைச் சேர்ந்தனாங்கள். இந்த உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்றும், அந்தச் சமயம் இந்தச் சமயம் என்றும் வேறுபாடு எல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் குறைந்த சாதி என்று நம்மைக் கூறுகின்றார்கள். இந்த விடயங்களில் உங்கள் நிலை என்ன என்று எனக்குத் தெரியாது. இதெல்லாம் சரியென்றால் பிள்ளைகளின் நல்வாழ்விற்கு எமது பூரண சம்மதம்" என்று கூறினார் செல்வராசா.

திகைப்பில் முகம்கறுத்த முத்துலிங்கம், மூச்சின்றிக் கதிரையில் இருந்தார். முத்துலிங்கத்தின் குடும்பம் சாதிப்பேரைச் சொல்லி வாழ்ந்த குடும்பம். வரட்டுக் கௌரவம் கொண்ட பரம்பரையில் வந்த குடும்பம். வெளிநாட்டு வாழ்வுக்கு வந்தும், மனித மாண்பின் உன்னதத் தன்மையை ஏற்க மறுக்கும் நிலை.

இதனால் முத்துலிங்கத்திற்கு தூக்கிவாரிப் போட்ட மனநிலை. எதுவும் செய்ய முடியாத மனக் குழப்பம். இவ்வளவு நாளும் செல்வராசா செய்த உதவிகளையும், ஒத்தாசைகளையும் மறக்க முடியாத நிலை. ஒரு வீட்டில் இருந்து, ஒன்றாகவே சமைத்து ஒரு தட்டில் சாப்பிட்ட எண்ணம். செய்வதறியாத மனக்குழப்பம்.

முத்துலிங்கம் சிறிது நேரத்தில் அறைக்குள் சென்று, மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன் கதைத்தார். (இல்லை மனைவியை அடக்கினார்.) பின் வெளிவந்து செல்வராசாவிடம் கூறினார்.

"உங்களை இப்படி எதிர்பார்க்கவில்லை. உங்களை எங்க ளாலை மறக்க முடியாது. பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும். ஆனால் சில கண்டிசன்களை (நிபந்தனைகளை) நீங்கள் ஏற்க வேண்டும்." என்று கூறி செல்வராசாவைக் கீழ்க்கண்ணால் கவனித்தார் முத்துலிங்கம்.

செல்வராசா எதுவித மாற்றமும் இன்றி அமைதியாக இருந்தார்.

முத்துலிங்கம் தொடர்ந்து,

"நீங்கள் இப்ப உங்கடை இனசனம் என்று பல இடங்க ளுக்கும் போய்ப் பழகி வருகின்றீர்கள். அவர்களை எல்லாம் திருமணத்திற்குக் கூப்பிடக் கூடாது. மாப்பிளையும் பெண்ணும் எங்கள் வீட்டில்தான் இருக்க வேண்டும். யாரும் வீட்டுக்கு வரக் கூடாது. பிள்ளைகளும் வரக்கூடாது. நீங்களும் உங்கள் மனைவியும் மட்டும் வந்து போகலாம்" என்று பல (நிபந்தனைகளை) கண்டி சன்களை சொல்லி முடித்தார்.

செல்வராசாவும் மனைவியும் அமைதியாகவே இருந்தனர். செல்வராசா எழுந்து எந்தவிதமான பதிலுமின்றி,

"சரி நாங்கள் போகின்றோம்" என்று நடக்கத் தொடங்கினார்.

"என்னணண்ணை போகின்றோம் என்று எல்லாத்தையும் அறுத்த மாதிரிக் கூறிப்போட்டுப் போறியள். போட்டுவாறம் என்று சந்தோச மாகச் சொல்லுங்கள்" என்று முத்துலிங்கத்தின் மனைவி இடையிட் டுக் கூறினாள்.

"தங்கச்சி, இதெல்லாம் சரிப்பட்டு வராது. முத்துலிங்கம் கூறும் உந்தக் கண்டிசன் கிண்டிசன் எல்லாம் மிருகங்களுக்கும் பொருந்தாது. மனிதர்களுக்கு எப்படிப் பொருந்தும். நாங்கள்





மனிதர்களாக வாழவேண்டும் என்று நினைத்து வாழ்கின்றோம். அப்படி ஒரு நினைப்பு இருந்தால், நீங்கள் எப்பவும் எனது வீட்டிற்கு வரலாம்." என்று கூறி நடையைத் தொடர்ந்தார் செல்வராசா. சோகமே உருவான நிலையில் பின்தொடர்ந்தாள் மனைவி...

முத்துலிங்கமும் மனைவியும் அன்றைய நாள் முழுக்க பெரும் யோசனையில் ஆழ்ந்தனர். இந்த யோசனை இரண்டு மூன்று நாட்களாக ஆட்களை வாட்டி அலைத்தது. எதுவித முடிவும் எடுக்க முடியாது தவித்த முத்துலிங்கம், இறுதியாக ஒரு முடிவுக்கு வந்து, மனைவிக்குச் சொன்னார். (அல்ல திணித்தார்.)

செல்வராசா வீட்டாருடன் எதுவித தொடர்பும் வைப்பதில்லை என்றும், தர்சினியை ரஞ்சனுடன் கதைக்க வேண்டாம் பழக வேண்டாம் என்றும், தனது சாதிசனத்தில் ஒரு பெடியனைப் பார்த்துத் திருமணத்தைச் செய்வதென்றும் தன் முடிவை மனை வியிடம் எடுத்துரைத்து ஏற்கச் செய்து, தர்சினிக்கும் சொல்லத் சொன்னார். ஏக்கப் பெருமூச்சுடன் தவியாய்த் தவித்து அந்த முடிவை மனமின்றி ஏற்றாள் மனைவி.

அன்று மாலை பல்கலைக்கழகத்திலிருந்து வந்த தர்சினி யிடம், தந்தையின் எண்ணத்தைக் கூறினாள் தாய். தந்தையின் அநாகரிகமான நோக்கங்களை அறிந்த தர்சினி பெரும் கோபம் கொண்டாள். தாயுடன் பெரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டாள். எந்த வித பயனும் தாயின் மூலம் ஏற்படாது என்பதை அறிந்த தர்சினி அமைதியானாள்.

இரண்டொரு நாட்களாக வீட்டில் ஒருவர் முகத்தை ஒருவர் எதிர் கொள்ளாது தங்கள் அறைகளில் முடங்கிக் கொண்டனர். தந்தையின் பிடிவாதத் தன்மையும், எதிர்காலத் திட்டத்தையும் தெரிந்து கொண்ட தர்சினி, ரஞ்சனுடன் கதைத்து முடிவினை மேற்கொள்ளலாம் என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

பல்கலைக்கழகம் வராத தர்சினியைப் பற்றி அறிவதற்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டான். தொலைபேசியை தர்சினியின் தாய்தான் தொடர்ந்து எடுத்தெடுத்துக் கதைத்தார்.

தாயின் உரையாடல் முன்புபோல் இல்லாத காரணத்தாலும், கூறிய கருத்துக்களும் சரியாகப்படாத தன்மையினாலும், ரஞ்சன், தர்சினியின் வீட்டுக்குச் சென்றான். அங்கு தர்சினியின் தாய்தான் வெளியில் வந்து நடந்த விடயங்களை எடுத்துரைத்து, ஆறுதல் கூறி வழியனுப்பி வைத்தாள்.

விடயத்தை அறிந்தவன், தர்சினியுடன் தொடர்பு கொள்ள முடியாது தவித்தான். பிரயாணம் செய்யும் தொடர்வண்டியிலும், பல்கலைக்கழகத்திலும் அகலக் கண்விரித்துத் தேடினான். ஆனால் பலன் கிடைக்கவில்லை. இதேபோல் தவியாய்த் தவித்த தர்சினியும், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு பல்கலைக்கழகம் சென்றாள்.

அங்கு இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டனர். சந்தித்தவர்கள் சிலநிமிடங்கள் மௌனமாக நின்றனர்.

ரஞ்சன் மௌனத்தைக் கலைத்து உரையாடலைத் தொடர்ந்தான்.

“தர்சினி நாங்கள் நன்றாக யோசித்துச் சிந்தனை செய்தே, இருவரும் ஒருவரை ஒருவர் மனம் விரும்பியிருந்தோம். இதில் எமது பெற்றோரும் ஒத்தாசையுடன் இருந்தார்கள். இப்போது உமது பெற்றோர் ஏன் இப்படி இருக்கின்றார்கள். இந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லும்” என்றான்.

“இதிலென்ன கூற இருக்கு ரஞ்சன். நாங்கள் இருவரும் எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. அதில் நான் மாறவும் மாட்டேன்.”

“அப்ப உமது அப்பாவின் முடிவு”

“நான் எனது முடிவில் உறுதியாக உள்ளேன், திருமணம்





செய்வதென்றால், நாமிருவரும்தான் செய்து வாழ்வோம். இதில் எந்தவித மாற்றமுமில்லை. ஆனால் எனது பெற்றோரை எப்படித்திருத்தி அவர்களைச் சம்மதிக்கச் செய்வது என்றுதான் சிந்திக்கின்றேன்”.

“தர்சினி, அவர்கள் எந்தக் காலத்தில்? எந்த எண்ணத்தில் வாழ்கின்றார்கள்? என் வீட்டில் எந்தவித பிரச்சினையும் இல்லை. எம்மிருவர் முடிவே தங்கள் முடிவும் எனக்கூறி விட்டார்கள்.”

“நான், எனது தந்தையிடம் கதைக்கின்றேன். எங்கள் முடிவைக் கூறி கொள்வேன். அதன் பின்பும், அவரது முடிவில் மாற்றம் இல்லையேல், நாம் எமது எண்ணப்படி யாவற்றையும் செய்வோம்” எனக் கூறினாள் தர்சினி. இருவரும் மேற்கொண்டு செய்ய வேண்டிய விடயங்கள் பலதையும் கதைத்து உறுதியாக்கிக் கொண்டனர்.

தர்சினி தந்தையிடம் கதைத்து முடிவு எடுப்பது என்று சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காத்திருந்தாள். தாயும் தந்தையும் அமைதியாக இருந்த தருணம் பார்த்துத் தாயுடன் பேச்சை தொடங்கினாள்.

“அம்மா! என்னம்மா நடந்தது. இவ்வளவு நாட்களாக எங்கள் குடும்பமும், செல்வராசாமாமா குடும்பமும் மிகவும் நன்றாகத்தானே இருந்தோம். பண்புடன்தானே இருவீட்டாரும் பழகிவந்தோம். இப்பென்ன குறை கண்டுபிடித்து விட்டீர்கள்” என்ற தர்சினியை இடைமறித்த முத்துலிங்கம்....

“அந்த வீட்டுக்கதை ஒன்றும் இங்கு எனிமேல் கதைக்கக் கூடாது. கதைத்தால் நடக்கிறது வேறாகத்தான் இருக்கும்.”

„அப்பா என்ன கதைக்கிறீர்கள்! கதைக்கிறது உங்களுக்கே விளங்குகின்றதா”?

“என்ன விளங்கவில்லையோ? விளங்காமலோ உங்களையெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் இங்கு கூட்டிவந்து பாதுகாத்து வாழவைக்கின்றோம்".

"இங்கு வந்து என்ன நடந்தது. ஒன்றும் நடக்கவில்லை. என்னமோ குறைந்தது, கூடினது என்று கதைக்கிறியள். இங்கு வந்த நாள் தொடக்கம் ஒட்டியுறவாடி ஒரேகுடும்பமாக இருந்துவிட்டு, இப்ப என்னவோ குறைந்தவர்கள் என்று கதைக்கிறியள்".

"உனக்கு உதொன்றும் விளங்காது. நாங்கள் சொல்வதைக் கேட்டு அமைதியாக இரு. எல்லாம் உனதும், தங்கச்சியினதும் நன்மைக்காகத்தான் சொல்லுகின்றோம்".

"இங்கு வந்தநாள் தொடக்கம் அவர்களுடன் ஒருகுடும்பமாக ஒன்றாகப் பழகி வாழ்ந்தோம். உங்கள் ஆதரவுடன்தான் நானும் ரஞ்சனும் ஒருவரை ஒருவர் விரும்பிப் பழகினோம். இப்ப வேண்டாம் என்றால் எப்படி முடியும்"?

"ஏன் முடியாது? சொல்வதைக் கேள். கெதியாக நல்ல மாப்பிளையைப் பார்த்து உனக்கு கல்யாணம் செய்து வைக்கப் போறன்"

தர்சினி மிகுந்த கோபத்துடன்.
"அப்ப, உங்களுக்குப் பிடித்த மாப்பிளையைக் கல்யாணம் கட்டிப்போட்டுத் திரும்ப டிவோஸ்(விவாகரத்து) செய்துவிட்டு, எனக்குப் பிடித்த மாப்பிளையைத் திருமணம் செய்ய வேண்டுமோ"?

"என்ன கதைக்கிறாய்? என்ன வாய்க்கொழுப்பு? என்றாள் தாய்.

"அம்மா நீங்கள் சும்மா இருங்கோ? அப்பா நீங்கள்தானே தமிழர் கலை கலாச்சாரம் பண்பாடு என்று ஓயாமல் கதைப்பியள். உங்களுக்குப் பிடித்தால் தமிழ், இனம், கலை கலாச்சாரப் பண்பாடு. பிடிக்காட்டில் ஒன்றும் இல்லை. இதுதான் உங்கடை உயர்ந்த குடும்பமோ? இதுதான் தனிக்குடும்ப அல்லது தனிநபர் வழிபாடோ? இதனாலேதான் தமிழினம் இன்னும் அல்லலபட்டு, அவதிப்பட்டு





அழிந்து கொண்டிருக்கின்றது. உலகைப் பார்த்து மானிட முன்னேற்றத்தைப் பார்த்து நாங்களும் முன்னேற வேண்டும். கிணற்றுத் தவளையாக இருந்துகொண்டு, கத்திச் செத்துக் கிணற்றையும் அழுக்காக்காமல் வெளியில் வாருங்கோ! நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும், உலகையும் சுத்தமாக்க முயல வேண்டும். எங்கள் குடும்பம் கௌரவமான குடும்பம் என்று, நாங்கள் மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், மற்றவர்கள் குடும்பமும் கௌரவமான நல்ல குடும்பம் என்பதை ஏற்று மதித்து வாழ வேண்டும். மற்றவர்கள் போற்ற நாம் வாழ வேண்டும். யாவரும் தமிழர்கள் என்ற ஒரே நோக்கில் வாழ்வோம். இனிமேலும் வேண்டாம் நமக்கு இந்த வேற்றுமைகள்", என்று முழங்கியவள், அமைதியான குரலில்...

"உங்கள் வக்கிரமான எண்ணங்களை மாற்றுங்கள், உங்கள் முடிவை மாற்றுங்கள், எனக்கும் ரஞ்சனுக்கும் நடக்கும் திருமணத்திற்கு ஆசீர்வதிக்க, வாழ்த்த வாருங்கள்! உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்போம்". எனக்கூறி வீட்டைவிட்டு வெளியேறினாள் தர்சினி.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அவனில்லை.

அம்பலவன் புவனேந்திரன்.. Duisburg

மனம் மிகவும் சஞ்சலப்பட்டுக்கொண்டே இருந்தது.

அவர்கள் ஏன் என்னை அப்படிப் பார்த்தார்கள் ஒரு அற்பனாகப் பொதுவில் என்னையும் நினைத்துக் கொண்டார்களா...?

எத்தனையோபேர் வேலைசெய்யுமிடத்தில் இருக்கும்போது குறிப்பாக ஏன்- என்னிடம் மட்டும் கேட்டார்கள் ? நான் ஒரு வெளிநாட்டவன் என்பதாலா? அல்லது மற்றவர்கள் எல்லோரும் வெள்ளையர்கள் என்பதாலா...?

ஆயிரம் கேள்விகள் ராஜனின் மனதில் எழுந்து பதிலின்றி மறைந்தன. நேரம் நள்ளிரவைத்தாண்டி நாற்பத்தைந்தாகிக் கொண்டிருந்தது. சங்கடமும் சஞ்சலமும் தூக்கத்தை தூரத்தே துரத்தியடித்தன. எத்தனை மணிக்கு நித்திரையாகிப்போனானோ அவனுக்கே தெரியவில்லை

காலை எட்டு மணியளவிலே விழித்தபோதும் நேற்று வேலைத்தலத்தில் நடந்த நிகழ்வு நிழலாய் நிம்மதியைக் கலைக்க எத்தனித்தது...

சந்தேகம் சந்தோசத்தை சாவடிக்கும் சக்தியுடையதென்பதை இன்றுதான் அவனுணர்ந்தான். சிந்தனையைத் திசைதிருப்பவும் வழமையான காரியமான காலநிலையை அறிந்துகொள்ளவும் படுக்கையை விட்டெழாமலே தொலைக்காட்சியை இயக்கினான். செய்திகள் நிறைவாகும் நேரம் இறுதிச்செய்தி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.





கடவுச்சீட்டில் ஆள்மாறாட்டம் செய்ததன் பேரில் ஆசியநாட்டிளைஞர் ஒருவர் விமானநிலையத்தில் கைது. அவரை விசாரித்தபோது மேலும்பல ஆள்மாறாட்டமோசடிகள் தெரியவந்துள்ளமையினால் அவ்விளைஞருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நிறைவாக கால நிலை...அன்றைய காலநிலையை அறிந்துகொண்டபின் தொடர்ந்து பார்க்க மனம் ஒவ்வாமல் நிறுத்திவிட்டுப் புரண்டு படுத்தான்.

அறையைக்கூடத் துப்பரவுசெய்ய மனமில்லாது சோர்வாகவும் அசதியாகவும் இருந்தது.... வாரத்தில் கிடைக்கின்ற இந்த ஒரு நாளைக்காக சின்னச்சின்னதாக வேலைகளைப் பாக்கி வைத்திருந்தும் அவற்றைச்செய்து முடிப்பதிலிருக்கின்ற திருப்தி பல்கலைக்கழக விரிவுரையிலோ பகுதிநேர வேலையிலோ அவனுக்குக் கிடைப்பதில்லை.

தங்கியிருக்கின்ற விடுதி அறையைத் துடைத்துத் துப்பரவாக்குவதில் தொடங்கி சமையல், உடுப்புக்கழுவுதல், வாரத்தில் ஒருநாள் ஒருசமையலுக்கான மளிகைக்கொள்வனவு, நீண்டதூக்கம், மாலையில் பூங்காவில் அமர்ந்திருந்து புத்தகம் படிப்பது என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும்..

ஊரில் வாழும்காலத்தில் இவைகளில் நீண்டதூக்கத்தைத் தவிர வேறெதுவும் செய்ததாக அவனுக்கு ஞாபகமில்லை...

சிறுவயதுக்குழப்படிகள்...அம்மாவின் அன்பான கண்டிப்பு தங்கையுடன் செல்லச்சண்டைகள் பாடசாலை விட்டுவந்தும் காற்பந்தாட்டம் நண்பர்களுடன் அரட்டை அடித்தல் பண்டிகை நாட்கள் கோவில் உற்சவங்கள் திருவிழாக்களில் கண்விழித்து திருக்கோவிலை வலம்வருதல் பாடசாலைக்கலைவிழாக்கள் இவைகளை மறக்கமுடியுமா? எவ்வளவு இரம்மியமான நாட்களவை..? அந்த மண்ணின் அமைதியும் சுகந்தமும் பறிபோனபின் எவ்வளவு வருடங்கள் களவுபோய்விட்டன.

ராஜன் உயர்தரவகுப்பில் சித்தியாகி பல்கலைக்கழக நுழைவுக்குத்தயாராக இருந்தபோதுதான் தந்தையாரின் அகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் நிகழ்ந்தது. நிலக்கண்ணிவெடியில் சிக்கிய பேருந்தில் பயணித்தவர்களில் பாதிக்குமேற்பட்டோர் தலத்திலே பலியான சம்பவமானது இலங்கைத் தமிழர்கள் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினாலும் ராஜனின் உள்ளத்தை உலுக்கி சிதைத்து விட்டிருந்தது.

அவன் மீண்டுவந்து சாதாரணமாக உலவுவதற்கு நீண்ட நாளெடுத்தது. சித்தப் பிரமை பிடித்தவன்போல் ஒன்றரையாண்டுகள் இருந்தவனை தாயார் மிகவும் பிரயத்தனப்பட்டு மீட்டெடுத்தா ளென்றால் அவளின் விடாமுயற்சியும் தெய்வ அனுக்கிரகமு மென்றெ ஊரவர்கள் பேசிக்கொண்டார்கள். புதியமனிதனாக ராஜன் உலாவந்தபோது ஊரே அவனை ஆச்சரியத்தோடு விழிபிதுக்கிப் பார்த்தது.

தன்படிப்பை மேலும் படிப்பதற்கு வசதியில்லாததாலும் குடும்பச் சூழ்நிலை அவனை அழுத்தி அமுக்கியதாலும் வேலை தேடவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டான் போர்ச்சூழலால் தூர இடங்களில் கிடைத்த வேலைகளுக்குப்போக தாயாரின் சம்மதம் கிடைக்கவில்லை. அப்போதுதான் யேர்மனில் வசித்துவந்த தன் மாமாவின் உதவியை நாடித் தன்தாயாரின் ஆலோசனை யுடன்கடிதம் எழுதினான்.

அவரின் ஓராண்டு முயற்சியும் பணவிரையமும் ராஜனை இங்குகொண்டு விட்டது.தான் இங்கு வந்தபோது வேலை செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

மாமா விடவில்லை "தம்பி நீங்கள் நல்லாப்படியுங்க. பிறகு விரும்பிய வேலையை எடுத்துக் கொள்ளலாம்.. எங்களமாதிரி றெச்ரோரண்டிலயும் தோட்டங்களிலும் கடைகளிலும் வேலை செய்யிறத்துக்கா உங்கள எடுத்தனாங்க.. படிச்சு நல்லாபெரியாளா வாருங்க வேலைகள் தானாவரும்.."

மாமாவுடன் அவன் எதுவும் பேசமாட்டான். 22 வருடங்களுக்கு





முன் பார்த்த மாமா வேறு வெளிநாட்டுக்கு வந்தபின் பார்க்கும் மாமாவேறு.

அவர் மிகவும் மாறியிருக்கிறாரா அல்லது வெளிநாட்டுச்சூழல் அவரை மாற்றிவிட்டிருக்கிறதா என்று அவன் ஆராய்ந்து பார்க்கவிரும்பவில்லை.

"....உங்கள வேற பேரிலதான் பதியவேணும்... அப்பத்தான் கேச (வழக்கை) வெல்லலாம்...நடராசா என்றபேருக்குத்தான் நான் விண்ணப்பம் எல்லாம் எழுதி வச்சிருக்கன்.

இதால பின்னுக்கு பிரச்சினை ஒண்டும் வராதா என்று அவனுக்குக்கேட்கவேண்டும் போலிருந்தது. பேசாமலே மாமா சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"......நமக்கு நல்ல விசாதான் முக்கியம். நாங்க வந்தநேரங்களில இப்பிடி யாரெண்டாலும் உதவிசெய்திருந்தா கேச வெண்டிருக்கலாம்...அதவிடுவம்: பிறகு.... நான் எல்லாத்தையும் பிறகு வடிவாச் சொல்லித்தாறனே..."

மாமா கதைத்தபடியே நகர்ந்தார்.

மாமாவின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டவனாக நடந்துகொள்ள வேண்டுமென்று வழியனுப்பிவைக்கும் போது- அம்மா சொல்லியனுப்பியது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

கடந்த 3-4 நாட்களாக ஊர்க்கதைகளை விசாரித்தபடி மாமாவும் மாமியும் தன்னை பதிவது சம்பந்தமாக நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடுவதை அடிக்கடி கேட்கக்கூடிதாக இருந்தது..

"....தம்பி நீங்க சிதம்பரம் நடராசா என்றபேரையும் நான் சொல்லுகிற பிறந்த திகதியையும் வந்துசேர்ந்த திகதியையும் மட்டும் மனப்பாடமாக்கி வச்சுக்கொள்ளுங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியப்போகும்போது இவ்வளவும் போதும்.. 7-8 மாதத்துக்குப் பிறகு விசாரணைக்கு கூப்பிடுறபோது நான் மற்ற எல்லாத்தையும் விவரமாச் சொல்லித்தாறன்... நீங்க ஒன்றுக்கும் யோசிக்கவேணாம். நீங்க மொசுக்கோவில நிக்கும்போது நம்மட ஊரில குண்டுபோட்ட செய்தி பேப்பரில வந்ததுதானே அத நான் பத்திரமா எடுத்துவச் சிருக்கன்...அதில 6-7 பெடியன்கள் செத்தது தெரியும்தானே அதவச்சுத்தான் கேசு போடவேணும்... அதோட உங்கட கண்ணை யும் காட்டி வைத்தியம் செய்யவேணுமெண்டு அக்கா கதைக்கும் போது சொன்னவ..."

ராஜன் மாமாவின் கதைகளை இந்த நாட்டின்மக்களின் நடவடிக்கை- காலநிலை - சூழலைப் பார்ப்பதுபோல் வியப்பாகவும் வினோதமாகவும் பார்த்தான்...

நாட்கள் நகர்ந்தன கந்தையா ராஜ்குமாரர் - சிதம்பரம் நடராசாவாகி விண்ணப்பங்கள் உரிய இடத்தில் ஒப்படைக்கப் பட்டன. விசாரணைகளில் மாமாவின் திட்டப்படியும் சட்டத்தரணியின் ஆலோசனைப்படியும் ராஜனுக்கு சாதகமான நல்லதீர்ப்பும் கிடைத்தது.

8 வயதில் மத்தாப்பு வெடித்தபோது ராஜனின் கண்ணில் ஏற்பட்ட பார்வைக்குறைவு இங்கே அறுவைச்சிகிச்சைமூலம் நிவர்த்தி யானது. ராஜனின் படிப்பில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் பல்கலைக் கழகத்தில் மென்பொருள் பொறியல் துறையில் இறுதியாண்டு பரீட்சைக்குத் தன்னைத் தயார்செய்து கொண்டிருக்கின்றான்.

தனக்குக்கிடைக்கின்ற உதவித்தொகையில் படிப்புக்கும் உணவுக்குமே போதாதிருப்பதால் மாமாவின் உதவிகளை மேலும் எதிர்பாராமல் தன் பல்கலைக்கழக விரிவுரை முடிந்து வந்து வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் ஒரு உணவுவிடுதியில் வேலை செய்வதில் கிடைக்கின்ற வருமானத்தில் தனது சிறுதேவைகளைப் பூர்த்திசெய்து வந்தான்.





தொலைபேசி அலறியதால் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து எடுத்தான். முறுமுனையில் மைக்கல் "... ராஜ் என்னை மன்னிப்பாயா....? நான்தான் உன்னைத் தப்பாய் நினைத்து விட்டேன்....

"...அது இருக்கட்டும் செல்போன் கிடைச்சுதா.......? யார் எடுத்து வைத்திருந்தார்கள்...?" ராஜன் ஆவலோடு விசாரித்தான்.

"........சச்ச .அதை ஒருவரும் எடுக்கல்ல..... அது கீழே தவறி விழுந்து கிடந்தது... நான்தான் சரியாகப் பார்க்காமல் உன்னை சந்தேகித்தேன் ராஜ் தயவுசெய்து என்னை மன்னித்து விடு... அடுத்தவாரம் என்னை நீ சந்திக்கும் போது உனக்கு ஒரு வெகுமதிகாத்திருக்கும்..."

வெளிப்படையாகவே மைக்கல் கதைக்கும்போது ராஜனின் மனதுக்கு ஆறுதலாகவும் சந்தோசமாகவும் இருந்தது.

நம்மவர்களில் எத்தனைபேர் இப்படி வெளிப்படையாகவும் மற்றவர்களை நோகடிக்காமலும் வாழ்கிறார்கள்..?

மனிதன் தவறுசெய்வது வழமை. அதையுணர்ந்து வெளிப் படையாகத் தன்தவறைத் தெரியப்படுத்தி மன்னிப்புக்கேட்பவர்கள் நம் சமூகத்தில் எத்தனைபேர் வாழ்கிறார்கள் என்றால் மிகச்சொற்பமென்றே எண்ணத்தோன்றியது.

அன்றையதினம் வழமையான ஞாயிறாக மாறியதில் ராஜனுக் குத் திருப்திதான். அந்தத் திருப்தியோடு காலைக் கடன்களை விரைந்து முடித்துக்கொண்டு மளிகைக் கொள்வனவுக்குத் தயாராகி பாதணியைநோக்கி நடக்கும்போது சுவரில் மாட்டியிருந்த அம்மா-தங்கையின் புன்னகைசுமந்த புகைப்படம் கண்ணில் தென்பட்டது.

அம்மாவுடன் கதைத்து கிட்டத்தட்ட ஒருமாதமாகிவிட்டதே என்று தனக்குள்ளே கதைத்துக்கொண்டு தொலைபேசி அட்டை யைத் தேடிப்பிடித்து எண்களை அழுத்தி அழுத்தி அலுத்து மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைாத விக்கிரமாதித்தன்போல் முயற்சி செய்தபோது மறுமுனையில் அம்மாவின் குரல்கேட்டதும் மகிழ்ந்துபோனான்.

"!....எப்பிடி இருக்கிறாய் மனே... கதைச்சுக் கன நாளாச்சு... வசந்தியும் நேற்றுக்கதைச்சவள் ...அண்ணனுக்கு சோதின நெருங்குது தானே...அதுதான் எடுக்கல்ல..எண்டு..."

"நல்லா இருக்கனம்மா.....நீங்க எப்பிடி இருக்கிறீங்க...?வசந்தி நிக்கிறாளா..?"

"......அவளத்தான் நான்பாத்துக்கொண்டு ரோட்டில நிண்டனான்...வகுப்புக்குப்போன தங்கச்சி வாறநேரம்தான்...வந்திருவாள் நீ கதைதம்பி... எப்பிடி படிப்புகளெல்லாம் போகுது....."

".ஓமம்மா...நல்லாப்படிக்கிறன்.....இன்னும் மூண்டுமாதம் தான் இடையில இருக்கு...சோதின முடிஞ்சுதெண்டால்தான் ஆறுதல்...வசந்தி படிக்கிறாளா எப்ப அவளுக்கு சோதின... போனமுற மாதிரி இந்தமுறையும் குழப்பிப்போடுவாங்களோ..."

".....என்னத்தத்தம்பி சொல்லிறது எப்ப எது நடக்குமெண்டே சொல்லேலாது.....ஒருநாளைக்கு பார்த்தால் கர்த்தால்... ஒரு நாளைக்கு செல்லடி...நாலஞ்சு நாளைக்கு ஊரடங்கு..... அதுக்குள்ள ஆள்கடத்தல் கடைகளில் சாமான்கள் வாங்கேலாத ... அகதியா வந்த நிறையச்சனம் அங்கையும் இங்கையும் எண்டு அலையுதுகள் சனங்க படுற பாட்டப்பாக்கேலாது வயதுபோனதுகளும் வருத்தக்காறர்களும் படற பாடு சரியான பரிதாபம் இப்பிடி எங்கட காலம்போகுது.....முந்தநாள் கூட ராசன ஆமிக்காரன் சுட்டுப்போட்டானுகள்...."

"....எந்த ராசனம்மா...."

"உன்னோட ஆறாம்வகுப்புவர படிச்சிட்டு திருகோண மலைக்குப்போன சிதம்பரத்தார்ர மகன் நடராசன உனக்குத்தெரியாதா





ராஜன் நினைவுகளை பின்னோக்கி நகர்த்திக்கொண்டிருக்கையில் அம்மாதொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாள்

"....அவன் ஊருக்கு வந்துநிண்டபோதுதானே பள்ளிகிறவுண்ட்சில பொம்பர்வந்து குண்டுபோட்டது.. நீ வெளிநாட்டுக்குப் போன மூண்டு மாசத்துக்குப் பிறகு இது நடந்தது 7பெடியன்கள் செத்துப்போனபிறகு உயிரோட தப்பினதுகளுக்குள்ள ராசனுக்குக் கண்தெரியாமப்போயிற்று பிறகு அந்தப்பெடியன்ர கண் ரெண்டும் குருடாப்போனதால ஆசுபத்தரியில வச்சு ஒப்பிறேசன் பண்ணினாங்க ஒண்டுமே சரிவரல்ல ஒப்பிறேசன் முடிஞ்சுவந்து ஊரில அவன்ர சித்தியிரவீட்டில தான் இருந்தவன் ...முந்தநாள் பொழுதுபடுற நேரத்தில இவன்பிள்ள மெயின்றோட்டில மதகோரம் தடிய வச்சிட்டு நிண்டிருக்கான்

ரக்கில வந்த ஆமிக்காரனுக்கு வித்தியாசமாத் தெரிஞ்சிருக்குப் போல அவடத்தே சுட்டுப்போட்டு போயிட்டானுகள்... என்னபரிதாபம் ஊரில எல்லாச்சனமும் அழுதிட்டு போய்முறையிட்டா தவறுதலா நடந்துபோனதெண்டு ஆமிக்காரர் சொன்னானுகளாம்...என்ன உலகம்டா தம்பி..."

அம்மாவின் உரையாடல் நீண்டுகொண்டுபோனது ராஜனால் எதையும் ஜீரணிக்க முடியவில்லை...அவனின் சிந்தனைச்சங்கிலி நீண்டுகொண்டே போனது.

அதளபாதாளத்தில் கேட்பதுபோல் அம்மாவின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

மறுமுனையிலிருந்து பதிலேதும் கிடைக்காததால் கலோ கலோ என்று பலமுறை உரத்துக்கேட்ட ஒலியினால் தன்சுய நினைவிற்கு ராஜனால் வரமுடிந்தது.

தன்னை சுதாகரித்துக்கொண்டு தொலைபேசியில் ஏதோ கோளாறு இருக்கவேண்டும் என்று அம்மாவைச்சமாளித்து விடைபெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....ராசன்...ராசனா....இறந்துபோனான்?

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு கடைக்குச்சென்று சாமான்களை வாங்கிக் கொண்டு வரும்போதே அவனுக்கு காற்றில் நடப்பதுபோன்ற பிரமை..

வரும்வழியில்... பூங்காவைக்கடக்கையில் அமர்ந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

கைப்பையை வைத்துக்கொண்டு அமர்ந்தான். மனம் மீண்டும் சித்தனைச்சுழியில் சிக்குண்டது ..பல்லாயிரம் கேள்விகளுக்கு விடைதெரியாமல் திண்டாடினான்..

.....நடராசனின் பெயரில் நான் நடமாடுவதா..?அவன்தானே இறந்துபோனான்...

அவனுடையபெயரில் நான் உலவுவதா? உண்மைதெரிய வருமிடத்து நான் குற்றவாளியாவேனே நான் குற்றமேதும் செய்யாமல் ஏன் தண்டனை அனுபவிக்கவேண்டும்... பரீட்சை முடிந்து பட்டம் பெற்றதும் ஊருக்குப்போய்வர இருந்த ஆசைகள்.. அங்குபோகிறவேளை விமான நிலையச் சோதினைகளில் கண்டுபிடித்தால்... இங்கிருக்கையில் எனக்கு எதாவது நடந்தால் என் பிணம்கூட என் குடும்பத்தில் ஒப்படைக்கப்படாதே...!

ராஜ்குமார் எப்படி -இறந்த நடராசனாக வாழமுடியும்..? நான் உண்மையை ஒத்துக்கொண்டால்.. வரும் விளைவுகள் பல்கலைக்கழகம்வரை என்னை என்ன நினைப்பார்கள்...? அம்மா தங்கையறிந்தால் எதிரொலி என்னவாகும்...பதில்கள்கிடைக்காத வினாக்களால் பதறிப்போனான்.

நான் நடராசனில்லை.. அவன் வாய் அடிக்கடி முணுமுணுத்தது... நான்எப்படி நடராசானாக இனிமேலும் வாழமுடியும்..? ஆள்மாறாட்டமோசடியில் நான்சிக்கிக் கொள்ளுமிடத்து பல்கலைக் கழகம்வரை என்கதை பேசப்படுமே எப்படி அங்கு தலை காட்ட





முடியும்? விடைகாணாத பலகோடி வினாக்களும் விரைவில் தான் சிக்கிக்கொள்ளலாமோ என்ற மனப்பயமும் அவனைமிகவும் ஆழமாக உலுக்கியது....

அதன் தாக்கம் தன் சுயநினைவை மெல்லமெல்ல கரைப்பதாய் ராஜனால் உணரமுடிந்தது.... வாய்மட்டும் நான் நடராசனில்லை.....என்று தொடர்ந்து உரைத்துக்கொண்டிருந்தது. காண்போரைப்பார்த்து நகைத்தான்.. நான் நடராசனில்லை.. என்பெயர் ராஜ்குமார் தெரியுமா..

யேர்மன் மொழியில் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான்..

சம்பந்தா சம்பந்தமில்லாமல் தனியாக உரையாடுவதைப் பார்த்த ராஜனுடன் பரிச்சயமான யேர்மன் இளைஞனொருவன் ஆச்சரியமாகப் பார்த்துவிட்டு மருத்துவமனையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது விசேடமாக வந்திறங்கிய வைத்தியர்களின் உதவியுடன் அங்கு எடுத்துச்செல்லப்பட்டு பரிசோதிக்கப்பட்டான்.

அவனிடமிருந்த ஆவணங்களைப்பார்த்து விபரங்களைச் சேகரித்த அதே வேளை பொலிசாரின் உதவியுடன் ராஜனின் மாமா வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்..

".....இவருக்கு ஏழெட்டு வருசத்துக்கு முன்புநடந்த குண்டுவெடிப்பில் கண்பார்வை போனதுடன்..மூண்டுவருசமா இப்பிடித்தான் புத்திசுவாதீனமாக இருந்தவர்..பிறகு கொழும்பு-அங்கொட வைத்தியசாலையிலிருந்து சுகமாகியபிறகுதான் இங்குவந்தார்..

ஏதாவது அதிர்ச்சிதரும்படியான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதா...என்று தொடங்கி பலகோணங்களிலும் ராஜனின் உடல்நிலை பற்றியதான கேள்விகளை மாமா மாமியிடம் வைத்தியர்கள் கேட்டும் திருப்தியான பதில் தொடர்பில்லாதுபோக பலனெதுவும் கிடைக்காது ஏமாந்துபோன இங்குள்ள வைத்தியர்களுக்கு ராஜனின் நிலை புதிரான விடயமாகவேபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"…..நீங்கள் வைத்தியம் செய்தவிபரங்களை இலங்கைலிருந்து எடுத்துத்தந்தால் நாங்கள் மேற்கொண்டு வைத்தியம் செய்ய உதவியாக இருக்கும்….."

………"சரி முயற்சிக்கிறோம்."

அவர்கள் விடைபெற்று வெளியே வரும்போது ராஜனின்மாமி கணவரைக்கேட்டாள்

"…ஏனப்பா இப்பிடிச்சொன்னனீங்க.. எங்கபோய் றிப்போர்ட் எடுக்கப்போறீங்க…"

"…..நீங்க சும்மா வாங்களன்…ஊரில இருந்து ஒரு கடதாசியும் எடுக்க ஏலாது யுத்தம் நடக்கிறதெண்டால் அவங்க பாத்துச்செய் வாங்கதானே… அத்தான் குண்டுவெடிப்பில செத்தபோது இவன் இப்படிமூளை குழம்பியிருந்துதானே பிறகு சுகமாகி நல்லாவந்தவன் எப்பிடியும் கொஞ்சநாளைல அவனுக்கு சுகம் வந்திரும்…"

"…எப்பிடி திடீரெண்டு இந்தப்பெடியனுக்கு இப்பிடி வந்ததப்பா…"

"… எனக்கென்ன தெரியுமப்பா …கூட்டாளிகளுமில்ல அவனுக்கு ..தமிழர்கள் இல்லாத இடத்திலதானே இவனிருக்கிறதால எவரும் இந்தவிசயத்தை கிழற இடமில்ல..

பிறகு எப்பிடி..? எனக்கெண்டா ஒண்டுமே விளங்குதில்ல..

நீயோசிக்கிறமாதிரி பயப்படுறதுக்கு ஒண்டுமேயில்ல.. வா வெளிக்கிடுவம்…."

மருத்துவமனை அறையொன்றுக்குள். "..நான் நடராசனில்லை ….. நான் ராசனில்ல…." என்றுதமிழிலும் ஜெர்மன்மொழியிலும் மாறிமாறி உரத்துக் கத்தும் சத்தம் அடிக்கடி அறைச்சுவரில் முட்டிமோதி தொடர்ந்து எதிரொலித்துக்கொண்டே இருந்தது…





# சாகா நினைவுகள்.

**திருமதி.சுந்தராம்பாள் பாலச்சந்திரன் - Differten**

எதுவெல்லாமோ எழுதிவிட்டேன்.

இன்று எதை எழுதுவது..?

உண்மையாக வாழவேணும்…நேர்மையாக வாழவேணும்… என்றெல்லாம் எழுதித் தள்ளிவிட்டேன்.

ஒருபொழுதாவது…நான் எழுதுவதுபோல வாழவேணும் என்று சிந்தித்தேனா..? இல்லை செயல்பட்டேனா..?

நேற்றுவரையில் என்நெஞ்சத்திரையில் எழுதிவைத்திருக்கும் சாகா நினைவுகள்தான்…சான்று பகரவேண்டும்.

என் எண்ணத்தில்… என் எழுத்தில் உண்மை உயிர்ப்படையுமாயின் இந்த உலகத்தில் வாழ்வதில் பெருமை கொள்வேன்.

எண்ணங்களை எழுத்தாக்கிவிடுவது எளிது. ஆனால்.. நான் இங்கே எழுதப்போவதாவது என் எண்ணங்களையா…?

சுந்தரன்..அழகான எனது பெயரது. அழகன் என்பதே அதன் பொருள். என் வாழ்வின் பெரும்பகுதி அழகிழந்து போனபின்னும் இந்தப்பெயர்மட்டும் இன்னும் என்னோடு… எனக்கேயுரியதாய்…

என்னை விட்டுப்பிரியாமல்… ஏன் என் உயிர் என்னுள் இருக்கும் வரையுமல்லவோ என்னோடு ஒட்டிக் கொண்டிருக்கப் போகிறது.

வாழ்க்கையில் யார் யாரோ வந்துபோனார்கள். எவையெவையோ வந்துபோயின. நாட்டைப்பிரிந்து வந்தபோது… ஊரைப் பிரிந்து வந்தபோது அது ஒரு இடைவெளி என்று எண்ணினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளைப்பிரிந்து பறந்து வந்தபோதுகூட.... ஒரு விடு முறை என்றே உள்ளம் சொல்லியது. ஆனால் உண்மைகள் சில நாளில் உறைந்தபோது இந்த உலகத்தை வெறித்துப் பார்த்தேன்.

தம்பி...தம்பி..தம்பி...' எனக் கடிதங்கள் காவிவந்த அத்தனை உறவுகளும் கனவில்கூட என் கன்னம்தடவி பேசினர்.

'...அக்காவுக்கு சீதனம் சேர்க்கவேணும்... அஞ்சுபத்தா யெண்டாலும் சேர்த்து அனுப்பு தம்பி...' அப்பாவின் அறிவுரைக் கடிதம்.

ஆரோடையும் அதிகம் பழகாதை ராசா..கவனம். பெத்தவயிறு எரிய நடவாதை தம்பி...'அம்மாவின் ஏக்கக்கடிதமது.

தம்பி..உன்னை நம்பித்தான் நாங்களிருக்கிறம். வெளிநாடு எண்டு வெளிக்கிட்ட சிலதுகள் விலாசம் கூட இல்லாமல் திரியி றதாய் கேள்விப்படுறம்...' அக்காவின் அசையாத நம்பிக்கைவரியது.

அண்ணா அம்மா செலவுக்குக் காசு தாறாவில்லை. நீங்கள் எனக்குத் தனியாய் அனுப்புறீங்களா..?' கெஞ்சிக் கேட்டிருந்தான் தம்பி...

அப்பப்பா ஆயிரம்தேவை இவர்களுக்கு. ஆனால் உழைப்ப தற்கு இங்கு நான் மட்டுமே.

உழைக்கவேணுமெண்டால் கூட்டல் கழுவல் என்று கண்ட கண்ட வேலையெல்லாம் செய்யவேணும்..'

அப்படிப் பலரும் சொன்னதைக்கேட்டபோது பறந்துவந்த போதிருந்த உற்சாகம் எங்கேயோ மறைய உடல் மட்டுமல்ல உள்ளமும் சோர்ந்துபோனது.

இப்படியிங்கு பொறியில் விழுந்தது நான் மட்டுமல்ல என்னைப்போல பலர்.





வாலிபவயதில் வயிற்றுப் பிழைப்புத்தேடி வந்ததால் என்வாழ் வையே தொலைத்துவிட்டேனா என ஏங்கினேன். கால்போன இடமெல்லாம் காசுதேடியோடிய போதுதான் இரவும் பகலும் உழைப்பில் போராடிக் களைத்து, உழுத்துப்போயிருந்த ஊரவர்க ளைக் கண்டேன். கலங்கினேன்

வாழ்வு என்பது இனி இவர்களுக்கு இல்லையா வரண்டு போனதா..'

கொதித்தேன். குமுறினேன். ஏன் வாழ்வை வாழ்வாக்கத் துடித்தேன். வந்துசேர்ந்தாள் சாரா.

நாட்கள் தவறாமல் நான் அவளைச்சந்திக்க வேலைதான் வழிகாட்டியது.

அதுவரையில் எந்தப்பெண்ணுமே தொட்டுப்பேசியறியாத என்னுடல் சாராவின் ஸ்பரிசத்தால் சிலிர்த்துப்போனது

தட்டியும் ஒட்டியும் அவள்பேசப்பேச என் வாலிப உணர்வும் மெல்ல எட்டிப்பார்த்தது. வயிற்றுப்பிழைப்புக்காக போன இடத்தில் என் வாலிப ஆசைகளை போட்டுடைப்பதா...?

திணறினேன். திக்குமுக்காடினேன். திக்கித்திக்கிப் பேசக்கூடிய அளவில்தான் அவளின் மொழியை அறிந்திருந்தபோதும் வசனங்க ளைத் தேடி அலையாமல் வாயில் வந்த கொன்னல் பேச்சில் குதூகலிக்கும் தாயைப்போல சாராவும் என்பேச்சால் குதூகலம டைந்ததைப் பார்த்தபோது..

காதலா இது என.... ***சீச்சீ*** இருக்காது. நிறத்தால் இனத்தால் மதத்தால் முற்றிலும் மாறுபட்ட என்னிடம் எப்படிக் காதல் வரும்....'

இனம் புரியாத மயக்கத்தில் என்மனம் தானாகவே விழுந்தது தவித்தது.

இவளே எனக்கு வாழ்க்கைத்துணையாகினால்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை இறக்கை கட்டிப்பறக்க அவளைப்பார்ப்பேன். அவள் முகம்சிவந்து நிற்கவில்லை. ஆனால் அந்த நீலவிழிகளில் காதலின் காந்தமிருந்தது.

அதன் பின் என் கனவும் வளர்ந்தது.

ஒவ்வொருபொழுதும் புலரும்போதே சாராவின் முகமும் என்னைத் தேடியோடிவரும்.

அதுபோல் மயக்கும் இரவுவரக் கண்களைமூடும்போது பகலில் பெற்ற இன்பநெகிழ்வையெல்லாம் வெற்றுணர்வாக்கிட விரைந்துவரும் அம்மாவின் முகம்.

அடித்துப்போட்டாற்போல் அப்படியே சோர்ந்துபோய் உறங்கிப் போவேன்.

மீண்டும் பொழுது புலரும். சாராவும் வருவாள். மனம் துடிக்கும். எத்தனையோ பெண்களைப்பார்க்கிறேன் இவளிடம் மட்டுமேன் இந்த ஈர்ப்பு.

வெறும் துடிப்பல்ல இது ஒரு வெறிபோல...

சாதி மதம் குலம் கோத்திரம் பார்த்துத்தான் திருமணம்செய்ய வேண்டுமென்று சொல்லும் வீட்டாரிடம் சாராவைப்பற்றி எப்படிச் சொல்வது..? என்ற சுமைநெஞ்சை அழுத்த... எதைஇழந்தாலும் இழப்பேன் என்சாராவை மட்டும் இழக்கமாட்டேன்...' என்று எனக்குள் சபத மெடுத்தபோதுதான் விசயம் வீடுவரை போய்விட்டது எனக்குத் தெரியவந்தது.

தம்பி.. உன்னுடைய எண்ணப்படி எதுவெல்லாமோ செய்த தாக அறிகிறோம்.. உனக்குப் பெண்பார்க்கும் காலம் வருமென்று காத்திருந்த எங்களையெல்லாம் இப்படி ஏமாற்றுவாயென்று கனவிலும் நினைக்கேயில்ல..





எங்களைவிடவும் உனக்கு காதல் பெரிசாப்போச்சோ..

நீ எது செய்தாலும் தம்பி என்ற உறவை வெறுக்க நாங்கள் தயாரில்லை. இதற்காக எவளோ ஒருத்தியை எங்களின் உறவென்று கொண்டாடுவோமென்று எண்ணிவிடாதே..!'

தேள் கொட்டியதுபோல் தேகமெல்லாம் வலித்தது அக்காவின் அன்பு.

அக்காவைப்போல அழகும் அந்தஸ்தும் உள்ளவன்தான் கணவனாக வரவேணும் என்று கனவுகண்டாளா என்சாரா..? இல்லை

சாதி சமயம்தான் பார்த்தாளா..? என் அன்பை மட்டுமே தேடிவந்தாள் என் அரவணைப்புக்காக மட்டுமே ஏங்கிநின்றாள். இதுதானே காதல். இதுதானே வாழ்க்கை.

கட்டியணைத்து முத்தமிடும்போது கூட என் குடும்பத்தாரின் குசலத்தை மட்டுமே கேட்பாள். என்சுமையில் தானும் பங்கெடுத்தாள்.

தங்கத்தையே உரசிப்பார்க்கும் என் வீட்டாரோ தங்கமான சாராவையும் ஒதுக்கிப்பேசினர்....'

ஆனால்..நான்..

நான் சாராவை நேசித்தேன். அவள் நட்பைப் பகிர்ந்தேன்.

அவளின் நல்ல குணங்களை மெச்சினேன்.அவளே என் மனைவியாக வரவேண்டும் என்ற ஆசையையும் நிறைவுசெய்தேன்.

இல்வாழ்க்கைக்குள் இணைந்தோம்...பிணைந்தோம்..

வாழ்க்கை வாழ்வதற்கே என்று வாலிபமுறுக்குடன் பேசியநான் கணவன் மனைவி என்ற கட்டமைப்பான உறவுக்குள் வளையும் போதுதான் வளைவு சுழிவுகளின் வலிமை உணர்ந்தேன். என் மனைவி எப்படியெல்லாம் இருக்கவேணுமென்று ஆசைப்படேனோ அதற்குமேலாக அவள் சேலைகட்டி சிங்காரம் செய்யுமளவுக்கு என்னுள் கலந்தபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியும் வெள்ளைக்காரி மாறிவந்திட்டாளா என்ன..' என்று என்னிடமே வாய்பிழந்து சிலர்கேட்டபோது எனக்குள்ளே பெருமை கொடிகட்டிப் பறந்தது.

ஆனால் சாரா......?

தென்றல் திசைமாறிப்போனது. என் அம்மாவைப்போல் அணைத்து ஆறுதல் சொல்வாள். அப்பாவைப்போல அறிவுரை சொல்வாள்.

அக்காவைப்போல அன்புசெலுத்தியவள் தம்பியைப்போலக் குறும்பு செய்துகுதூகலித்தவள்.... பெரும் போரைத் தொடங்கிய போது என் நெஞ்சு நொருங்கிச் சிதறியது...

சுந்து உங்கடை அப்பா அம்மா சகோதரங்கள் பற்றித்தான் எப்பவும் பேசுறீங்க... இங்கை நானும் பிள்ளைகளும் இருக்கிறம் எண்டது மறந்துபோச்சா...' சொன்னாள்... கேட்டேன்....

சுந்து நீங்கள் உழைக்கிறதை ஊருக்கு அனுப்பிவைக்கிறீங்க உங்க பிள்ளைகளுக்கு என்ன வைச்சிருக்கிறீங்க...' கேட்டாள் மௌனித்தேன்...

சுந்து நான் உங்களை நேசிக்கிறேன்...ஆனால் கூடிவாழ்ந்து இனியும் கூத்தாடவிரும்பேல்லை...' பழித்ததுபோல் கேட்டதும் என் நாடிநரம்பெல்லாம் சூடேறியது. உடம்பு தகித்தது.

நானாகத் தேடிய வாழ்வு நரகமாகிப் போகுமென்று நினைக்க வேயில்லை. குமுறினேன். குழந்தைகள் விளையாட்டா இது..? குடும்பம் அல்லவோ என்று தடுமாறிநின்ற என்னிடம் தானாகவே வந்து விவாகரத்துக் கேட்டாள் சாரா....'

என் இரத்தக்கொதிப்பு ...ஏற்றுக்கொள்.... என்று சொன்ன போதும் என் இனப் பெண்ணானால் இப்படிச்சொல்வாளோ... என்ற ஏக்கமும் எட்டிப்பார்த்தது..

அவளோ சர்வசாதாரணமாய் 'சுந்து நான் இன்னும் உன்னைக் காதலிக்கிறேன்...' என்று சொல்லிப் பிரிந்துபோனாள்





நாட்கள் நகர்ந்தன. நானோ நரகவேதனையில் துடித்தேன்.

அப்பா அப்பாவென்று அடிக்கொரு தடைவ கூப்பிடும் அருமை மகள் கோபுவை வாரவிடுமுறையில் மட்டுமே பார்க்கமுடிந்தது...'

சாமம் வரையில் என்கழுத்தைக் கட்டியணைத்தபடி தூங்கும் சாமந்திக்குஞ்சு இப்போ... எப்படி ...? 'அழுதேன்.

அறைக்கதவைப் பூட்டிவிட்டு அவர்களின் படங்களில் ஸ்பரி சத்தை உணர்ந்தபோது என்கைகளெல்லாம் நடுங்கியது. சாராவோடு நான் வாழ்ந்த இத்தனை வருடத்தில் ஒருநாள்கூடத் துயரப்பட் டதில்லை. துடித்ததில்லை...

பூவும்பொட்டும் இல்லாமலே பூரித்துப்போயிருக்கும் அவள் புன்சிரிப்பில்தான் என்பொழுதுகள் புலர்ந்தன. அதையெல்லாம் மறந்துபோய்விட்டாளா.....'என மனசு மறுகியது.

ஆனால்... '....இனி ஒருபோதும் நாங்கள் இணைய மாட் டோம் என்பதை சட்டம் உறுதிசெய்திருப்பதை நினைத்ததும் மனது சஞ்சலப்பட்டது....'

ஊரையும் உறவுகளையும் விட்டுப்பிரிந்து வந்தபோது கூடஇப்படித்துயரம் என்னை வாட்டவில்லை....'

சாரா சற்று விட்டுக்கொடுத்து நடந்திருந்தால் இப்படி வாழ்க்கையும் முறிந்திருக்காது. நானும் குழந்தைகள்போல வாடியிருக்கமாட்டேன்...மனதுக்குள் திட்டினேன் நித்திரையில் கூட நிம்மதியின்றி தவிக்கவிட்டாளே என்ற பிரமையே என்னைப் பைத்தியமாக்கியது. என்கைகளில்தானே தலையைவைத்துத் தூங்கினாள்...

அதையெல்லாம் மறந்து... உறவை அறுத்துப் போய் விட்டாளே...'

அரற்றினேன். பிதற்றினேன். என்நிலை எவருக்கும் வரக் கூடாதென எண்ணினேன். உறவுகளின் சுமைக்குத் தலைகொடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதால்தானே அழகான எனது வாழ்க்கைப்பிணைப்பு அறுந்து போனது என அழுது கொண்டிருந்தேன்..

ஆனால் அவர்களோ இடையில் அறுந்துபோன என்குடும்ப வாழ்க்கைபற்றி இழித்துப்பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஆழம் நீளம் தெரியாமல் காலைவிட்டால் உப்பிடித்தான் வரும் நாங்கள் என்னசெய்யிறது...' அப்பா தனது குற்றச்சாட்டோடு அந்நியருக்குச் சொல்லுவதுபோல தனது அனுதாபத்தை எழுதியிருந்தார். '....மோகினிப் பேயிலிருந்து விடுபட்டதே போதும் தம்பி இனிமேலெண்டாலும்

எங்கட நினைவோட இருராசா ...'அம்மாவின் அருமையான கண்டுபிடிப்பது.

தம்பி நீ ஒரு தமிழ்பொம்பிளையைக் கட்டியிருந்தால் இப்பிடி பிள்ளையளையும் பிடுங்கிக்கொண்டு ஓடியிருப்பாளோ..? போனவள் போகட்டும் நீ கவலைப்படாதை.... என்ர பிள்ளைகள் எப்பவும் உனக்குப்பிள்ளைகள் மாதிரித்தானே....' நீதி நியாயம் சொல்லும் எங்கள் வீட்டு நீதிபதியான அக்காவின் நியாயத்தீர்ப்பானது.

இதுதான் உலகம். நான் குடும்பமாகக் குதுாகலித்திருந்த போதும் திட்டித்தீர்த்தார்கள் துயரத்தில் துவண்டிருந்தபோதும் குத்திக்கிளறினார்கள். எனக்கென்றும் ஒருகுடும்பம் இருந்ததை இவர்கள் அங்கீகரித்திருந்தால் என் சாராவைத்தொலைத்திருப்பேனா..இல்லை குழந்தைகளைத்தான் பிரிந்திருப்பேனா.?.'

அழுகை ஆற்றாமை எல்லாமே ஒன்றுசேர்ந்து என்னை வருத்திக் கொள்ளும் போதெல்லாம் வாய்விட்டுச் சொல்லியாறிய நண்பனும் சிலதடவை சினந்து

'உன்ரை வீட்டிலை ஆர் கவலைப்படிகினம் நீ என்னடா எண்டால் சும்மா பைத்தியகாரன் மாதிரிப் புலம்பிக்கொண்டிருக்கிறாய்.. எல்லாத்தையும் விட்டுதள்ளிப்போட்டு சந்தோசமாக இருக்கிற வழியப்பார்...' என்று சொல்லிக்கொண்டான். யோசித்தேன்.முன்னும்





பின்னுமாய் வாழ்க்கையின் எல்லாப்பக்கமும் பற்றியோசித்தேன்...

அம்மா அப்பாவோடு அமைதியாக வாழ்கிறா..அக்கா.. அத்தானோடு ஆனந்தமாக வாழ்கிறாய். ஏன் என் சாராகூட இன்று எவன் மடியிலாவது துாங்கக்கூடும். ஆனால் நான்..? வேலையும் வீடும் என்று சுற்றிவருவதோடு வேதனையை மட்டுமே வாழ்க்கையாய்...

முடியாது நானும் வாழவேண்டும் இவர்கள் எல்லோரையும் போல வாழவேணும். வாழ்க்கையைத் தொடரவேண்டும்.

நண்பனின் நயமான பேச்சும் நமைச்சல் எடுத்துக்கொண்டிருந்த என் இல்லறசுகமும் மீண்டும் ஒருவாழ்வை அமைக்கத் துாண்டியது. தொட்டேன். தொடர்ந்தேன். என்னைப்போல காய்த்துக் கல்லெறிபட்டுக் காயப்பட்டுநின்ற சாந்தியே வாழ்வின் புதியபக்கத்தைப் புரட்டப் பக்கத்துணையானாள்.

கணவனின் இழப்பைவிடவும் கைம்பெண்ணான தன்னைச் சமுதாயம் படுத்தியபாடே புதியவாழ்க்கைக்குள் தன்னை இழுத்துவந்ததாகச் சொன்னபோது என் நெஞ்சு நெகிழ்ந்தது.

ஒருபெண் ஆணோடு சேர்ந்து வாழ்ந்தால்தான் பெருமைஎன்று கொண்டாடும் உளுத்துப்போன பண்பாடு இங்குமா உலவுகிறது எனக் கவலைப்பட்டேன்...

இனிமேலாவது இவள் இனிமையாக வாழவேண்டும் என்று உறுதியெடுத்தேன்.

என் எண்ணங்களைப் பகிரவும் இனிதாகப்பேசி மகிழவும் இங்கிதமாய் வாழவும் வேண்டுமென்று இறைவன் எண்ணிவிட்டான் போலும் என்று மனம் கணக்கிட்டது. மகிழ்ந்தேன்.

இனியவாழ்க்கை வாழ இன்னொரு சந்தர்ப்பம் தந்திருந்ததை நினைத்து மகிழ்ந்தவேளையில் மீண்டும் இடி மழை பெரும்புயல்....'

"நீங்கள் இனி எனக்குமட்டும்தான் சொந்தம். உங்களுக்கு வேறை உறவுகள் இருக்கிறதை என்னாலை தாங்கேலாது.." என்று கண்கலங்கி சாந்தி சொன்னபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சாந்தி ஏன் இப்பிடிக் கதைக்கிறியள். நான் அவளை மறந்திட்டன். கடைசிவரைக்கும் அவளோட சேரமாட்டன் எண்டதை நம்பேல்லையே..." என்றேன்.

அவள் கண்களைப் பிசைந்தபடி என்கையில் ஒருபையை வைத்து.....நான் உங்களை நம்பிறன்.. நம்பியே வந்திருக்கிறன்.
.....ஆ...னா...ல்...

"நாங்கள் புதிசாய் வாழுற இந்தவீட்டில இந்தப் பழசுகள் இனிமேல் இருக்கவேண்டாம்....எறிஞ்சுவிட்டு வாருங்கோ.." என்றாள்.

பையைத்திறந்து பார்த்தபோது என் நெஞ்சுபகீரென்றது. என் அன்புமகன் கோபுவின் பிஞ்சுக்கைவரைந்து தந்த ஓவியங்கள் என்சாமந்திக்குஞ்சு அப்பாவுக்கென்று கிறுக்கித்தந்த படங்கள். அவர்களது புகைப்படங்கள் எனப் பலபொக்கிஷங்கள்.

அக்கணமே உலகம் என் தலைமேல் விழுந்துசிதறியது. சாராவே எனக்கு எந்தக்குறையும் வைத்ததில்லை அவள் பெற்றுத் தந்த என் செல்லக்குழந்தைகள் எனக்கென்ன செய்தார்கள்.

மறக்கவேணுமாம்... முடியுமா... என்னுள்ளே என் இரத்தம் ஓடக்கூடாதாம். அப்படியென்றால் நான் ஒரு ச...ட...ல...ம் என்றா நினைக்கிறாள்....?

எவனோ ஒருத்தனைப் படுக்கையில் பகிர்ந்துபெற்ற தன் பிள்ளைகளுக்கு தந்தையாயிருக்கவேண்டுமென்று கேட்டபோது சத்தியமல்லவா செய்து கொடுத்தேன். இப்போ...என் பிள்ளைகளின் கை வண்ணத்தைப் பார்க்கமாட்டாளாம். பாதகி...புத்தம் புதுமலரான சாராவை என் ஆசைக்கும் அசைவுக்கும் ஆட்டுவித்து தானே என் பிள்ளைகளைக் கண்டேன். பிரசவத்தின்போது அவள் செத்துப்பிழைத்ததை பக்கத்திலிருந்தல்லவா பார்த்தேன். அவள் கண்ட வலி ...துடித்தாள்... துவண்டாள்... அழுதாள்... அரற்றினாள்... கோரவலியால். வீறிட்டு அழுதாளே....இப்போதும் என் காதில் அது ..

நான் தந்தையெனும் பெரும் பேறுபெற அவள் மரணத்தை வென்று





வந்தபோது நான் தலைவருடி முத்தமொன்று மட்டும்தானே கொடுத்தேன்...

அவள் பட்டவலி எப்படியிருக்குமென்பதை இப்போதான் உணர்கிறேன்.... ...மனம் அழ மறுபேச்சின்றி பையைத் தூக்கிய படி வெளியேறினேன். ...நடை தளர்ந்தது. எறிவதை நினைக்க எரிச்சலாக இருந்தது.

சாராவிடமே கொடுத்துவிடு என்று மனசில் ஒருவெறி உதைக்க விரைந்தேன் அவள் வீடு நோக்கி... கதவைத் தட்டியது தான் தாமதம் சிரித்தமுகத்தோடு சாரா... நம்பமுடியாமலிருந்தது.

ஆனால் நடந்தது... கட்டியணைத்து "ஏன் வாடிப் போயிருக்கிறாய்..? உடல்நலமில்லையா...உன் புதியமனைவி எப்படியிருக்கிறாள்..? உள்ளே வருகிறாயா..."

இடைவெளியில்லாமல் கேள்விகள் விழுந்தாலும் இறுதிக்கேள்வியைக் கேட்டபோது வெட்கித்தலைகுனிந்தேன்.

இன்னொருத்திக்குக் கணவனாகிவிட்டேனென்பது தெரிந்தும் ....வருகிறாயா...?"என என் மனம் புண்படாமல் கேட்டாள். நானோ உடம்பில் ஒரு துண்டு துணியுமில்லாத தமிழனாக உள்ளே கால் வைத்தேன். உள்ளே அத்தனை பொருட்களும் அப்படியே இருந்தன

அவளும் நானும் பார்த்துப் பார்த்து வாங்கிய அத்தனையும் நான் வைத்துவிட்ட இடங்களிலேயே இன்றும்...

என்ன பெண்ணிவள் என் எண்ணத்தை இழுத்து நிற்பாட்டியது அந்தப்படம்... அப்பா...அம்மா..அக்கா தங்கையுடன் நான் நின்ற குடும்பப்படமது. நான்மாட்டிய இடத்தில் அப்படியே...

தலைசுற்றியது நா வரண்டது கண்கள் கலங்கி மங்கியது....

அப்படியே கண்விழித்ததும் ஆஸ்பத்தரிக்கட்டிலில் நான் இருப்பதுகண்டு திடுக்கிட்டுப்போனேன் நான் மட்டும்தான் இடம்மாறிக் கிடந்தேனே தவிர என் பொக்கிசங்களை உரிய இடத்தில் சேர்த்திருந்தது நிறைவுதர மீண்டும் நிம்மதிவேண்டிக் கண்களை மூடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரில் மீன் அழுதால்...

பசுபதிராஜா Wuppertal

சிந்திச் சிதறி அங்கொன்றும் இங்கொன்றுமாய் அழகுக் குவியல்களாய்... திரள்களாகக்கிடக்கும் துணிமணிகள்...;

ஆத்திரத்தோடு எடுத்து வீசப்பட்டு உடைந்து பறந்துகிடக்கும் தேநீர்க்கோப்பையின் உருக்குலைந்த துண்டுச்சில்லுகள்....;

வெள்ளைச்சுவர்கள் எங்கும் தேநீர்த்திவலைகளின் சிதறல்கள்... வரையாத ஓவியம்போல் ஜொலித்தபடி. ஜன்னல்கள் அருகே பூத்து புது உலகை தரிசித்தபடி.. மலர்ந்து மணம்தரும் பூச்சாடிகள்.

டிக்..டிக்..டிக்....நிமிசவாழ்வையும் அனுபவி..! வாழ்வில் எதையும் தவறவிடாதே..! என எச்சரிக்கை மனதைச்சுட்டெரிக்கிறது.

அடுத்தவர் விசயங்களில் ஆழநீளம் கண்டு கேட்டு ரசித்து சுவைத்து பேரனுபவம் பெற நட்பென்ற இறக்கைகட்டி, நானும்கூட நின்று மாரடிக்கும் யாழ்ராக்காரன்...

கோணல்களினால்தான் அழகிய கோலங்களும் என்பதை உணரத்தவறியதன்விளைவான நிசப்தங்கள் எங்கும் கிளைபரப் பிக் கிடக்க; அறைநடுவே தலைவிரிகோலமாய் இருந்தபடி அழுது அழுது தேய்ந்த நிலவாய் அமர்ந்திருந்த சாரதாவின் கண்களில் கண்ணீர் கோலத்தின் காய்ந்த தழும்புகள்.

பயந்து பயந்து குழைந்த விழிகளுக்குள் நனைந்து மிதக்கும் தெப்பமாய், தொலைந்த வாழ்வின் ஏகாதிபத்தியங்கள்.

வெறுப்பென்ற ஒன்றே அவளைச்சுற்றி நடனமிடும் உபாதைகள்...





அவள் மனதில் கட்டிவைத்த அழகான ஆயிரம் மனக்கோட் டைகள் சரிந்து வீழ்ந்துகொண்டிருப்பதாக அவள் கற்பனைக் கடிவாளங்களின் அசைவுகள்.

நன்மை தீமைக்குள்ளும் தீமை நன்மைக்குள்ளும் பகிர்ந்து வளர்க்கப்பட பட்டோலைச்சட்டங்கள் பரிபாலனம் பண்ணுகிறது; என்பதை இந்தவாழ்க்கை நீரோட்டம் அவளுக்கு அதிகம் கற்றுத்தரவில்லை.

எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ள இவள்மனதில் இயக்கமில்லை. ஒருவகையில் சிறுபிள்ளைத்தனம் மாதிரியும் இருக்கு...

"... ஏன்ராப்பா நீயும் அந்த கண்ணகி பரம்பரையோட கட்டியழப்போறியோ..?

உலகத்தில இவன்தான் பெரிய பருப்பு எண்ட மாதிரியும்.., நான் ஏனோ தவறுசெய்ய என்றே பிறப்பெடுத்தவன் போலவும் இந்தக்குதி குதிக்கிறா...!

எழும்பி ஒருக்கா வெளியில் வா...ஆயிரம் அலுவல் வெளியில்கிடக்கு..." என்றான்.

தன் மனைவியின் நியாய பூர்வத்தை நிராகரித்தபடி வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் வாழ்க்கைக்கான வரங்களேயன்றி நிதானித்து நேர்மைப்படுத்த வேண்டிவையல்ல...என்பது அவன் வாதம்.

இந்த அகதிப்பெருவாழ்வில் எங்கிருந்தோ ஒட்டிக்கொண்ட உறவு அவன். என்னில் அவனும் அவனில் நானும் புனிதம் பூர்வாகமென்று எதையும் தேடாமல் எதார்த்தமாய் பழகிப்பலகாலம்.

எந்தமனிதரில்தான் குறையில்லை எந்தமனிதரில்தான் நல்ல குணாதிசயங்கள் இல்லாமல் இல்லை.

என்ன ஒருத்தரின் நலம் இன்னொருத்தருக்கு ஒத்துவராமல் போய்க் கொண்டிருப்பதால்தானே இன்றைய அல்லோலகல்லோலங் களின் அமர்க்களமாய் உலகை ஆக்கி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டவர்களில் சூதாடி இருந்தான்... கௌரவர்களில் கொடையாளி இருந்தான்...;

பாரதத்தில் சகுனி.., இராமாயணத்தில் கூனி.., என்று இன்றுவரை மனிசரின்ர மனதில் எழுகின்ற நல்ல காரியங்களை விட கெட்டகாரியங்களே அதிகரிச்சு நிக்குது.

ஆயுதம் படைச்சவன் அரைநிமிசம் கோவிச்சாலும் அணுக் குண்டுகளைப்போட்டு வெடிவெடிச்சு விளையாடுவினம் எண்டால் மற்றதப்பற்றி என்ன சொல்ல..?

என் மனச்சவங்களை இடைமறிச்சுக்கொண்டு

"...இஞ்சைபாருங்கோ கோபி அண்ணை..! எனக்கு இண் டைக்கு ஒரு முடிபுசொல்லச் சொல்லுங்கோ..! இல்லயென்றால்.., என்னை வீட்ட கொண்டுபோய் விடச்சொல்லுங்கோ..."

தன்நேர்கொண்ட நெஞ்சத்தின் நெருப்புவரிகளை நெத்தியடி யாய் சொல்லிவிட்டு திரும்பவும் அந்த அறையைநோக்கி வேகமாய் நடந்தாள்.

வெளியில் நின்று வெள்ளைச் சுருட்டுக்குள் தன்நேரம் புதைந்து நின்றவனின் காதுகளுக்குள் அவள் கூறிய கூச்சல் கேட்டு கோபக்கனல் தெறிக்கக் கத்துவதும்.., வேகவேகமாய் அடிக்க ஓடிவருவதுமாய்..; அடிக்க ஓடிவரும்போது நான் கதவை மூடித்த டுப்பதுமாய்... பலமணிநேரம் பகடையாட்டம் நடைபெற்றது.

கூடிப்பழகியதற்கான கூலியோ என்னவோ..! எதிர்வாதமும் பிடிவாதமும் கொண்ட அவளும் தான் செய்தவையெல்லாம் நியாயமே...! எனப் பறைசாற்றும் விடாக்குணம் ஒருபக்கம்., முடிவு மில் லாமல் தெளிவுமில்லாமல் அவர்களின் எதிர்காலம் ஒருமாலை மதியத்துக்குள் மயங்கிமருண்டு கிடப்பதை நினைக்க நினைக்க., என் நெஞ்சம் எங்கும் சோகக்கனல்.

படைக்கப்பட்டதனைத்தும் உண்பதற்காகவே என்று புலிபசித்





தாலும் புல்லைத்தின்னக்கூடாது..! என்ற மகோன்னத மனத்தானம் மிக்கவளாய் அவளும் வாழ்க்கைத்தடத்தில் கால்பதித்து ஆடுகின்ற உருத்திர தாண்டவத்தில் எந்தப்பக்கம்போனாலும் மிதிபடும் பந்தாய் நான் ஆட்படணிக்கப்பட்டவன்போலும்.

இல்லையென்றால் நாற்பது வயதுக்குமேல்போயும் வாழ்க் கைப்படமுடியாமல்போன என்னைப்பிடித்து இரண்டுகல்யாண வாழ் வுக்கு பரிகாரம் சொல்லென்ற வரம் தண்டனைக் குரியதுதானே..?

அல்லது வாழும் வயதை தன்தந்தையின் இன்னோர் வாழ்வுக்கு அளித்த பீஷ்மர் பரம்பரையா.. நான்..?

எவன் சொன்னானோ சமாதானம் செய்பவன் பாக்கியவான் எண்டு..! எரிச்சலுக்குமேல் எரிச்சலாய் வருகுது...

இந்தப்பெட்டச்சியும் விடப்போறதில்லை இவனும் தன்தவறைஉணரப்போவதில்லை!

என்ன இழவெடுத்த வாழ்க்கையளோ..?

கண்டறியாத நாடுகளுக்கு வந்து நாமபடுகிற கரைச்சல்களை, கதைகளை ஆறாத மனச்சுமைகளை யார் அறிவார்..?

வெளிநாடுகளுக்கு வந்திட்டா வெள்ளைக்காரன் நம்மை வெத்திலையும் பாக்கும் வைச்சு ஆலாத்தி எடுத்து வரவேற்று காசுகறக்கும் ஊசிமரங்களுக்கு பங்காளி ஆக்கி விடுகின்றான்... என்று ஊரில உள்ள தாய்தகப்பன் உற்றம் சுற்றம் நினைச்சிருக் கேக்கை இஞ்ச உள்ள நிலைமை எங்க விளங்கப்போகுது...?

வெளிநாடு என்றால்.., பன்னீரில் குளித்து பல்சுவை அருந்தி பால்குளத்தில் நீந்திவரும் உல்லாச உலகமென்று கொம்பி யூட்டருக்கு முன்னாலையும் கோபுரங்களுக்குப் பின்னாலையும் வேலையென்று விபரம்கெட்டதனமாய் விளங்கி... வந்து ஏமாந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அகதியென்ற விண்ணப்பத்திற்காக நாம நித்திரை கெட்ட காலங்களை நினைச்சா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியே என்னை இன்னும் என்ன செய்யப்போகிறாய்..? என்று ஏக்கம் சுமக்கிறது இன்றைய கனவுகள் கூட....

...இம் என்றால் சிறைவாசம்... அம் என்றால் வன வாசம்...என்ற கணக்காய் எதற்கெடுத்தாலும் கையெழுத்துக்களும் கடதாசிகளுமாக நாம் இன்றுவரை போராடிக்கொண்டிருக்கிறம்.

வந்த கடன் கடன்ர வட்டி..; நம்மையே எதிர்பார்த்து வீட்டோட ஏக்கப்பெருமூச்சோட குந்திக்கொண்டிருக்கும் குமர் குந்தாணிகள்..; மாமன் மச்சான்.. கோந்தன் கொழுந்தன்.. கயிறு கிணறு எம்மை எதிர்பார்ப்பின் இமாலயங்களாக ஏந்திக்கொண்டிருக்கின்றபோது நாம எப்பிடி அந்த ஆசைகளை நிராசையாக்கமுடியும்..?

...என்ன கதைகளை ஜோடித்தும் ஜோக்கடித்தும் நாம் கொடுக்கும் அகதி மனுக்களையெல்லாம் நிராகரித்து வீட்டுக்கு அனுப்பிவிடுவானே.. வெள்ளைக்காரன்..!

நாம் அரசியல் அகதி என்பதைவிட பொருளாதாரப் பெருங்குடிமக்கள்.

அதனால்... இந்த மண்ணில் நிரந்தரமாகக் குந்தினாத் தானே உண்டு.. அதற்காக

பொய் பொய்யாகவும் மெய்மெய்யாகவும் புது அவதாரங் கள் உருவாக்கப்படும் இந்த புண்ணிய பூமிக்கதைகளில் எதை எப்படிக்கூறுவதோ..?

...இப்படி இக்கட்டான நிலை அவனுக்கு எற்பட்டது..!

அழகு அறிவு ஆஜானுபாகுவான தோற்றம்... குறுகிய காலத்தில் இத்தேசத்து மொழியை கற்றுக்கொள்ளும் சாதுர்யம் நிறைந்தவனானாலும் அவன் அகதிக்கான விண்ணப்பம் நிராகரிக் கப்பட்டு தேசத்துக்கு வலுகட்டாயமாக திருப்பியனுப்பும் நிலையில் மனம் உடைந்து இருந்த அவனின் வாழ்வு உறுதிக்கு ஜேர்மனியப் பெண்ணொருவரைத் திருமணம் செய்வதன் மூலம் இத்தேசத்தில் நிரந்தர வதிவிடம் பெறமுடியும். என்ற உத்தரவாதம் சட்டபூர்வமாக இருப்பதனால் அம்முறையினூடே தம் நீண்டகால சினேகிதியாக விளங்கிய ஜெனியை முறைப்படி திருமணம் செய்து கொண்டான்.





அதன்மூலம் அவன் வறுமைப்பட்ட குடும்பமும் கொஞ்சம் சுபீட்சம்கொள்ள முடிந்தது.

அந்நியோன்னியமாகப் போய்க்கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கையிலும் திடீர்ப்புயல்..; காலகெதியில் மனப் போராட்டங்கள் ஏற்பட்டு திருமணம் மனம் முறிவுவரை வந்து பிரிவு ஏற்பட்டுவிட்டது.

நிரந்தர வதிவிடஅனுமதி கொண்ட அவன் சிறிதுகாலம் பொறுத்திருந்துவிட்டு திடீரென ஊருக்குப் போனவன் இப்போது சாரதாவை திருமணம் செய்து வந்திருந்தான்...

எல்லாமே மிகக்குறுகியகாலத்தில் நடந்து முடிந்திருந்ததால் இன்று வினாக்கள் ஒவ்வொன்றும் வெளிக்கிளம்பி வீங்கி வெடிக்கின்றன...

ஒவ்வோருவரின் அவசரமும் நின்றுநிதானித்து முடிந்தபின் முடிச்சு அவிழ்கின்றது...

"...உனக்குத்தெரியும் மச்சான் நம்மிட ஊரில எத்தினை பெம்பிளைப்பிள்ளைகள் ஆமிக்கையும் நேவிக்கையும் அவனிட்டை யும் இவனிட்டையும் அகப்பட்டு சிக்கிச்சீரழியினம்... இவவுக்கு நான் என்ன குறை வச்சன்.. கையைவீசியண்டு பிளேன்ல ஏறி அரண்மன வீட்டில ராணிமாதிரி இறக்கி வச்சிருக்கன்... திமிரப் பார் திமிர..."

அவன் தன்பக்க நியாயங்களை சுவாரசிகப்படுத்தினான்.

இதற்குப்பதில் சொல்ல வருவாள் அந்தப் பத்தினி என்ற என் எதிர்பார்ப்பின் எண்ணத்திற்கு மருந்தளிக்க திறந்த அந்த செவ்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...அண்ணே என்னை நீங்கள் சின்னப்பிள்ளை என்று நினைக்கவேண்டாம்..!

இவர் இஞ்சை பல கஸ்ரப்பட்டுத்தான் வாழ்ந்தவர்...; நான் இல்லையென்று சொல்லவில்லை..எவ்வளவோ கஸ்ரத்தில நாங்களும் அந்த நாட்டிலும் வாழ்ந்தனாங்கள்...; பெண்ணினத்தின்ர விடிவு.., இண்டைக்கு தவறான செயற்பாடுகளுக்கை புகுந்துகொள் என்றுசொல்லவில்லை. ...இவர்செய்தது சந்தர்ப்பவாதமா..? நியாய வாதமா...? என்று நான் ஆராய்ச்சிப்படுத்த வரேல்லை... இந்த விசயங்களையெல்லாம் ஏன் இவர் என்கிட்டச் சொல்லவில்ல...? நெஞ்சைத்திறந்து உண்மையைச் சொல்லமுடியாத மனுசன் எவரெண்டாலும் எனக்குப் பிடிக்காதண்ண...ஒருபிடி சோத்துக்கும் துணிக்கும் என்றுதான் பெண்மானம் எழுதப்பட்டிருக்கா என்ன..? இஞ்சை பாருங்கோ இந்தப்பூனையும் பால்குடிக்குமா.?

கூடமாட நின்று கூத்துக்காட்டுற நீங்களே ஒருவார்த்தை பேசவில்லை பாருங்கோ...

எனக்கும் வக்கணையாய் வந்து சேர்ந்தது சொற்கணை.

இது சொரணைகெட்ட மாடு.. ஒரு குறிபோதாது.. சிலேடையோட சிலாகித்துக் கொள்கின்றதென் மனம். எனக்கு இவரின்ர வண்டவாளங்களையெல்லாம் பிறர் கிண்டலும் கேலியுமாய் சொல்லிக்காட்டினம்... எவ்வவு கேவலமாய் இருக்குதண்ணே... எனக்கு.. "

அவளின் நேர்கொண்ட நெஞ்சத்தில் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பரித்து நீதிதேடி நிற்கும் நெறிகளின் உச்சம் கண்களில் அருவியாய் கனக்கிறது.

அடேங்கப்பா நல்ல பெண்மணி...என்உதிரமும் உதிர்ந்து ஊர்கின்றது...

வாழ்வுகிடைச்சிட்டாலே அதுவும் வெளிநாட்டு வாழ்வு கிடைச்சிட்டாலே போதும்...





மற்ற நீதி நியாயமெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று கலாப்பிச்சுப்போன சில பெண்கள், வாழ்க்கையில் உண்மைக்காகவும் உறுதிக்காகவும் உன்கண்ணில் வடியும் நியாயமான கண்ணீர் மழைக்கு காலம் கட்டாயம் கணக்குக்காட்டித்தான் ஆகும்...

"...கோபியண்ணே உங்களின்ர நண்பரை ஒருக்காய் உள்ளே கூப்பிடுங்கோ கதைப்பம்... இவர்.. ஏன் தேவையற்ற கதைகளை மேற்கோள் காட்டுறார்..

நான் கேட்டதென்ன... ஏன் இவர்தேவையற்ற கதைகளை பிரச்சினைகளைக் கிளப்புகிறார்...?அதுதான் எனக்குத்தெரிய வேண்டும்...!"

வழிந்தோடும் நீரலைகளை துடைத்தெடுத்தப்படி., சற்றும் எதிர்பாராமல் தூக்கிய பெட்டியுடன் அவள் கிளம்பத்தயாரானாள்.

அவளின் நிலைகண்டு நானே அதிர்ச்சியானேன்.

என் கைகளே என்னையறியாமல் கதவின் கைப்பிடிகளை நழுவவிட்டது.

பின்ன இருக்காதா என்ன..?

ஒரு பெண் வாழ்ந்துவிடவேண்டும் என்று பெற்றோர்கள் படும்பாடு ஒருபுறமும்... பெண் உலகம் ஒன்றுபட்டு விளங்கும் உண்மை வாழ்வின் தேடல்களுக்குமிடையே ஏற்பட்டுப்போகின்ற இந்தமாதிரியான உரைச்சல் இருந்துகொண்டுதானே இருக்கின்றது.

எல்லோருக்கும் உண்மைமீதுதான் நம்பிக்கை..

ஆனால் நடைமுறைச் சாத்தியங்கள் உண்மைகளை மாத்திரம் கொண்டு உருவாக்கப்பட்டவையல்ல...

அவள் வெளியேறுவதைக் கண்ட அவன் இதைச்சற்றும் எதிர்பாராது விழிபிதுங்கி நிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"..... எங்கை கிளம்பிட்டீர்..? என்ன பகிடியோ விடிறீர்..? "

அவளின் நிலையில் அதிர்ச்சியுற்றவனாய் வினவி நிற்க

" ....இஞ்சை பாருங்கோ ஒரு உண்மையான கணவரின்ர அனைத்தையும் அறிந்து வாழ்க்கை அமைந்தால் நல்லது.. அதைவிடுத்து பலபேர்சொல்லி தெரியவேண்டிய அவசியம் எனக் கில்லை.. நான் போகப்போறன்.... "என்று ஆரவாரப்படும் அவளைத் தடுத்து நிறுத்தி பொத்தென அவள்காலில் விழுந்தான் அவன்.

யாரும் எதிர்பாராத ஒன்று...

தன்னை மன்னித்து விடும்படியும் இனி எக்காலத்திலும் உன்னையும் மறவேன்.. என்னையும் மறவேன்....என்ற அவனை கட்டி அணைத்தெடுத்து ஒருவர் தோளில் ஒருவர் சாய்ந்து ஆரத்தழுவிக்கொள்ள அந்த உண்மைக்கு காதோர லோலாக்கு கண்சிமிட்டி ஆட

உண்மையொன்றின் உருவத்தை உள்ளத்தில் சுமந்தபடி நானும் என் வீட்டை நோக்கி நடக்கலானேன்...





# பொய்யாயினவெல்லாம்.......

**திருமதி.வேணி கிருபாகரன் - Weissenhäuser Strand**

அது ஒரு மாலை நேரம்.

வெயிலின் வெம்மை குறைந்து கொஞ்சங் கொஞ்சமாய் குளிர் பரவிக் கொண்டிருந்த நேரம்.

நீ வந்தாய். என் வீட்டில் பரபரப்பு.

உன்னை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் என் பெற்றோரும் தங்கைகளும் ஆரவாரப்பட்டுக்கொண்டிருக்க, நான் அறைக்குள் நின்றபடி மிகக் கவனமாக என்னை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆம்.......... நீ என்னைப் பெண்பார்க்க வந்திருந்தாய்.

என்னைப் பெண் பார்க்க வந்தவர்களில் நீ பதினாறாவது நபர்.

இளநரை விழுந்து அங்கங்கு வெள்ளையாகிப் போன கூந்தலை அழகாகப் பின்னி பொட்டிட்டு சேலை கட்டிக் கொண்டு அம்மா சுவையாகத் தயாரித்துத் தந்த தேநீரைக் கையில் ஏந்தியபடி முகத்தில் சிரிப்பும் மனதில் படபடப்புமாய் பதினைந்து ஆண்களின் முன் நான் நின்றாகி விட்டது.

பொம்பிளை கறுப்பு, கொஞ்சம் கட்டை, பொருத்தமில்லை, சீதனம் காணாது, படிப்புக் குறைவு" என அத்தனை ஆண்களுமே ஆளுக்கொரு காரணத்தைக் கூறி என்னைத் தட்டிக் கழித்துவிட இப்போது பதினாறாவது நபராய் நீ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எப்படியிருப்பாய்...........?

உனக்கு என்னைப் பிடிக்குமா?

நீயாவது என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?

தெரியவில்லை.

ஆனால் என்னைப் பெண் பார்ப்பதற்காய் நீ வந்த இந்தக் கணத்திலிருந்து உன்னையே என் கணவனாக மனதில் வரித்துக் கொள்கின்றேன் நான்.

வீட்டு விறாந்தையில் கதிரையில் இருந்தபடி என் பெற்றோரோடு மிகப் பணிவாக உரையாடுகின்ற உன் குரல் கம்பீரமாய் இருப்பதாயும், நீ அழகாய் - உயரமாய் - உயரத்திற்கேற்ற பருமனாய் ஒரு இராஜகுமாரனைப் போல இருப்பதாயும் நான் நினைத்துக் கொள்கின்றேன்.

நான் உனக்கேற்றவள்தானா?

சட்டென்று சந்தேகம் தோன்ற சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியைப் பார்க்கின்றேன்.

கறுப்பென்றோ வெள்ளையென்றோ கூறமுடியாத பொது நிறம் - அளவான உயரம் - மெலிந்த உடல் - நேர்த்தியாகக் கட்டியிருந்த நீலநிறச் சேலை.

நான் அழகிதான். கண்ணாடி மட்டுமல்ல அம்மாவும் கூட அதையேதான் அடிக்கடி கூறுவாள்.

கொஞ்சம் கறுப்பெண்டாலும் என்ரை பிள்ளை ரதி மாதிரித் தான் என அம்மா புகழ்வது உண்மைதானென்றாலும் இந்த உண்மையை அந்த வெளிநாட்டுக்கார மாப்பிள்ளை பொய்யாக்கியது பெரிய சோகம்.

என்னைப் பெண்பார்த்தவர்களில் அவன் ஏழாவது நபர்.





அவனுக்கும் எனக்குமான பெண் பார்த்தல் நிகழ்வு ஒரு கோயிலில்தான் நடந்தது.

அவன் அழகாக

– ஒரு இராஜகுமாரனைப் போலத்தான் இருந்தான்.

வெளிநாட்டு வாழ்வின் செழிப்பு

– கழுத்தில் கைகளில் ஜொலித்தபடி நகைகள் -சின்ன மீசை – கொஞ்சம்தாடி – கறுப்புக்கண்ணாடி - இறுக்கமான ஜீன்ஸ் ரீசேட்.

அவன் என்னையும் நான் அவனையும் பார்த்துக்கொண்ட அந்தச் சங்கடமான கணங்கள் கூட சந்தோசமாகவே இருந்தன.

லண்டனிலை இருந்து வந்திருக்கிறான். நல்ல குடும்பம் - குணமான பொடியன். லண்டனிலை வீடு கார் எல்லாம் வாங்கி வைச்சிருக்கிறானாம். பொம்பிளைக்கு தாலிகூறை, நகைநட்டுக்கூட வாங்கி வந்திருக்கிறானாம்.

புறோக்கர் தம்பையா அம்மா அப்பாவுக்கு மட்டுமல்ல எனக்கும் கூடக் கேட்குமளவுக்கு உரத்தே கூறினார்.

பெண்பார்த்தல் நிகழ்வு முடிந்து வீட்டிற்குத் திரும்பிப் போனபொழுது நான் நடக்கவில்லை. வானத்திலே பறந்து கொண்டிருந்தேன்.

அந்த லண்டன் மாப்பிள்ளைக்கு என்னைப் பிடித்து விட்டதாயும் எனக்கும் அவனுக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நடப்பதாயும் எனக்குள் கற்பனைகள்.

இதோ..........அவனுடன் ஒன்றாய் விமானத்தில் லண்டனுக்கு பறந்து கொண்டிருக்கின்றேன் நான்.

லண்டனில் அவன் வாங்கிய வீட்டில் சந்தோசமான வாழ்க்கை.......

அவனுடைய அழகிய காரில் லண்டன் வீதிகள் எங்கும் பயணம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டனின் கட்டடங்கள், தெருக்கள், வீடு, கார் என எல்லாவற்றின் முன்பும் நானும் அவனுமாய் எடுத்துக் கொண்ட புகைப் படங்கள்..........

என் கற்பனைகள் முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்க ஐந்தாம் நாள் காலை அவனிடமிருந்து இடியாய் அந்தச் செய்தி வந்தது.

பொம்பிளை...... கறுப்பு......... வடிவு குறைவு......... பொம்பிளையை விட பொம்பிளையின்ரை தங்கச்சியை பிடிச்சிருக்கு. சம்மதமெண்டால் சீதனம் இல்லாமலே கலியாணம் செய்யுறன்.

என புறோக்கர் தம்பையாவிடம் சொல்லியனுப்பியிருந்தான் அவன்.

தமக்கையைப் பாக்க வந்திட்டு தங்கையைக் கேட்கிறதோ? என்ன கேவலம் இது...?"

அம்மா கொதித்துப் போனாள்.

உது நடக்காது. என்ரை பிள்ளையள் கலியாணம் கட்டாமல் இருந்தாலும் பரவாயில்லை. உவனுக்குச் செய்து வைக்கமாட்டன்." அப்பா முடிவாகக் கூறிவிட நான் பதறிப் போகின்றேன்.

நல்ல குடும்பம் - குணமான பொடியன் - விமானப் பயணம் - லண்டன் வாழ்க்கை

– விதவிதமாய் புகைப்படங்கள். முக்கியமாய் சீதனம் இல்லாத திருமணம்.

தங்கையாவது சந்தோசமாக வாழட்டுமே.

நல்ல இடம்.......... தங்கச்சிக்குச் செய்யுங்கோ.........

பிடிவாதமாக அம்மாவையும் அப்பாவையும் தங்கையையும் சம்மதிக்க வைத்து அடுத்த வாரமே திருமணத்தை நடாத்தி அவனுடன் அவளை லண்டனுக்கு அனுப்பியுமாயிற்று.

இப்போதெல்லாம் லண்டனிலிருந்து தங்கை புகைப்படங்கள் அனுப்பிக் கொண்டிருக்கின்றாள்:





லண்டன் வீதிகள் - கட்டடங்கள், வீடு, கார் என அத்தனையின் முன்பும் சிரித்தபடி அவனும் தங்கையும்...........

இஞ்சை பாருங்கோவன் என்ரை பிள்ளையை...........

அம்மா பக்கத்து வீட்டினருக்கெல்லாம் பெருமிதத்தோடு அந்தப் புகைப்படங்களைக் காட்டினாள்.

வீட்டுக்கு வந்த முதல் மருமகன். வெளிநாடு, காசுக்காரன் எண்டாலும் தங்கமான குணம் பாருங்கோ.....

அப்பா மருமகனது புகழைப் பாடிக் கொண்டிருந்தார்.

தங்கை கொடுத்து வைத்தவள்............ அதிஸ்டக்காரி............

நான்..............இன்னும் என்னை அலங்கரித்துக்கொண்டு........... முப்பத்தைந்து வயதிலும் பெண் பார்த்துக்கொண்டு...... திருமணம் நடப்பதாயும் சந்தோசமாக வாழ்வதாயும் கற்பனைகள் செய்து கொண்டு என் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றேன்.

என் கற்பனையில் பதினாறாவதாய் நீ..........

இதோ.......... அம்மா தந்த தேநீரைக் கையிலே ஏந்தியபடி உன்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கின்றேன்.

பதினாறாவது தடவையாய் பெண் பார்த்தல். ஆயினும் கூட வெட்கமும் பயமுமாய் பதைபதைத்துப் போகின்றேன் நான்.

என் படபடப்பையும் தங்கைகளின் குறுகுறுப்பான பார்வைகளையும் தாண்டி எப்படியோ உனக்கருகில் வந்து தேநீரைத் தந்து விட்டு கதவோடு ஒட்டிக்கொள்கின்றேன்.

நீ என்னைப் பார்த்தாயோ என்னவோ?

ஆனால் கதவோடு ஒட்டிக் கொண்ட அந்த ஒரு கணத்தில் தேநீரை நீ வாங்கி மேசையில் வைத்துக் கொண்ட அந்த ஒரு வினாடியில் உன்னை நான் நன்றாகப் பார்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் தாக்கியதாய் - இடி விழுந்ததாய் எனக்குள் அதிர்ச்சி.

அழகாய் - உயரமாய் - கம்பீரமாய் உன்னைக் கற்பனை செய்திருந்த என் கனவு ஒரு நொடியில் கலைந்து போகின்றது.

நீ கறுப்பாய் - கட்டையாய் இருந்தாய்.

வழுக்கை விழுந்த தலையும் சற்றே முன் தள்ளிய பற்களும், பருத்த உடம்புமாய் நீ........

மாப்பிள்ளைக்கு முப்பத்தெட்டு வயது......

என்ற புறோக்கர் தம்பையாவின் கூற்றை பொய்யாக்குவது போல் நாற்பத்தைந்து வயதுத் தோற்றம் உன்னிடம்.

என் கற்பனை இராஜகுமாரன் எங்கே......... நீ எங்கே.......?

கதவை இறுகப் பிடித்துக் கொள்கின்றேன் நான்.

நீ போய்விட்டாய்.

வீட்டுக்குப் போன பின்பு புறோக்கரிடம் பதில் கூறி அனுப்புவதாகக் கூறி விட்டு நீ போய் விட்டாய்.

நீ போன பின்பு என் வீட்டில் பிரளயம்.

மாப்பிள்ளை கறுப்பு...... கட்டை...... வயதும் கூடப் போல கிடக்கு..... அக்காவுக்குச் செய்ய வேண்டாம். சம்மதமில்லையெண்டு சொல்லுங்கோ....." தங்கைகள் முடிவாகக் கூறி விட்டார்கள்.

மாப்பிள்ளை கறுப்பெண்டாலும் நல்ல குணமானவர் போலை கிடக்கு. கதை பேச்சிலை நல்ல பெடியன் எண்டு தெரியுது. குடும்பமும் பரவாயில்லை."

அம்மாவுக்கு அந்தச் சம்மந்தத்தை விட மனமில்லை.

முப்பத்தைஞ்சு வயதுக்குப் பிறகும் என்ன வடிவு பாக்கிறது? வாழ்க்கைக்கு வடிவு முக்கியமில்லை. குணம் தான் முக்கியம்.





உந்த மாப்பிள்ளையைத்தான் செய்யுறது." அப்பாவின் முடிவில் நியாயம் இருப்பது புரிய தங்கைகள் மௌனமானார்கள்.

அழகில் என்ன இருக்கிறது?

பக்கத்து வீட்டுப் பரிமளத்தின் கணவன்கூட கறுப்புத்தான். ஆனாலும் அவளை எப்படியெல்லாம் பார்த்துக்கொள்கின்றான் அவன். எலும்பும் தோலுமாய் இருந்த பரிமளம் பொங்கி பூரித்துப் போய் இருப்பது அவன் அன்பில்தானே.

நீ நல்லவன் - குணமானவன். அது போதாதா எனக்கு?

உனக்கு என்னைப் பிடித்ததோ என்னவோ.......? ஆனால் எனக்கு உன்னைப் பிடித்திருந்தது.

இதோ .......... கல்யாணக் கனவுகளில் நான்.

எனக்கும் உனக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நடக்கின்றது.

நீயும் நானும் சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

பக்கத்து வீட்டுப் பரிமளத்தின் கணவனைப் போல நீ என் மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கின்றாய்.

என்னை மட்டுமல்ல என் அம்மா அப்பா சகோதரிகளைக்கூட உன் வீட்டினர் போலவே நினைத்துப் பரிவுகாட்டுகின்றாய்.

எனக்கும் உனக்கும் ஆணும் பெண்ணுமாய் இரு அழகான குழந்தைகள். அந்தக் குழந்தைகளைக் கூட நன்றாகக் கவனித்துக் கொள்கின்றாய்.

வயது போய் முதுமை வந்த பிறகும்கூட நானும் நீயும் ஒற்றுமையாய் சந்தோசமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கிட்டத்தட்ட இரண்டு வாரமாய் புறோக்கர் தம்பையா வரும் வரை என் கற்பனை முழுவதிலும் நீ.

இதோ உன் பதிலோடு புறோக்கர் தம்பையா வந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போலவே வீட்டிலுள்ள எல்லோருமே உன் பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்க புறோக்கர் தம்பையா சற்றுத் தயங்கினார்.

அவர் தயங்குமளவுக்கு நீ என்னதான் சொல்லி அனுப்பி ருப்பாய்?

பொம்பிளை கொஞ்சம் கறுப்பாம். வயதும் கூடவாம். அதாலை தாற ஐந்து இலட்சத்தோடை இன்னும் இரண்டு இலட்சம் கூடத்தந்தால் செய்யுறனாம்"

தயக்கத்தோடு அவர்கூறி முடிக்க எனக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே அதிர்ச்சி.

உன்னுடைய இந்தப் பதிலை யாருமே எதிர்பார்த்திருக்க வில்லை.

கடைசியில் நீயும் வெறும் காசுக்கு ஆசைப்படுபவன்தான் என்பதை நிரூபித்து விட்டாய்.

நீ நல்லவன் என்ற நினைப்பு பொய்யாகிப் போன ஏமாற்றமோ என்னவோ அப்பா பதிலே பேசவில்லை.

இரண்டு இலட்சமில்லை. இரண்டு சதம்கூட உந்த மாப்பிள்ளைக்குக் கொடுக்கமாட்டம். நீங்கள் வேறை இடத்திலை மாப்பிள்ளை பாருங்கோ

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி அம்மா புறோக்கரிடம் கூறினாள்.

என் கற்பனைக் கோட்டை சிதறிப் போகின்றது.

உனக்கும் எனக்குமான அந்தக் கனவு வாழ்க்கைக்கு இன்றோடு முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

நீயும் போய்விட்டாய்..

இரண்டு வாரங்களாக கனவுகளையும் ஆசைகளையும்





தந்து விட்டு இரண்டு இலட்சம் காசுக்காக என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டாய்.

இனி...... எங்காவது வெள்ளையாய் - இளமையாய் - அதிக சீதனத்தோடு யாராவது ஒருத்தி உனக்கு மனைவியாக வரலாம். அவளோடு உன் வாழ்க்கை தொடங்கப்படலாம்.

ஆனால் நான்...... இனியும் என்னை அலங்கரித்துக்கொண்டு...... முப்பத்தைந்து வயதுக்குப் பிறகும் பெண் பார்த்துக் கொண்டு......... திருமணம் செய்வதாயும் சந்தோசமாய் வாழ்வதாயும் கற்பனை செய்து கொண்டு என் காலத்தைக் கழிக்க வேண்டும்...........

விழி வழியே கண்ணீர் வழிகின்றது.

வழிந்த கண்ணீரை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொள்கின்றேன்.

இதோ...... முகத்தில் வெட்கமும் உதட்டில் சிரிப்புமாய் என்னைப் பெண் பார்க்க வரப் போகின்ற அந்த பதினேழாவது நபருக்காக நான் மீண்டும் கனவுகளோடு காத்திருக்கத் தொடங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைமாறிய பயணங்கள்

திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா Weeze

ஒவ்வொரு இரவும் சாராவுக்கு இப்படியே கழிந்தது. தன் வாழ்க்கையின் கடந்த காலங்களை இரைமீட்டு இரவுடன் எதிர் நீச்சலடிப்பதே வழக்கமாகியிருந்தது. குழந்தை சமீனாவின் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் கவலைகள் கௌவிக்கொள் ளும்.. அவளின் தலையைத்தடவித் தாலாட்டுப்பாடித் தூங்கவைத்த படியே பழைய நினைவுகளில் மூழ்கிவிடுவாள்.

யேர்மனியில் பெயர் போன வியாபாரத்தலமொன்றை நிர்வகித் தவர் சாராவின் தந்தை றிச்சாட். ஆயிரக்கணக்கான ஊழியர்க ளுக்குச் சம்பளம் கொடுக்கும் ஒரு பெரிய முதலாளி. அவரிடம் குமாஸ்த்தா வேலைக்குச் சேர்ந்தபின்பு அவரைக் காதலித்துத் திருமணம் செய்தவள் மேபிள் என்னும் பெண்மணி. இருவரும் கத்தோலிக்க மதத்தவர்களே.

றிட்சாட், தான் கிட்லர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்று பெருமையாகக் கூறிக்கொள்வார். யேர்மனியின் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு கிராமமே றிச்சாட்டுக்குச் சொந்த ஊரானது என்பதை சாரா மட்டுமல்ல சிறு குழந்தைகள் கூட அறிந்திருந்தனர். அங்குள்ள பாடசாலைகள் வைத்திய சாலைகள் அனைத்துமே றிச்சாட்டின் பரம்பரைச் சொத்துக்களே.

தன் சொத்துக்களுக்கு ஒரு வாரிசு வேண்டும் எனப் பல மருத்துவ ஆலோசனைகள் பெற்றுப் பல வருடங்களின் பின்பே பிறந்தவள்தான் சாரா.





வாரிசு கிடைத்ததில் மகிழ்ந்திருந்த பெற்றவருக்குக் கிடைத்த அதிர்ச்சிச் செய்தியோ குழந்தை ஊனமாகப் பிறந்திருந்ததே. பண பலத்தைக் கொண்டு பெரிய இடங்களில் எல்லாம் வைத்தியம் செய்து ஓரளவு தானே இயங்கும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருந் தாள் சாரா....

சாரா...தாயைப்போல் மிகவும் மென்மையானவள். பெரிய அழகி என்று சொல்லுமளவிற்கு அழகு இல்லாவிட்டாலும் அடக்க மான கவர்ச்சி அவளிடமிருந்தது. வீட்டில் எத்தனையோ வேலை யாட்கள் இருந்தாலும் தன் வேலைகளைத் தானே செய்வதுதான் அவளுக்குப் பிடிக்கும்.. முடிந்தவரை முச்சக்கர வண்டியில் இருந்த படி அனைத்து வேலைகளையும் நேர்த்தியாய்ச் செய்வாள். சிறுவய திலிருந்தே படிப்பில் மிக ஆர்வம் கொண்ட சாரா பல்கலைக்கழகம் வரை சென்றது வியப்பல்லவே.

வீட்டிலே தந்தையின் கண்டிப்பிலே வளர்ந்த சாராவுக்கு தாயின் பாசம் மட்டுமே கிடைத்தது. மனம் விட்டுப் பேசிச் சிரித்து அவள் குறை தெரியாமல் அவளுடைய நிறைவுகளை மட்டுமே பேசுபவர்களை அவளுக்கு நன்றாகப் பிடிக்கும்..

இப்படியான ஒரு நட்பு ராஜாவிடம் கிடைத்ததில் சாரா மெல்ல...மெல்லத் தன் குறையை மறந்து வானத்தில் பறக்கும் சிட்டுக்குருவி போல் மகிழ்ந்திருந்தாள்.

ராஜா....இலங்கையிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பிற்காக யேர்மனி வந்தவன். பண்பாகப் பழகும் அவன் சுபாவம் எவருடனும் தேவையின்றி அளவாகப் பேசும் குணமும் கேட்பவர்க்கெல்லாம் உதவி செய்யும் மனப் பக்குவமும் எல்லோரையும் கவர்ந்திருந்தது.

ராஜாவிடம் அதிகமாக உதவி பெறுபவள் சாராதான். பாட நேரம் முடிந்ததும் தனக்குத் தெரியாத விளங்காத பாடங்களை அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை சாரா சுகவீனமாக வைத்தியசாலையில் இருந்த போது பரீட்சைக்குத் தயார் செய்யும் காலமாதலால் ராஜா குறிப்புக் களை எல்லாம் தயார் செய்து வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று அவளுடன் இரண்டு மணி நேரம் பாடங்களைப் பயிற்சி செய்து கொண்டான்.

அங்கே வந்த சாராவின் பெற்றோர் ராஜாவை தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று அவனைப் பற்றிய சகல விபரங்களையும் தெரிந்து கொண்டனர். ராஜாவின் திறமை நம்பிக்கை திட்டமிடல் யாவும் அவன் மேல் ரிச்சாட்டுக்கு நல்ல மதிப்பை ஏற்படுத்தினாலும் வேற்று நாட்டவன் ஒருவன் பல்கலைக்கழகத்திற்குப் புலமைப் பரிசு பெற்று முன்னிடத்தில் நிற்பது சற்றுப் பொறாமையாகவும் இருந்தது.

தாயார் மேபிளுக்கு ராஜாவின் கவர்ச்சியான தோற்றமும் பணிவான குணமும் பிடித்துக் கொண்டது மட்டுமல்ல, அவன் தந்தை தாயாரை நாட்டின் இனப்பிரச்சனையில் இழந்த ஒரு அநாதை வாலிபன் என்பதை கேட்டதிலிருந்து அவன் மேல் பரிவும் பாசமும் அதிகமாகவே ஏற்பட்டது. தன் மகளின் சந்தோஷமான வாழ்வுக்குக் கிடைத்த அரிய மருந்து ராஜாவின் நட்பு என்பதில் ஆறுதல் அடைந்திருந்தாள்.

ரிச்சாட்டின் மனதில் உள்ளதையும் அவள் அறிவாள். அந்த அநாதைப் பையன் எங்களிடம் இருக்கும் பணத்துக்கும் அந்தஸ்த் துக்கும் தான் எங்கள் மகளை வளைய வருகிறான் என்று ரிச்சாட் கூறிய போது தனக்குள்ளேயே வெறுப்படைந்தாள்.

சீ..... என்ன மனிதர் இவர்.. அநாதையாகியது அவன் தவறா!... எவ்வளவு மனவேதனையைத் தனக்குள் அடக்கி வைத்திருக்கும் சாராவுக்குக் கிடைத்த ஒரே ஒரு ஆறுதலையும் தகர்த்து விடு வாரோ!... பணம் உள்ள இடத்தில் குணம் இருப்பதில்லை என்று கூறுவார்களே..அது சரிதானா என்று நினைத்துக் கொள்வாள்.





அவர் கௌரவத்திலேயே கண்ணாயிருப்பவர். இந்த விடயத் தில் தாய்க்கும் மகளுக்கும் அவர் மேல் சற்று வெறுப்புத்தான். ராஜாவைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் சாராவின் மனதில் ஒரு கிளர்ச்சி ஏற்படும்.. அது என்னவென்று அவருக்கே தெரியாமலி ருந்தது. மிகவும் அவதானமாகவே அவனுடன் பழகிக்கொள்வாள்.

ஆனால் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நடந்த சம்பவத்தின் பின்னரே இருவரும் ஒருவரை ஒருவர் உள்ளத்தால் காதலிக்கத் தொடங்கினார்கள் என்பதே உண்மை..

அன்று பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு சாரா சேலை அணிய விரும்புவதாக ராஜாவிடம் தெரிவித்த போது ராஜா அவளு டைய விருப்பத்தினை நிறைவு செய்வதற்காக அழகான றோசாப்பூ நிறத்தில் பூப்போட்ட சேலையையும் அதற்கு ஒப்பான சட்டையும் வாங்கி வந்து கொடுத்து தன் தமிழ் நண்பி ஒருவரை அழைத்து வந்து அவளுக்குத் தாவணி அணிவித்தான். அழகாக வாரிவிட்ட தலையில் ஒரு சிவப்பு றோஜாப்பூவையும் வைத்துவிட்டு இப்போது நீ ஒரு தேவதை போலக் காட்சி தருகிறாய் சாரா...என்று கூறினான்.

சூரிய ஒளிபட்ட பனிபோல உருகிப் போனாள் சாரா. அவளுக் குள்ளேயே பல கேள்விகள் எழுந்தன. ராஜா என் மேல் காட்டுவது அனுதாபமா...காதலா....அன்பா.....ஏன் என் ஊனம் ராஜாவின் கண்க ளுக்கு மட்டும் தெரிவதில்லை. எப்போதும் என்னை உயர்த்தியே பேசுகிறார். என் தந்தை கூட ஒரு போதும் என் திறமைகளை சிறப்புக்களைத் தட்டித்தந்ததில்லையே.....அம்மா கூட என் விருப் பங்களுக்கு மதிப்புத் தருவாளே தவிர அப்பாவிற்குப் பயந்து என்னை ஒரு போதும் நேரிலே வாழ்த்தியதில்லையே ஏன்....?

பட்டமளிப்பு விழா மேடையிலே மெல்லிய மண்ணிறத்தில் மிகக் கச்சிதமான உடை அணிந்து கழுத்துப்பட்டி அணிந்து ராஜா காட்சியளித்த போது ஒரு டாக்டரின் தோற்றம் அவனிடம் தெரிந்தது. முதலாம் தரத்தில் சித்தி பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டபோது எல்லோரும் ஆரவாரித்து கை தட்டி வாழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிச்சாட்டின் முகத்தில் மட்டும் எந்த மாற்றமும் காணமுடிய வில்லை. சற்று விகாரமாகவே இருந்தது. ராஜா ஒவ்வொருவரிடமும் விடை பெற்று வரும் போது சாராவின் தந்தையிடமும் கை நீட்டி யபடியே "போய் வருகிறேன் அங்கிள்!..." என்று கூறிய போது....சரி....சரி... எப்படியோ இனாமாகப் படித்து முடித்துவிட்டாய்.... இனி வேலைக்கு எங்கு போவது... எமது நாட்டவருக்கே வேலையில்லாதபோது... உங்களைப் போன்று அகதிகளாக வந்தவர்க ளுக்கு எல்லாம் வேலை எங்கே கிடைக்கப் போகிறது...என்றார்.

சாரா தன்னை மறந்து...அப்பா என்ன கதைக்கிறீங்கள்...அவர் அகதியில்லை..படிப்பதற்காக வந்தவர்..எனக்கூறி முடிக்க முன்னரே அவளை முச்சக்கர வண்டியுடன் தள்ளிச்சென்று வாகனத்தில் ஏற்றிப் படார்....என்று வாகனக் கதவை அடைத்துவிட வாகனம் பறந்து சென்று மறைந்தது.

சாராவின் மனம் வேதனையில் துடித்தது. ராஜாவின் மென்மை யான உள்ளம் எப்படிப் புண்பட்டிருக்கும் என நினைத்து.... நினைத்துக் கவலைப்பட்டாள். அன்றுதான் இருவரின் பிரிவின் வேதனை அவர்களுக்குள் இருந்த உண்மைக் காதலை வெளிப் படுத்தியது.

அன்று இரவு இருவருக்குமே தூக்கம் வரவில்லை. காலையில் இருவரது கணனிகளும் கதை பேசின.. காதலை வெளிப்படுத்தின.

குறுகிய காலத்திலேயே ராஜாவுக்கு அரசாங்க வைத்திய சாலையில் ஒரு வருட வேலை வாய்ப்புக் கிடைத்தது. சாரா மிகவும் மகிழ்ந்தாள். இறைவனுக்கு நன்றி செலுத்தினாள்.

இருவரதும் சந்திப்பு இணையத்தளத்தில் மட்டுமே தொடர்ந் தது. கிழமைகள் மாதங்கள் வருடங்கள் பல ஓடி மறைந்தன. ராஜாவின் வேலையும் வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்டமையால் அவனுக்கு வேலையும் இல்லாமல் போனது.





ராஜா தன் நாட்டுக்குத் திரும்பித் தன்னின மக்களுக்காகச் சேவை செய்ய விரும்புவதாகச் சாராவிடம் தெரிவித்தான். சாரா துடித்துப்போனாள். பனிக்கட்டியில் கட்டிய கோட்டைபோல் அவள் எண்ணங்கள் எல்லாம் கரைந்து பள்ளத்தாக்கை நோக்கி ஓடியது. தன் மீது தானே வெறுப்புக்கொண்டாள்.

நான் ஒன்றும் கொடுத்து வைக்காதவள்.....ஊனமாய்ப் பிறந்தது மட்டுமா... படித்தும் வேலையில்லாமல் வீட்டுக்குள்ளேயே கிடக்கின்றேனே... இப்போது ராஜாவின் அன்பையும் இழந்து விடுவேனோ என எண்ணி...எண்ணி அழுதாள்.

இணையத்தளத்தில் ராஜா எத்தனையோ ஆறுதல் வார்த்தை களைக் கொடுத்தான்..அடுத்தவாரமே சாராவுக்கு டாக்டர் வேலைக்கு அழைப்பு வந்தது. ராஜாவின் பணியைத் தொடர சாராவுக்கு அதே வேலை வழங்கப்பட்டது.

ராஜாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வெளி உலகத்தில் சாரா இனிமேல் தன்னம்பிக்கையுடன்.... தானும் ஒரு சாதாரண நபர் என்ற மன நிலையில் வாழ்வாள் என்ற நம்பிக்கை யுடன் ராஜா நாடு திரும்பினான்.

விமான நிலையத்தில் சாராவைச் சமாதானப்படுத்த ராஜா மிகவும் கஸ்டப்பட்டான். ஊனத்தினால் தன்னை யாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற அவளது தாழ்வு மனப்பான்மையைப் போக்க கடைசியாக ராஜா கூறிய வார்த்தை .......வாழ்க்கையில் உன்னையன்றி யாரையும் திருமணம் செய்து கொள்ளமாட்டேன்...... என்பதே. பிரியும் நேரத்தில் இருவரும் கைகளில் இருந்த மோதிரத் தை மாற்றி அணிந்துகொண்டு அணைத்து முத்தமிட்டுப் பிரிந்து சென்றனர்...

ஊரிலிருந்து ராஜா தொலைபேசியில், தான் தங்கியிருக்கும் ஆதரவற்றோர் இல்லம் பற்றியும் அங்குள்ள வைத்தியசாலை பற்றியும் அந்தச் சிறார்கள் தாதிமார்கள் தன் மீது வைத்திருந்த அன்பையும் நம்பிக்கையையும் பற்றி சாராவுடன் பேசுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் சமீனா என்ற இஸ்லாமியச் சிறுமியைப் பற்றியே அதிகமாகப் பேசுவான் சாரா உன் முகத்தை அவளில் காண்கிறேன். உன் அன்பை அவளிடம் பகிர்கிறேன். எங்களுக்குக் குழந்தைச் செல்வம் அவள் மட்டுமே போதும்!.. என்று கூறுவான்.

சமீனாவின் படத்தைச் சாராவுக்கு அனுப்பி வைத்தான்.....உன் மகளைப் பார்.....உன்னைப் போலவே சரியான குறும்புக்காரி. அழகி என்றெல்லாம் கூறும் போது சாரா நெகிழ்ந்து போவாள்.

சிறிது நாட்களின் பின்புதான் அந்தக் கொடூரச் சம்பவம் ஏற்பட்டது. அன்று காலை விடியாமலே இருந்திருக்கலாமே.... அதிகாலையில் சாராவுக்கு வந்த செய்தி இந்தோனிசியாவிற்கு விடுமுறையில் சென்றிருந்த சாராவின் தாயும் தந்தையும் அந்தச் சுனாமி என்னும் அகோரச் சம்பவத்தில் இறந்ததாகவும் அங்கேயே அவர்களது உடல்கள் அடக்கம் செய்துவிட்டதாகவும் தகவல் கிடைத்தது.

அனலில் இட்ட புழுவாய் சாரா துடித்தாள். கொழுகொம்பைத் தேடிய கொடியைப் போல தன் கவலைகளைக் கூறுவதற்காக ராஜாவைத் தொடர்பு கொள்ள முயற்சித்த போது....அங்கிருந்து வந்த செய்தியோ அவளிடமிருந்த முழு நம்பிக்கையையும் அழித்துவிட்டது.

செஞ்சிலுவைச் சங்கத் தாதியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது..இராச்சத சுனாமி அலை வந்த போது ராஜா.. .சமீனாவையும் தூக்கிக் கொண்டு மற்றைய சிறுவர்களையும் காப்பாற்றப் போராடிய பொழுது சிறுவர்கள் காப்பாற்றப்பட்டனர்

ஆனால் ராஜா இராச்சத அலையில் சிக்குண்டான். பின்பு சுனாமி அலை ஓய்ந்த பின் அவனைக் குற்றுயிராக மீட்டபோது அருகில் நின்ற சமீனாவைக்காட்டி சாராவிடம் ஒப்படையுங்கள் என்று கூறிவிட்டு உயிர் பிரிந்ததாகவும் கூறினாள்.





இவற்றைச் செவிமடுத்த சாரா அன்று முழுவதும் கண்ணீர் வடித்தே தன் துக்கத்தைக் கொட்டிக்கொண்டாள். எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தாள்.

நாட்கள் ஓடின.. இப்போது புதிய பிறவி எடுத்ததுபோல் புதுத்தென்புடன் ஈடுபட்டாள். சிலநாட்களின் பின் சாரா யேர்மனியிலிருந்த தன் தந்தையின் சொத்துக்கள் அனைத்தையும் விற்றாள். சொத்தான பணம் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு இலங்கைக்குப் போய் தன் காதலன் ராஜா கடமைபுரிந்த இடமான மட்டக்களப்பில் புதிய மருத்துவமனை ஒன்றை நிறுவி சமீனாவைப் போல் அநாதைகளாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பிள்ளைகளைப் பொறுப்பேற்றாள்.

ராஜா மருத்துவமனை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட அந்த வைத்தியசாலையில் தாயாக தந்தையாக தாதியாக டாக்டராக மனிதநேயம் கொண்ட மனிதராக வலம்வந்தாள். எல்லோரும் அன்பாக சாராஅம்மா.... சாராஅம்மா....என்று சொந்தங்கள் போல் அழைத்துக்கொண்டனர். அணைத்துக் கொண்டனர். எல்லாமே இந்தச் சமீனாக் குட்டிக்குத்தானே என்றவள் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த தன் காதலன் ராஜாவின் படத்தைப் பார்த்தாள்.. கண்களிலிருந்து விழுந்த கண்ணீரால் மாலை சூட்டி நன்றி தெரிவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்

திருமதி.இராஜேஸ்வரி.சிவராசா Duisburg

அந்தத் தெருவில் நடந்து செல்கிறேன். சன நெரிச்சல் வாகன நெரிச்சல். எங்கு பார்த்தாலும் ஜேர்மனியர்கள் இடையிடையே வெளிநாட்டவர்களும் ஓரிரு பிச்சைக் காரர்களும் என்கண்களில் தென்பட்டார்கள்.

என் சொந்த நாட்டு நினைவுகள் நெஞ்சில் அலைபாய்ந்தது ஒருகணம்.. அங்கே பசி பட்டினி நோய் நொடி போர் ஆபத்து பங்கர் வாழ்வு இடம்பெயர் வாழ்வு மக்கள் வாழ்வின் இறுதிக் கோட்டில் வாழ்கின்றனர். ஆனால் இங்கேயும் பிச்சைக்காரர்கள். இன வெறியர்கள் இருப்பதாகவும் தெரிந்து கொண்டேன்.

நடந்த களைப்புத்தீர ஓரிடத்தில் நின்று இளைப்பாறித் தொடர்ந்து மணியண்ணர் வீட்டை ஒருவாறு அடைந்துவிட்டேன். ஆம்....மணியண்ணர் எனது கணவனோடு ஒன்றாக வேலை செய்பவர். இன்று அவர் வீட்டில் கொண்டாட்டமாம். நான் ஜேர்மனிக்கு வந்து ஒரு வருடத்தில் இன்றுதான் ஒரு கொண்டாட்டத்துக்குப் போகிறேன்.

மணியம் அண்ணரின் தாயார் இறந்து இன்று 31வது நாள் அந்தியேட்டிக் கொண்டாட்டமாம்.. என்னை அந்தியேட்டிக்குப் போகச் சொல்லிவிட்டு என் கணவர் வேலைக்குச் சென்றுவிட்டார்..தான் வேலை முடிந்து அங்கு வருவதாகக் கூறிச் சென்றிருந்தார்.

மணியண்ணர் வீட்டு அழைப்பு மணியை அழுத்தி விட்டு,





படிகளில் ஏறி வீட்டுக்குள் நுழைந்தேன் சிறுவர்களின் சத்தம் காதை அடைத்தது. தொலைக்காட்சிக்கு முன்னால் இருந்து ரசிக்கும் சிறுவர்களின் சத்தம் ஒருபுறம் அப்பளம் போடுங்கோ.... மிளகாய் வேண்டாம்....தயிர் ஊற்றுங்கோ எனச் சாப்பாட்டு மேசையில் சாப்பிட்டு அரட்டையடித்தபடி ஒரு கூட்டம்..மறுபுறம் பெரியவர்கள் பெண்கள் என ஆங்காங்கே கதையளந்து கொண்டிருந்தார்கள்.

என்னைக்கண்ட பலர் ஏற இறங்கப் பார்த்து ஆள் புதுசு போல....என்று பேசிக்கொண்டனர்..பெண்களோடு பெண்ணாக நானும் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டேன். வழமைபோல் தேநீர் பலகாரம் பரிமாறப்பட்டது விரும்பிய பலகாரங்களை எடுத்துச் சுவைத்தேன்.

வீடியோக்காரர்கள் அங்கும் இங்கும் சுழட்டிச்சுழட்டிப் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.. அப்போது என்ன இது... அந்தியேட்டிக்கும் வீடியோ எடுக்கிறதா!... இது என்ன அநியாயம்.. என யோசித்துக் கொண்டேன்.

அங்கும் இங்கும் நோட்டம் விட்டேன்..சில ஆண்கள் கோட்சூட்டுக்களுடன் வெள்ளைக்காரர்கள் பாணியில். சில பெண்கள் காஞ்சிபுரம் பட்டுச்சேலைகளுடன் காணப்பட்டனர்....

பல பெண்கள் கழுத்துத் தெரியாமல் ஆபரணங்கள் அணிந்து கோவில் சுவாமிகள்போல் காட்சியளித்தது என் மனதை உறுத்தியது.

என்ன கொண்டாட்டம் எப்படிக்கொண்டாடுவது இவர்களுக்குத் தெரியாதா...அல்லது இதுதான் இங்கு நடைமுறையா என என் மனதில் கேள்வி எழுப்பியது.

ஓகோ!....பழைய காய்கள் அதாவது இந்த நாட்டுக்கு வந்து இருபது இருபத்தைந்து வருடங்கள் என எண்ணிக்கொண்டேன். அப்போது நாலைந்து பெண்கள் எனதருகில் இருந்து பலதும் பத்துமாக குசுகுசுத்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது காதையும் சிறிது கூர்மைப்படுத்திக் கொண்டேன். மணியண்ணருடைய தாயார் பட்டினியால் தான் இறந்ததாகவும் பிள்ளைகள் ஐந்தும் வெளிநாடுகளில் வாழ்கிறார்களாம் இவர்கள் தாய்க்குப் பணம் அனுப்புவதில்லையாம்!..மனுசி பிச்சை எடுத்துச் சாப்பிட்டு நோய்வாய்ப்பட்டு தேடுவாரற்று பின் வயோதிபர் இல்லத்தில் இருந்தே இறந்ததாகப் பேசிக்கொண்டனர். எனக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

இதற்கிடையில் தாய் இறந்ததும் மணியண்ணரின் சகோதரர் இருவர் இங்கு சண்டையாம் யார் வீட்டில் அந்தியேட்டி செய்வது.. யார் வீடியோ பிடிப்பது....யார் செலவழிப்பது எனப் பணச்சண்டையில் ஒரு சகோதரர் அந்தியேட்டிக்கும் வரவில்லையாம்.....என்றதும் எனக்கு மண்டைவெடிக்கும் போல் இருந்தது.

இதென்ன இப்படிப்பட்ட வாழ்க்கையா!..இன்னும் எத்தனை சம்பவங்கள் இங்கு.. ஆண்டவனே என வேண்டிக் கொண்டேன். பெண்கள் எல்லோரும் சாப்பிடவாங்கோ...என அழைக்கவே நானும் எழுந்துபோய் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து கொண்டு சைவ உணவுதானே சுவைத்துச் சாப்பிட்டேன்.

ஒரு கணம் மற்றைய பெண்களையும் நோட்டம் விட்டேன் எல்லாருடைய கழுத்தும் பவுணின் மின்னல் அலங்கரித்தது. ஒருகணம் தாயகத்து பவுண்கடைகளின் ஞாபகம் வந்து போனது..

யாரைப் பார்த்தாலும் பவுண் சாறி சின்னத்திரைக்கதைதான். சாப்பாடு முடியவே மீண்டும் என் இருக்கையில் அமர்ந்து கொண்டேன். சிறிது நேரத்தில் எல்லோரும் ஒவ்வொருவராகப் புறப்பட ஆயத்தமானார்கள்.

நானும் போய் வருகிறேன் என மணியண்ணரின் துணைவியாரிடம் விடைபெற்றுத் தெருவுக்கு வந்தேன்.

அப்போது ஒரு பெண்மணி தனது குழந்தையோடு என்னருகே வந்து ரீச்சர்...நான் ஒருதரம் உங்கட வீட்டுக்கு வந்து போகலாம் என நினைக்கிறன் என்றார்...





உடனே வாருங்கோவன் என்று கூறி..மூவருமாக எங்கள் வீட்டை அடைந்தோம். சொந்த பந்தங்கள் ஊர் எல்லாம் விசாரித்ததில் இப் பெண்ணும் எங்கள் ஊர்ப்பக்கம்தான் எனவிளங்கிக் கொண்டேன்.

அவரின் குழந்தை தொலைக்காட்சியில் மூழ்கிடவே நாமிருவரும் சமையல் அறையில் தேநீரோடு கதையை ஆரம்பித்தோம்..

ரீச்சர் நீங்கள் ஊரில கனகாலமாகப் படிப்பித்தனீங்களோ..

ஓம் நான் பதினைந்து வருடங்கள். அது பெரிய கதை நான் இங்கு வந்து பத்து வருடங்கள் ஊர்ப்புதினங்களை அறிய ஆவல் தானே... அக்கா எனது குடும்பத்தில் நாலு பெண் இரண்டு ஆண்கள். 1985 ஆண்டில் திருநெல்வேலிச் சந்தையில் செல் விழுந்தது, அப்பா அதில் இறந்துவிட்டார். நான் தான் வீட்டில் மூத்த பிள்ளை. ஒரு தம்பி 84ல் இயக்க மோதலில் இறந்துவிட்டான்.

ஒரு தம்பி இயக்கத்துக்குப் போய்ச் சேர்ந்து பல வருடங்களாகி விட்டது. வருடத்துக்கு ஓரிரு தடவை வீட்டுக்கு வந்து போவான். நாங்கள் நால்வரும் திருமண வயதை அடைந்தும் பண வசதி இல்லாமையினால் திருமணம் பிந்திப்போனது....நான் மட்டும் உத்தியோகம் பார்த்தேன்.

பதினைந்து வருடங்களாக ஆசிரியத் தொழில் பார்த்து இரண்டு தங்கைகளை திருமண பந்தத்தில் இணைய வைத்தேன். இன்னொருத்திக்கு இப்போ வயது 28 அவளும் இயக்கத்துக்குப் போக வெளிக்கிட்டாள். அம்மாவின் நிலையைக் கூறி அழுது கெஞ்சிக் கூத்தாடியபடியால் அவள் அம்மாவோடு இருக்கிறாள்..பெற்ற தாயைக் கைவிட்டு விடாதே என்று கூறித்தான் நான் இங்கு வந்து சேர்ந்தேன்.

நான் அப்போது திருமணம் செய்ய விரும்பி இருந்தால் சுலபமாகச் செய்திருக்கலாம்.. குடும்ப பாரமும் தடைபோட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு கல்வி கற்பித்த ஆசிரியர் ஒருவர் என்னை விரும்பிக் கேட்டார்..நானோ வீட்டு நிலைமைகளை எடுத்துக்கூறவே சீதனப் பேய்பிடித்த சாதாரண தமிழர் போல் அந்த ஆசிரியரும் என்னைக் காய் வெட்டிவிட்டார்..

பல திருமணப் பேச்சுக்கள் தொடர்ந்தன..சீதனப் பேய்களும் விரட்டின...நாட்டு நிலமைகளும் வாழ்வைச் சின்னாபின்னமாக்கியது. பாடசாலை சம்பளம் எதுவும் சரிவரக் கிடைக்கவில்லை. துன்பந் தான் அதிகரித்தன...நாட்டின் போக்கைப் பார்த்த என் அம்மா மகளே!... நீ எங்களைப் பார்த்தது போதும் இனி உன்னைப் பார்!...என்றார்.

மாமா வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கு...வெளிநாட்டு மாப்பிள்ளையாம்...சீதனம் வேண்டாமாம்...உடனடியாக கொழும்புக்கு வரட்டாம் என்று எழுதியிருக்கின்றார்....

தேநீர் ஆறப்போகுது குடியுங்கோ என்று இடைமறித்தேன்...

வெளி நாடுபோனால் தாயாருக்கும் பிற்காலத்துக்குப் பணம் உதவலாம் தங்கையையும் கரைசேர்க்கலாம் என்று நினைத்தே மாமா சொன்ன திருமணத்துக்குத் தலையாட்டினேன்..மாமா எல்லா ஒழுங்குகளையும் செய்து இங்கு அனுப்பிவிட்டார் என்று கதை தொடர்கையில்

தொலைக்காட்சி பார்த்த சிறுவன் அம்மா போவோமா!... என்றான். தாயோ கொஞ்சம் பொறு ராசா போவம் என்றவர் மீண்டும்!.....அக்கா

விமானத்தைவிட வேகமாக எனது கற்பனைகள் பறந்தன. சீதனம் வேண்டாம் என்ற மாப்பிள்ளை என்றபடியால் எனது எதிர்காலக் கணவரைப் பற்றி மிக உயர்ந்த இடத்தை உள்ளத்தில் ஏற்படுத்திக் கொண்டேன்.

விமானம் பிராங்போட் விமான நிலையத்தை வந்து சேர்ந்ததே தெரியவில்லை. விமான நிலையக் கட்டுப்பாடுகளைத்





தாண்டி வெளியில் வந்தேன். எனது கணவர் எங்கே!...எங்கே!....என மனம் ஏங்கியது. அதோ நாலைந்து தமிழர்கள் என்னை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்களே....

இவர்களில் யார்!...அவர்களில் ஒருவர் என்முன்னே நெருங்கி வந்து எனது படத்தைக்காட்டி நான் தான் சிவகுமார்!...நான் தான்.!... என்றபோது எனக்கு விளங்கிவிட்டது. இவர் தான்.....ஒருபுறம் பிரயாணக்களைப்பு.....மறுபுறம் இவரா....எனது!....என்றது எனது மனம்....ஒருவாறு சமாளித்துக்கொண்டு வீடுபோய் சேர்ந்தோம்...

இருவரும் சாப்பிட்டுவிட்டு ஒரு அறையைக்காட்டி பிரயாணக் களைப்புத்தான் இங்கே படுத்து உறங்குங்கோ...களைப்பாறுங்கோ என்று கூறியவர் அருகே வந்து தானும் அமர்ந்து கொண்டார். தனது வெளிநாட்டு கடந்த கால அனுபவங்களை எடுத்துக் கூறிய துடன் தனது வீர தீரங்களை எல்லாம் விளாசித்தள்ளினார்.

தான் முன்பு குடித்ததாகவும் இப்போது குடிப்பதில்லை என்றும் இப்போது சைவச்சாப்பாடுதான் என்று கூறி முடித்து ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்றவர்போல பாவனை செய்து கொண்டார்.

எனக்கு ஏமாற்றமும் தலைவலியும் வரவே தூக்கம் வராமல் இரவு விடைபெற்றுக்கொண்டது. அடுத்த நாள் அவர் காட்டிய புகைப்படங்கள் அவர் பல வெளி நாட்டுப் பெண்களுடன் கூடிக் குலாவி உல்லாசமாக வாழ்ந்ததற்குச் சாட்சியம் அளித்துக் கொண் டிருந்தன.

இவற்றின் அறுவடையாக இவர் பல நோய்களையும் கண்டு இப்போ அரை மனிதராக வாழ்வதாக அறிந்து கொண்டேன். இடையிடையே பல பிரச்சனைகள் எல்லாவற்றையும் புரிந்திருப் பீர்கள் தானே!. நீங்களும் ஒரு பெண்தானே என்று எனக்குச் சமாதான மழையைக் கொட்டினார்.. காலம் ஓடியது!...

இவை ஒருபுறமிருக்க இங்குள்ளவர்களின் பழக்க வழக்கங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் தாய் நாட்டுப் பற்றில்லாமல் வாழும் வாழ்க்கை முறைகளும் எனக்குத் துண்டாகவே பிடிக்கவில்லை..ஊருக்குப் போனால் இன்னல்படும் நம் மக்களின் துயரில் பங்கெடுப்பதே ஒரு ஆறுதல் என்னும் எண்ணம் தோன்றிடவே....

ஒரு நாள் அவர் என்னிடம் கூறினார்..தவறுகளை மறந்து மனிதனாக வாழவேண்டித்தான் திருமணம் செய்தேன்... நீயும் திரும்பிப்போனால்!.... எனத் தேம்பித்..தேம்பி அழத் தொடங்கினார்..

அவரின் அழுகையைச் சகிக்க முடியவில்லை. ஏதோ என் தலை எழுத்து அப்படியாக்கும்..வேறு வழியும் தெரியவில்லை. திரும்பி நாட்டுக்குப் போனால் எமது சமூகம் என்ன கூறும் என்று பலவாறு சிந்தித்துவிட்டு நான் உங்களுடன் இருக்கிறேன் அழாதீர்கள் என்றேன்.

சமரசம் பரஸ்பரம் விட்டுக்கொடுப்போடு எம் வாழ்க்கை நகர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றது..வெளிநாடுகளில் என்னைப்போல் இப்படி எத்தனையோ பெண்கள் ஏங்கித் தவித்துக் கொண்டு வாழ்வதை எண்ணிப் பார்க்கிறேன் என்று கூறவே வீட்டு வாசல் மணி ஒலித்தது..

கணவன் வருவதை உணர்ந்த அவளும் அந்த நண்பியும் அமைதியாக வெளியே வந்த போது அவன் கையிலிருந்த அந்தப் பூங்கொத்தை பிறந்த நாள் வாழ்த்து என்று கூறி தனது மனைவி யிடம் கொடுத்தான்.அவளும் நன்றி எனக்கூறி மெல்லெனச்சிரித்தாள்.





# சாமி தந்த வரம்

**வரதன் Duisburg**

ராம்ஜித் ஜேர்மனியில் தடம்பதித்து பத்து வருடங்கள். தனிமை அவனை அவ்வப்போது தீண்டிச் செல்வதுண்டு. இரவுபகலாக கஸ்ரப்பட்டு உழைத்து தன் தங்கைகளுக்கு ரொக்கங்களை கொடுத்து மணம் முடித்து வைத்திருந்தான்.

தனது இரு சகோதரிகளும் கனடாவில் சந்தோசமாக வாழ்கின்றார்கள் என்பதால் அவனுடைய கஸ்ரங்கள் காற்றில் கரைந்துவிடும். கடைசிச் சகோதரி ஆரதி மட்டும் இவனுடன் அதிக பாசத்துடன் இருப்பாள்.

அதற்கும் காரணம் இருக்கத்தான் செய்கின்றது. குளிர்காலத் திலும் அதிகதூரம் நடந்து செல்வதால். "அம்மா குளிர்கால சம்பளம் வரேக்க தான் அண்ணாவின்ர கஸ்ரம் தெரியவருகுது. என்ர சீதனத்திற்காய் எப்படியெல்லாம் கஸ்ரப்பட்டு உழைத்தி ருப்பான்."

"என்ன செய்கிறது ஆம்பிளப்பிள்ளையாய் பிறந்ததால சுமைகளை சுமக்க வேண்டியுள்ளது. இந்த சீ-தனம் எப்பதான் மறையுமோ தெரியாது. ஆனால் உனக்கு இருக்கிற அக்கறையும் பாசமும் உன்ர கொக்காவுக்கு ஏனோ இல்லை."

மிருதுளா எப்போதும் சுயநலவாதியாக இருப்பவள் ஆனால் சுயநலத்தை உடன்பிறந்தவர்களிடம் காட்டுவதும் முறைதானோ.

இருவரும் ஓரிடத்தில் வாழ்ந்தாலும் ஆரதியிடம் சமுகப்பற்றும் குடும்பப்பற்றும் அதிகம். தன்பெற்றோரை தன்னுடனேயே வைத்து பராமரிப்பவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ அம்மாவை தனியாக இருக்கவிட்டியென்றால் அரசாங்கப் பணம் அதிகமாய் வரும்" என தங்கைக்கு புத்திமதி கூறுவாள். இதன் உள்நோக்கத்தை யார்தான் அறிந்திடமுடியும்.

"தான் இருக்கின்றவரையும் தன்பெற்றோரை தன்னுடனேயே வைத்து பராமரிப்பன்" என்று வெளியாருக்கும் ஆரதி சொல்வதுண்டு.

ஆனால் சிவகாமியின் நிலையோ வேறுவிதமாய். தன் வயதிற்கும் அதிகமாய் வேலைச்சுமைகள்.

"அம்மா உங்களை நிறையவேலை செய்யவேண்டாம் என்று எத்தனை தரம் சொல்லுறது நான் வேலையால வந்து சமைப்பன் தானே."

"நான் என்ன வேறுயாருக்கோ வேலை செய்துகொடுக்கின்றன் உனக்குதானே."

"நீங்கள் இப்படி சொல்லுறிகள் ஆனால் அக்கா நான் உங்களை வைச்சு வேலைவாங்கிறன் என்று ஊர் எல்லாம் சொல்லி திரியிறா."

"அவளின்ர குணம் உனக்கு தெரியும்தானே. நான் உன்னுடைய வேலைகளை செய்வதால் உன்னால முடிஞ்ச வரைக்கும் எங்கட சமூகத்திற்கும் உதவமுடிகிறது."

"ஆனால் என்ர மனசுக்குள்ள வயசான காலத்தில வருத்திறன் என்ற குற்ற உணர்வு இருக்குது. நீங்கள் கனடாவுக்கு வந்து 5 வருடம் என்ர பிள்ளைகளுக்கு சேமிப்பு கணக்கு புத்தகம் இல்லை ஆனால் உங்கட கணக்கில என்ர மனுசன் மாதம் 200 டொலர் போட்டுக்கொண்டு வாறார்."

"ஏன் பிள்ளை வயசான காலத்தில என்னத்திற்கு காசு?"

"அத உங்கட மருமகன் வந்தாப்போல கேளுங்கோ. என்ர வீட்டு வேலையெல்லாம் செய்வதால் காசு போட்டு கழிக்கின்றார் போலும்."





"உன்னட்ட படிக்கின்ற பிள்ளைகள் தமிழில் கதைக்கேக்க எனக்கு எவ்வளவு சந்தோசம். வரும் காலத்தில பேரப்பிள்ளைக ளோட கதைக்கிறது விளங்காமல் இருந்தால் எவ்வளவு கொடுமை."

"எத்தினை மணிபிள்ளை"

"இரண்டு மணியாகுது."

"நீ சாப்பிடன் அப்பாவுக்கும் போட்டுக்கொடு. நான் இவங்கள் வந்தவுடன் சாப்பிடுறன்."

"ஏன் கதவுக்கு கிட்ட நிக்கிறியள். அவங்கள் வந்து பெல்லை அமத்துவாங்கள்தானே."

"சிலவேளை முந்திவருவாங்கள்."

"இது சிலோன் இல்லை, கனடா அவங்கள் சரியான நேரத்திற்குதான் விடுவாங்கள்."

******

"பாட்டி இதை கொண்டுபோய் என்ர அறையுக்குள்ள வையுங்கோ."

"என்னால தூக்க ஏலாது இவ்வளவு பாரத்தை சுமந்தால் முதுகு என்னத்திற்கு உதவும்."

"எங்களுக்கு எதிர்கால சுமைகள் அதிகம்தானே அதனால இப்பவே பாரம் தூக்கிப் பழகிறம்."

"முகத்தை கழுவிவிட்டு வா சாப்பிடுவம்"

"இண்டைக்கு என்னகறி"
"மரக்கறி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பிடியெண்டால் எனக்கு தீத்திவிடுங்கோ."

ஏன் உனக்கு போட்டு சாப்பிட தெரியாதோ?

நான் காட்டுீனை ஒழுங்காய் பார்க்கலாம்.

நீ நெடுக சின்னபிள்ளையில்லை பத்து வயசாகுது அக்கா மாதிரி நல்ல பழக்கவழக்கங்களை பழகு. அவள் தன்ர பள்ளிக்கூட வேலைகள் எல்லாம் செய்து போட்டு நாளைக்கு படிக்கிற பாடங்களையும் படிச்சுபோட்டு தான் மற்றய பொழுது போக்கு.

உனக்கு முதல்ல ரிவி பிறகு கரைச்சல் கொடுத்துதான் படிக்கிறாய் விருப்பத்தோட படிக்கிறாய் இல்லை.

அம்மா எனக்கு மிக்கிமவுஸ் பார்க்கவிருப்பம் அது போற நேரத்திலதானே பார்க்கலாம். நீங்கள் அவங்களுக்கு சொல்லி நேரத்தை மாத்தசொல்லுங்கோ நான் என்ர வேலையை செய்திட்டு பார்க்கிறன். வா பாட்டி இதில இரு.

டேய் உனக்கு எத்தினை தரம் சொல்லுறது பெரியாக்களை பார்த்து வாங்கோ இருங்கோ எனச் சொல்லிப்பழகு என்று.

பாட்டி கோவிக்கேல்ல நீங்கள் ஏன் கோவிக்கின்றீங்கள்?

என்னைப் பெற்றதாய் எனக்கு எவ்வளவு பாசம் இருக்கு தெரியுமா நெஞ்சுக்குள்ள.

என்ர நெஞ்சுக்குள்ளயும் நிறைய பாசம் இருக்கு ஆனால் நெஞ்ச பிளந்து காட்டமுடியவில்லையே.

உனக்கு வர வர வாய் கூடிக்கொண்டுபோகுது.

அம்மா வாய் ஒன்றுதான் அது கூடவும் மாட்டுது குறையவும்





மாட்டுது. பேச்சு தான் கூடும் குறையும். ஒழுங்கா தமிழை கதையுங்கோ எப்படி உங்களிட்ட படிக்கிற பிள்ளைகள் தமிழ் ஒழுங்கா பேசுவினமோ?

ஏன் நீ வந்து சோதினை வைச்சு பார்க்கபோறியோ? வைச்சா போச்சு.

முதல்ல உன்ர பாடங்களை ஒழுங்காய் படி பிறகு ஆற்றயும் அலுவலப் பார்க்கலாம்.

ஏனம்மா ஆ ஊ என்றால் உடன போய் படி என ஆய்கினைப் படுத்திறீங்கள்.

அம்மா இதில வந்து இருங்கோ உங்களோட ஒரு கதை கதைக்கோணும்.

என்ன கதை பிள்ளை.

பாட்டி வைச்சிருந்த வடையை சுட்டது காகமோ அல்லது நரியோ என்றது பற்றி.

நான் போனவாரம் என்னோட படிப்பிக்கிற ரீச்சர் வீட்டுக்கு போனனானெல்லோ. அங்க அவவின் தங்கச்சியை பார்த்தனான். மிகவும் நல்லபிள்ளைஅண்ணனுக்கு செய்து வைப்பமோ? இந்த கொடிய யுத்தத்தால மிகவும் பாதிக்கபட்டதுகள். இயக்கபெடியளுக்கு உதவியதால ஆமி பிடிச்சு வைச்சிருந்து பிறகு காச கட்டி எடுத்து இஞ்சால கூப்பிட்டு விட்டினம். நாங்கள் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காமல் தப்பி வந்து சேர்ந்திட்டம். நாங்கள் இப்பிடியானவர்களுக்கு உதவிட முடிந்திட்டால் அது எங்களுக்கு கிடைத்திட்ட பாக்கியம்.

நான் கனகாலமாய் சொல்லிக்கொண்டுதானே இருக்கின்றன். என்ர அண்ணாவின்ர மகளைத்தான் செய்யிறது என்று. அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமகள் அப்பு சேர்த்து வைச்ச சொத்து எல்லாம் அவளின் பெயரிலதான் இருக்கு. அதை வேறுயார் கையிற்கும் போகவிடமாட்டன்.

உங்கட சொத்து ஆசைக்காய் அண்ணாவின்ர வாழ்க்கையை துன்பப்படுத்தாமல் இருந்தால் சரி.

அதுக்காக நீ சொல்லுற சாதி குறைஞ்சவையை என்ர மகனுக்கு செய்யிறதோ? நான்விடன்.

ஏனம்மா உங்களுக்கு இந்த கூடாத எண்ணங்கள் இஞ்ச வந்தும் மாறாமல் இருக்கிறது வெக்கக்கேடானது. கலப்புத் திருமண முறை மூலம் சாதி ஏற்றத் தாழ்வுகளை ஓரளவு ஒழித்திடமுடியும். சாமி தந்திட்ட வரமாய் இதனை நடைமுறைப்படுத்தினால், அடுத்த சந்ததிக்கு இந்தக் குறையை எடுத்து செல்லாமல் இருக்கலாம். நல்ல குணமுள்ள பிள்ளையை செய்து வைச்சால் அவன் சந்தோசமாய் வாழ்வான்.

அண்ணாவும் இங்க வந்தால் எல்லோரும் ஒன்றாய் இருக்கலாம். நாட்டில சமாதானம் வரப்போகுதாம். நாங்கள் எல்லோரும் அங்கபோய் கலியாணத்தை சிறப்பாய் செய்து வைப்பம். எங்கட காணிகளையும் பார்த்து வரலாம்.

******

கலோ தம்பி எப்படி சுகமாய் இருக்கிறியோ?

ஓம் நீங்கள் சுகமாய் இருக்கிறீங்களோ?

நாங்கள் சுகமாய் இருக்கிறோம். சாப்பிட்டனியே சமைச்சனியே. இண்டைக்கு சனிக்கிழமை அதனால கட்டாயம் சமைக்கவேண்டும். சனியும் ஞாயிறும் சமையல் யுத்தம் செய்ய வேண்டும்.





அப்பாவிட்ட இல்லாத பழக்கங்களை எல்லாம் பழகினி. அதை விட்டுட்டு விசயத்திற்கு வாங்கோ.

அண்ணாவோட கதைச்சனாங்கள். அவர் நாள் எடுத்து எல்லா ஒழுங்குகளையும் செய்து விட்டாராம். நாங்கள் ரிக்கட் பதிவு செய்யிறம் நீயும் 2 மாதவிடுமுறை எடுத்துக்கொண்டு வாவன். எல்லோரும் சேர்ந்துபோவம். ஆரதி குடும்பமாக வாறாள். மிருதுளா இன்னும் முடிவு சொல்லவில்லை. நீ செலவுக்கு காசு கொண்டுவா. சீதனக்காசை பிறகு வேண்டலாம்.

இந்தா ஆரதி கதைக்க போறாளாம்.

எப்படியண்ணா சுகமாய் இருக்கிறியோ?

நான் கதிரையில காலுக்கு மேல கால் போட்டுக்கொண்டு இருக்கின்றன்.

அதைக் கேக்கவில்லை உன்ர சுகத்தை கேட்டனான்.

சுகமா இருக்கிறதாலதானே உன்னோட கதைக்கிறன். அதைவிடு. நான் எனக்கு தெரிஞ்ச பிள்ளையை உனக்கு செய்து வைக்க கேட்டனான். அம்மாவிட்ட கேட்டனான் அவ மாட்டாவாம். பிடிச்சிராவி மாமாவின்ர மகளைத்தானாம் செய்து தருவாவாம்.

நீ இனிமேல் மரக்கறி சாப்பாட்டோட கோவில் கோவிலாய் திரியவேண்டியதுதான். நான் மச்சாளுடன் கதைச்சனான் இண்டைக்கு நீ அவைக்கு நாளைக்கு காலம ரெலிபோன் எடு. பழைய பிரச்சனை ஒன்றையும் கதைச்சு போடாத. அக்காவோடயும் கதை வாறதைப்பற்றி ஒரு முடிவும் சொல்லவில்லை. ரிக்கட் எடுத்துக் கொடுத்தால் கட்டாயம் வருவாள்.

சரி வேற என்ன நான் பிறகு எடுக்கிறன்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலோ நான் ராம்ஜித் பேசுறன் தங்கச்சி நிக்கிறாவோ?

ஓம் பொறுங்கோ கூப்பிடுறன் கலோ மிருதுளா தங்கச்சி

உங்களுக்கு ரெலிபோன்.

யார் எடுத்தது?

மாமா ஜேர்மனியில் இருந்து.

அண்ணா எப்படி சுகமாய் இருக்கிறியோ?

ஓம். உன்னை பெயரைச் சொல்லியோ கூப்பிடுங்கிறாங்கள். உனக்கும் கேட்டுட்டுதோ? அவள் சிலவேளை இப்பிடி கூப்பிடுவாள்.

நீயும் வாறியோ ஊருக்கு?

நான் வரமுடியாது போல இருக்கு. ஒருத்தி எங்கட சாப்பாடு ஒன்றும் சாப்பிடமாட்டாள். அங்க வந்தால் ஒரு சாப்பாடும் வேண்டிக் கொடுக்க ஏலாது. சரி பிறகு எங்கட முடிவைச் சொல்லுறம்.

கெதியா சொல்லு நான் பிறகு கதைக்கிறன்.

******

கலோ அண்ணா நான் ஆரதி பேசுறன். எத்தினையாம் திகதி கொழும்புக்கு வாராய்?
நான் 12ம் திகதி வாரன்.

நாங்கள் சிங்கப்பூருக்கு போய்விட்டு 14ம் திகதி வாறம். நீ கொழும்பில எனக்கு தெரிஞ்ச வீட்டில நில்லு நாங்கள் எல்லோரும் சேர்ந்து யாழ்ப்பாணம் போவோம். சரி பிறகு கதைக்கிறன்.

******





தந்து விட்டு இரண்டு இலட்சம் காசுக்காக என்னை ஏமாற்றி விட்டுப் போய்விட்டாய்.

இனி...... எங்காவது வெள்ளையாய் - இளமையாய் - அதிக சீதனத்தோடு யாராவது ஒருத்தி உனக்கு மனைவியாக வரலாம். அவளோடு உன் வாழ்க்கை தொடங்கப்படலாம்.

ஆனால் நான்...... இனியும் என்னை அலங்கரித்துக்கொண்டு...... முப்பத்தைந்து வயதுக்குப் பிறகும் பெண் பார்த்துக் கொண்டு......... திருமணம் செய்வதாயும் சந்தோசமாய் வாழ்வதாயும் கற்பனை செய்து கொண்டு என் காலத்தைக் கழிக்க வேண்டும்...........

விழி வழியே கண்ணீர் வழிகின்றது.

வழிந்த கண்ணீரை யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொள்கின்றேன்.

இதோ...... முகத்தில் வெட்கமும் உதட்டில் சிரிப்புமாய் என்னைப் பெண் பார்க்க வரப் போகின்ற அந்த பதினேழாவது நபருக்காக நான் மீண்டும் கனவுகளோடு காத்திருக்கத் தொடங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட மகனை கடத்திக் கொண்டு போய் ஆறு மாதம் எங்கு இருக்கின்றானோ தெரியாது. இது எல்லாம் அவன் உழைச்சு வாங்கியது.

மீண்டும் பலகாலங்களின் பின் நேரடியாய் சந்தித்தனர் விமானநிலையத்தில் குடும்பமாய்.

நீங்கள் யாழ்ப்பாணம் போறதுக்கு வாகனம் ஒழுங்கு செய்துவிட்டம். சுகமாய் போய்விட்டு வாங்க.

******

எப்பிடி தங்கச்சி சுகமாய் வந்தனீங்களோ? எப்பிடி மருமகன். எங்கட பெடிகள் செய்யிற கொடுமையை சொல்லி ஏன் பிரச்சனையை வளர்ப்பான். அதுக்கென்று ஒரு காலம் வராமலா போய்விடும்.

மருமகன் நீங்கள் அங்க அரசாங்க உத்தியோகமோ செய்யிறீங்கள்?

இல்லை மாமா நான் பாரஊர்தி ஓடுறனான். அதிகாலை 5மணிக்கு வேலை.

மச்சாள் ஒரே கோயிலுக்கும் போய் விரதமும் பிடிச்சு உடம்பை வடிவாய் வைச்சிருக்கின்றீர்கள். எப்படி உங்கட பள்ளிக்கூடம் எல்லாம் போகுது.

நல்ல கெட்டிக்கார பிள்ளைகள். உங்கட பிள்ளைகள் உறைப்பு சாப்பிடுவீனமோ?

அவங்கள் எல்லாம் சாப்பிடுவாங்கள் நல்லா வாயும் காட்டுவாங்கள்.

பக்கத்தில கோயில் கொடியேறிவிட்டது வாங்கோ போயிட்டு வருவமோ?

சமாதான காலத்தில பள்ளிக்கூடங்களை விட கோயில்களைத்தான்





திருத்தி கட்டியிருக்கிறார்கள். இந்த சனங்கள் சாமி குற்றம் என்று சொல்லி கோயிலுக்கு காசு கொடுக்கும் நல்ல செயல்களுக்கு கொடுக்கமாட்டுதுகள்.

******

நாங்கள் நினைச்சதை விடவும் கலியாணம் சிறப்பாய் நடந்து முடிஞ்சுது. நாங்கள் அடுத்த வாரம் கனடாவுக்கு போறம். அண்ணா 2 வாரம் பிந்தி வருவான்.

அண்ணா அண்ணி சுகமாய் இருங்கோ வெளிக்கிடப் போறம். வாகனம் வந்திட்டுது சுகமாய் போயிட்டு வாங்கோ.

வா மலர் நான் படிச்ச பள்ளிக்கூடத்திற்கு போய் வருவம்.

நான் உந்த பாதயால போகவில்லை. விமானத்தில போகப்போறன்.

******

திருமணம் 6 மாதம் போனதே தெரியவில்லை.

மலர் நீ வந்து சேர்ந்து விட்டால் பெரிய நிம்மதி.

இன்னும் ஒரு வாரத்தில வந்விடுவன்தானே.

******

மலர் இதுதான் என்ர வீடு இஞ்ச 5 வருடமாய் இருக்கிறன்.

இதில் இரு சமைச்சிட்டு வாறன்.

என்ன சமைக்கிறீங்கள் மரக்கறி இல்லையோ?
பருப்பு மட்டும்தான் இருக்கு.

பரவாயில்லை அதை சமையுங்கோ.

சமைச்சு முடிஞ்சுது வா சாப்பிடலாம்.

நான் சில்வர் தட்டு கொண்டு வந்தனான்.அதில போட்டு சாப்பிடுறன்.

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னங்கோ இந்த சாமத்தில எங்கபோறீங்கள்?

இப்ப 4 மணி நான் வேலைக்கு போறன்.

இண்டைக்கு வேளைக்கு வேலை முடிஞ்சுது.

என்ன சமைச்சனி? போடுசாப்பிடுவம் பசிக்குது.

மரக்கிறியா? இறைச்சி சமைக்கவில்லையோ?

நான் அதை தொடவில்லை. உங்களுக்கு விரும்பினா நீங்கள் சமைச்சு சாப்பிடுங்கோ.

நிம்மதியா சாப்பிடக்கூட முடியவில்லை.

ஏன் சண்டை பிடிக்கிறீங்க? இதுக்குதான் நான் அம்மாவிட்ட சொன்னனான் வெளிநாடு போக விருப்பமில்லை என்று அப்பாவின்ர ஆக்கினையாலதான் உங்களை முடிக்கவேண்டி வந்தது. என்ன மாதிரி பள்ளிக்கூடமும் வீடும் என்று சுதந்திரமாய் இருந்தனான். இப்ப வீட்டுக்குள்ள அடைபட்டுக் கிடக்கவேண்டியுள்ளது. நான் ஊருக்கு போயிட்டு திரும்பி வாரன் எனக்கு ரிக்கட் எடுத்து தாங்கோ?

அடுத்த மாதம் எடுத்து தாறன்.

இந்தா ரிக்கட் 6 மாதத்தால திரும்பிவரலாம்.

******

ஏனம்மா ஒரு மாதிரி இருக்கிறீங்கள்?

உன்ர அண்ணி வந்து 3 மாதம் ஆகவில்லை அதுக்குள்ள திரும்பி ஊருக்கு போப்போறாவாம். என்ன பிரச்சனையோ தெரியாது.





இதுக்குதான் முதல்ல சொன்னனான் இஞ்ச இருக்கிற பிள்ளையை செய்து கொடுப்பம் என்று. நீங்கள் கேட்கவில்லை.

******

உங்களுக்கு ரவி என்றவர் ரெலிபோன் எடுத்தவர். உங்கட பள்ளிக்கூட பழைய மாணவராம். இண்டைக்கு சரியான வேலையோ?

ஓம் மலர் சிலவேளை கஸ்டம் தான். என்ன இண்டைக்கு மச்சம் சமைச்சு இருக்கிறாய்.

இன்னும் ஒரு வாரத்தில ஊருக்கு போகப்போறன். அது வரைக்கும் சமைக்கிறன்.

******

இண்டைக்கு பழைய மாணவர் ஒன்றுகூடல் இருக்குது வெளிக்கிடு போவம்.

என்னப்பா ஒன்றுகூடலில் போத்தலும் எடுத்தவங்களோ?

பெரிய புள்ளிகள் எல்லாம் வந்த படியால் எடுத்தவங்கள்.

எனக்கு பசிக்கேல்ல நீர் சாப்பிட்டு வாரும். நான் படுக்கபோறன்.

******

கலோ ராம்ஜித் நான் வினோ பேசுறன். நேற்று பாட்டி எப்படி இருந்தது?

நல்லா போச்சடா அது சரி யார் சிவாஸ்லேகர் எடுத்தது.

அது நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு என்று குடுத்தகாசில எடுத்தவங்களாம். எல்லாச் செலவும் போக மிகுதி 140 யூரோ தாணாம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புறாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது என்ன அநியாயம்.

இது பற்றிக் கதைக்க புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய விடுறாங்கள் இல்லை. ஏனென்டால் கண்ட கண்ட ஊர்ப் பெடிகள் உள்ளுக்குள்ள வந்தால் தங்களுக்கு அவமானமாம்.

******

மலர் வெளிக்கிட்டியா? ஏன் எல்லாத்தையும் கொண்டு போறாய். திரும்பி வாறது தானே.

நான் கொண்டுபோய் கொண்டு வாறன்.

******

ஏன் பிள்ளை அவசரப்பட்டு திரும்பி வந்தனி சரியான குளிரோ?

எனக்கு வெளிநாடு பிடிக்கவில்லை. நான் எத்தினை தரம் சொன்னனான். நீங்கள் தான் கேட்கவில்லை. நான் இனி திரும்பி போகமாட்டன்.

என்னடி சொல்லுறாய்?

நான் திரும்பி பள்ளிக்கூடத்திற்கு போய் படிப்பிக்கபோறன். வியாபார நோக்கத்திற்காய் செய்த சிலைகளை நம்பிய அளவிற்கு மனிதனோட சேர்ந்து வாழத்தெரியவில்லை உனக்கு. இனி நீயெனக்கு பிள்ளை இல்லை. நான் போய் வயோதிபர் மடத்தில் வாழப் போறன். சாமி தந்த வரம் இது என்றால் யாரால மாற்றமுடிந்திடும்.





# வேலை

**பொன்-புத்திசிகாமணி. Sundern**

தம்பி உன்ர கடிதம் கிடைத்தது. உனக்கொரு செய்தி எழுதவேணும். உன்ர ஆருயிர் நண்பனிடம் போனனான். அவன் தாய் சகோதரங்களுக்கு முன்னால என்னைத் தாறுமாறாய்ப் பேசிப்போட்டான்.

இரண்டு தடவை வயல் விதைச்சு இரண்டு தடவையும் தனக்கு நட்டமாம் வயலைக் கெதியாய் மீளட்டாம்.தம்பி அவன் காசனுப்பினால் மீளுவன்தானே என்று அமைதியாய்த் தான் சொன்னேன்.எப்ப காசனுப்பிற என்று சீறி விழுந்தான்.

இவனுக்குப் பின்னால போனவங்கள் எல்லாம் லட்சக் கணக்கில பணம் அனுப்பிப்போட்டாங்கள். இவருக்கு மட்டும் வேலையில்லையாக்கும். தின்னுட்டு அறையில கிடந்து நித்திரை கொள்ளுதாக்கும். அவசரத்திற்கு உதவி செய்தவன் நான் என்பதை மறந்து போனான்.

எனக்கு எப்படியிருக்கும் சுர்ரென்று பத்திக்கொண்டு வந்தது. வயலை ஒத்திக்கு வைச்சால் பலனை நீ எடுக்கிறதுதான் முறை உன்ர காலத்திற்கு மழை பெய்யாததற்கு நாங்கள் என்ன செய்யிறது என்று நான் சொன்னேன். என்ர உடம்பெல்லாம் பதறத் தொடங்கிற்றுது. என்னமாதிரி தாயாய் பிள்ளையாகப் பழகிய நாங்கள் நாய் தின்னாக்காசுக்காக மரியாதையில்லாமல் கதைச்சுப்போட்டான்.

எனக்குக் கண்ணெல்லாம் கலங்கிக்கொண்டு வந்தது. தாய்க் குப் பெரும் அந்தரமாய்போச்சு. ‘அவவிட்ட காசிருந்தால் தந்திருப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே மனுசியை நீ ஏன்பேசிறாய்' என்று தாய்க்காரி சொல்ல நீ பேசாமல் இருண என்று மனுசியையும் மடக்கிப்போட்டான்.

நீ இருக்கும்வரைக்கும்தான் அன்பும் சினேகிதமும். நீ கொண்டு போன பணத்தைத்திருப்பி அனுப்பி யாரும் வரமுடியாமல் கஸ்ரப் படும் நண்பர்களுக்குக் கொடுக்கும்படி எழுதியிருந்தாய். நானும் அதைச்சீலனுக்குக் கொடுத்துத்தான் அந்தப்பிள்ளை போய்ச் சேர்ந்தது.

அப்படிப்பட்ட நல்ல மனமுள்ள என்ர பிள்ளையை இந்த நாய் பேசினால் எப்படியிருக்கும். அந்தக்காசு கையில இருந்தி ருந்தால் உடனே விட்டெறிஞ்சிருப்பன் என்ன செய்யிறதென்று அழுது போட்டு வந்திற்றன்.

தம்பி நீ இதை நினச்சுக் கவலைப்படாதே. குலைக்கிற நாய் குலைச்சுக்கொண்டுதான் இருக்கும். நாங்கள் வயலைச் சும்மா கொடுக்கவில்லை விதைச்செடுக்கட்டும். லாபம் வந்தால் எங்களுக்குத் தரவேபோகினம். கெதியில உன்ர காசோட வாறன் என்று சொல்லிப்போட்டுத்தான் வந்தனான்.

வரும்வரை விம்மலுடன் பொருமலும் தெரு நீளம் அழுது வடிச்சுக்கொண்டு வந்தேன். அவனுக்கொன்றும் எழுதவேண்டாம் என்று கொக்கா சொன்னவ நீ உன்ர நண்பர்களைப்பற்றி தெரிய வேண்டும். அதுக்காகத்தான் எழுதுகிறேன்.

நீ ஆமிக்காம்பில வாங்கின அடியோடை குற்றுயிரும் குறைஉயிருமாக வந்தபோது நான்பட்ட வேதனையும் கவலையும் எனக்குத்தான் தெரியும். எந்தத் தேசத்திலாவது நீ உயிரோடை இருந்தால் அதுவே போதும். நீ எங்களைப்பற்றிக் கவலைப்படாதே நாங்கள் கன்னியள் அருளால் சுகமாக இருக்கிறோம்.

இஞ்ச வரவர ஆமியளின்ர கொடுமைகள் தாங்க முடியாது. செபமாலையின்ர பெடியன் பெர்னாண்டோவைப் பிடிச்சுக் கொண்டுபோய் வவுனியாவில சுட்டுப்போட்டாங்கள். வீடு வீடாய்ப் போய்ப் பெடியளைப் பிடிக்கிறாங்கள். ஊரே அல்லோல கல்லோ





லம்" இன்னும் எத்தனையோ புதினங்களை எழுதிக் கடிதத்தை முடித்திருந்தா.

கடிதத்தை வாசிக்கும்போது ஒவ்வொரு வரிக்கும் கண்ணீர் வழிந்தது. எனக்கும் விம்மி வெடித்தது. 'தம்பி நீ எங்கையாவது உயிரோடு சந்தோசமாக இரு எங்களைப்பற்றி யோசிக்காதே.' இந்த வரிகளை திரும்பத்திரும்ப வாசித்தேன். துக்கம் தொண்டை யை அடைத்தது. எத்தனை சோகங்களைச் சுமக்கும் அந்த உறவு கள் இன்னும் எங்களைத் தேற்றுகின்ற நிலையிலே இருக்கின்றார்கள்.

இவர்களின் உயர்ந்த உள்ளத்திற்கு முன்னால் நாங்கள் எம்மாத்திரம். யாரைப்பற்றியும் கவலைப்படாமல் சுயநல விரும்பிகள் போல் எங்கள் உயிரை மாத்திரம் காப்பாற்றிக்கொள்வதற்காக இங்கு வந்து வாழுகின்றோம்.

வந்தும் அவர்களுக்காக எங்களால் என்ன செய்ய முடிந்தது கடிதத்தை வாசிக்கும்போது என் மனம் இப்படி நினைத்துக் கொண்டது கடிதத்தின்முடிவில். இப்படிக்கு அம்மா என்று எழுதி அதற்குக் கீழ் 5.5.86 என்று திகதி இட்டிருந்தா.

அம்மா கடிதத்தில் எப்போதும் திகதியைக் கடைசியாகத்தான் எழுதுவா.ஏனம்மா கடைசியில் திகதியை எழுதுகிறீர்கள் என்று கேட்டு எழுதினேன்.தொடக்கத்தில் எழுதினால் கடிதம் முடிய எத்தனை நாள் செல்லுமோ,அதற்காக கடிதம் முடியும் நாளைப் போடுகிறேன் என்று எழுதியிருந்தா.

86ம் ஆண்டு நாங்கள் யேர்மனியில் இந்த வீட்டிற்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகியிருந்தது.நானும் ஐயாவும் சிறியும்தான் ஒன்றாக இருந்தோம்.அழகான வீடு இரண்டு படுக்கை அறை பெரிய கோல் குசினி வசதியான குளியல் அறை.ஐயாவுக்கு மணியம்தான் உண்மையான பெயர்.

அவருக்கு அந்தநேரம் வயது ஐம்பதைத் தாண்டியிருந்தது. மரியாதைக்காக எல்லோரும் ஐயா என்று அவரை அழைப்போம். ஒரு அப்பாவி.

சினேவெடிங்கன் நகரிலுள்ள அகதிகள் முகாமில் நாங்கள் ஒன்றாக இருந்தோம். அங்கேயே அவருக்கு இந்தப்பெயர் வழங்கலாயிற்று.

அங்கிருந்தவேளையில் அவரின் அப்பாவித்தனத்தைப் பயன் படுத்தி நசுக்க ஆரம்பித்தார்கள் அந்தக் கதைகளை என்னிடம்தான் சொல்லி அழுவார். எனக்கு அவரைப் பார்க்கப் பாவமாக இருக்கும். அவருக்காக அவர்களோடு நிறையக் கதைத்திருக்கிறேன். அவருக்கு மூன்று பிள்ளைகள் பற்றாக்குறைக்கு யாரோ ஒரு பிள்ளையையும் எடுத்து வளர்க்கிறார்களாம். என்மீது அவருக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது எங்களுக்கு வீடு அடித்தபோது அவராகக்கேட்டு எங்களுடன் சேர்ந்து கொண்டார்.

சிறியன் சின்னப்பெடியன் அப்போது அவனுக்கு இருபது வயதிருக்கும் துரு துரு என்றிருப்பான் ,வயதுக்கேற்ற குணங்கள் இருக்கும். நல்லவன் என்மீது அவனுக்கும் விருப்பம் அதிகம். அவனும் தானாகக்கேட்டுச்சேர்ந்து கொண்டான்.

ஐயாவும் அவனும்தான் பெரிய அறையில் படுப்பார்கள், அவன் அங்கே நிற்பது குறைவு. அவன் மாமன் ஒருவன் கம்பேர்க்கில் இருந்தான். அங்கு போய்விடுவான். இடைக்கிடை றெஸ்றூறன்றில் வேலை செய்வதாகச் சொல்வான். மாதம் ஒரு முறை வந்து போவான். முகாமில் இருந்தபோதே அவன் இப்படித்தான். இரவு நேரங்களில் எப்போதும் ரெலிபோன் எடுப்பான். என்ன புதினம் ஏதாவது கடிதம் வந்ததோ என்று கேட்பான். இதைஅறிவதற்காகவே அவன் அரைவாசி ரெலிபோன் எடுப்பதுண்டு.

அந்த வீட்டில் எனக்கு அந்தச்சின்ன அறை. எங்களைப்போன்ற சுமைகள் சிறியனுக்கு ஊரில் இருக்கவில்லை. தகப்பன் வங்கி முகாமையாளர். அதனால் குடும்பப்பொறுப்பை அவரே சுமந்தார். பணம் அனுப்ப வேண்டுமென்ற அவசியம் இருக்கவில்லை, இருந்தாலும் இடைக்கிடை வேலை செய்வதால் அதையும் சரிவரச் செய்தான்.





பலவேளைகளில் அவனிடம் கைமாற்று வாங்கி ஊருக்குப் பணம், அனுப்பியிருப்போம் நானும் ஐயாவும். சகோதரங்களை நினைத்துக் கவலைப்படுவான். ஆனாலும் அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருப்பது போல் தெரியாது. எங்களைப்போல் அகத்தின் அழகை முகத்தில் காட்டத் தெரிவதில்லை. துணிந்து எதையும் செய்வான். இப்போது தம்பிக்காரனைக் கூப்பிடுவதற்கு முயற்சி செய்வதாகச் சொன்னான்.

நாங்கள் முகாமில் இருந்தபோது எண்பது தமிழர்கள் சாப்பாட்டுச்சாமானும் கைச்செலவுக்கு ஐம்பது டி,எம்மும் (D.M) கிடைத்தது.

கோழிப்புக்கை, விதம்விதமான சாப்பாடு, எப்படியெல்லாம் கூழ்காய்ச்ச முடியுமோ அப்படியெல்லாம் காய்ச்சிக்குடித்து உடம்பை உப்பவைத்ததுதான் கண்ட மிச்சம். வீடியோ படக்கொப்பி, வீரகேசரிப் பத்திரிகையென்று வசதிகளைச் சோசல் அள்ளிக்குவித்து அனைவரையும் சோம்பேறிகளாக்கி வைத்திருந்தது.

அந்தவாழ்க்கையிலும் பலவிதமான அனுபவங்களை நாம் தேக்கிக் கொண்டோம். பத்து மாதங்களுக்கு மேல் முகாம் வாழ்க்கை, அதன்பிறகுதான் வீட்டிற்கு மாற்றினார்கள்.

அத்தனை உறவுகளையும் விட்டுப்பிரிய மனமில்லாமல் பிரிந்ததென்னவோ உண்மையாகினும், என் கையில் காசு கிடைக்கும். உடுப்பு வவுச்சர் தருவார்கள் என்ற பழையகாய்களின் அனுபவ அறிவுரையில் கொஞ்சம் சந்தோசமாகவும் இருந்தது.

பக்கத்துக் கட்டிடத்தில் பிறேமச்சந்திரன் என்ற நண்பன் இருந்தான் அவன் ஊரில் ஒரு பெண்ணைக்காதலித்து எதிர்ப்புத் தோன்ற இங்கு வந்து அவளை கூப்பிட்டுத் திருமணம் செய்து கொண்டவன். நாங்களே அந்தக் கலப்புத் திருமணத்தைச்செய்து வைத்தோம்.

அப்போதெல்லாம் எங்கள் ஊர்ப் பெண்களைப் பார்க்க

ஆசையாக இருக்கும். நாங்கள் இருக்கும் இடத்தில் ஒரே ஒரு இலங்கைத் தமிழ்ப்பெண்தான். இந்தக்காலங்களில் பெண்களின் வரவு மிகவும் குறைவு. பெரிய, பெரிய நகரங்களில் பழைய காய்கள் திருமணம் செய்திருந்தார்கள். அவர்களைப் பார்க்கப் பொறாமையாகக்கூட இருக்கும். உங்களுக்கென்ன காப்புக்கை சாப்பாடு என்று சிலர் முன்னாலேயே சொல்வதுண்டு. நாங்கள் வந்து இரண்டு மாதங்களின்பின் ஐந்து பேரை எங்கள் இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

எங்கள் வீட்டில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தள்ளி அவர்களின் வீடு இருந்தது. மாறி மாறி விருந்துபசாரம் என்று கொஞ்சநாள் அமளி துமளி. பிறேமச்சந்திரன் கப்பலில் வேலை செய்தவன். மூன்று முறை உலகத்தைச்சுற்றி வந்தவன். புதிய புதிய குடிவகைக்குப்பிகளை எங்களுக்கு அறிமுகப்படுத்தி அதனை நிரூபித்துக்கொண்டான்.

அந்த நேரத்தில் அகதிகள் சட்டத்தை யேர்மன் அரசாங்கம் நன்றாக இறுக்கி வைத்திருந்தது. அகதிகள் வருகையைக்குறைப்ப தற்கான இந்த இறுக்கத்தில் நாங்கள் அதிகமாகப பாதிக்கப் பட்டோம்.

இடைக்கிடை உள்ளூராட்சி அமைச்சு வேறு வெருட்டிக் கொண்டிருந்தது. அவரவர் நாட்டிற்கு விரைவில் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்களென்று சிலநாடுகளின் பெயர்களை பட்டியல் போட்டிருந்தது. அந்த நாட்டுப்பட்டியலில் இலங்கை அகதிகளும் சேர்க்கப்பட்டார்கள்.

நம்ம நாட்டுப்பிரச்சினையோ வர வர உக்கிரமடைந்து கொண்டு வந்தது. இதில் இந்த வெருட்டல்கள் வேறு வயிற்றைக் குடைந்து ஏதோ செய்தது. அகதி அந்தஸ்த்து ஏற்றுக்கொள்ளும் வரை வேலைசெய்ய அனுமதியில்லை. குறிப்பிட்ட எல்லைக்குமேல் அனுமதியில்லாமல் போகமுடியாது. தொழில் திணைக்களம் வெற்றுப்பத்திரம் ஒன்றை தந்து, வேலையைத் தேடி எடுத்துக்





கொண்டுவா பார்ப்போம். எங்கள் அனுமதியில்லாமல் வேலை செய்யக்கூடாது என்ற கட்டளை வேறு பிறப்பித்திருந்தது. வீதி வீதியாய் மேடு பள்ளம் என்றும் பாராமல் சைக்கிள்ஓடி எடுத்துக் கொடுத்த வேலைகள் நிராகரிக்கப்பட்டதுடன், எச்சரிப்புக் கடிதங்க ளும் வந்தன..

முதலாவது யேர்மனியர், இரண்டாவது ஐரோப்பியர் மூன்றா வது யாரும் செய்யாவிட்டால் உங்களுக்கு. இதை மீறி இந்த வேலையைச் செய்தால் சட்ட நடவடிக்கைக்குள்ளாவீரென்று பலகடி தங்கள் எனக்கு அனுப்பியிருந்தார்கள். இடிந்து உட்கார்ந்தேன்.

இந்த வேளையில்தான் அம்மா எழுதிய இந்தக்கடிதம் வந்து சேர்ந்தது .பனையால விழுந்தவனை மாடேறி மிதிச்சதுபோல், கடிதத்தை வாசித்தபோது என் கண்களில் இருந்து வழிந்த கண்ணீ ரை ஐயா பார்த்திருந்தார். அவருக்கு அந்தரமாக இருந்திருக்க வேண்டும்

"ஏண்டாப்பா அழுகிறாய்" என்று என்னைக்கேட்டார். அதுவரை கண்ணீருடன் அடக்கிய அழுகை கதறலாக வெளியில் வந்தது. அம்மாவை அவன் பேசிப்போட்டான் என்ற ஆத்திரம் என்னுடலை பதறவைத்தது. ஏதாவது துக்கச்செய்திகள் வந்திருக்கலாம் என்று ஐயா நினைத்திருப்பார். நான் அந்தக்கடிதத்தை அவரிடமே கொடுத்தேன். ஐயா கடிதத்தை வாசித்த வேளையில்

அவன் அம்மாவைப் பேசியதைக்கற்பனையில் பார்த்தேன். என்மனம் விம்மி வெடித்தது.

"ஏய் சிவா! உதுக்கே அழுகிறாய், அவன் காசு தந்தவன் இப்படித்தான் பேசுவான்"

இல்லையையா அவன் என்ர இனியில்லையென்ற நல்ல நண்பன் அவன் இப்படி நடந்துகொள்வான் என்று கனவிலும் நினைக்கேல்லை. இவன் யார் என்ர அம்மாவைப்பேச அவருக்கு எழுதிறன் ஒரு கடிதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஆத்திரத்தில் கத்தினேன்.

நீ என்ன நினைக்கிறாய். உனக்கு இந்த உலகத்தைப்பற்றிய அறிவு, அனுபவம் காணாது. பணமென்றால் பிணமும் வாய்திறக்கு மென்று தெரியாமலா சொல்லியிருக்கிறாங்கள். நீ உன்னை நினைத்து மற்றவங்களை எடைபோடாதே எவ்வளவு காசுக்கு ஒத்திக்கு வைச்சது."

இலங்கைக்காசுக்கு ஐயாயிரம் ரூபாய் ஐயா"

"எவ்வளவு சினேகிதர்கள் இருக்கிறாங்கள் உனக்கு, நிலமையைச் சொல்லிக்கேட்டால் தரமாட்டாங்களே"

ஐயாவின் குரலிலும் இரக்கத்தின் சாயல் ஒலித்தது

"ஆருக்கையா தெரியும் இவன் இப்படிக்கேட்பான் என்று"

சிறியன் இரவைக்கு ரெலிபோன் அடிப்பான் கேட்டுப்பார். அவன் எப்படியும் உனக்கென்றால் தருவான். நானும் சோசல் எடுத்துத்தாறன். மிச்சத்தை சினேகிதரிட்டக்கேட்டு அவன்ர காசை அனுப்பிவிடு. சும்மா இதுக்கெல்லாம் மண்டையைப்போட்டுக் குழப்பாதே தேத்தண்ணி குடிப்பியோ போடப்போறன்"

ஐயா குசினிக்குப்போனார். அவர் என்னை திசைதிருப்பவே இப்படிக் கேட்கிறார் என்பதை நானறிந்தேன்.

ஐயாவும் கடிதம் வந்தால் எப்போதும் வாசித்து அழுதிருக் கிறார். அதற்குப்பயத்தில் கடிதத்தையும்கொண்டு அறைக்குள் புகுந்து விடுவார். திரும்பி வரும்போது முகத்தைப்பார்த்தால் தெரியும் கொஞ்சம் கொஞ்சமாகக் கடிதத்து விடயங்களை அவிட்டு விடுவார்.

தன் மனைவியின்பால் நிறைந்த அன்பும் பாசமும் நம்பிக்கை





யும் வைத்திருந்தார். வேலை செய்யமுடியாமல் இருந்தவேளை "சிவா நான் மொக்கு வேலை செய்து போட்டன் பேசாமல் மனுசி பிள்ளைகளோடு அங்கையே சந்தோசமாக இருந்திருக்கலாம் நல்ல வேலை தோட்டமென்று எந்தக்கஸ்ரமும் இல்லை. கொஞ்ச நாளை யால என்ர மகனை அனுப்பியிருக்கலாம். பிள்ளைகள் வளரக் கனகாலமே."

தன்னுடைய மனைவியின் படத்தைப் பெரிதாக்கித் தலை மாட்டில் வைத்திருந்தார். புதிதாக நெக்கற்றிவ் வரவர பெரதாக்கி ஊருக்கு அனுப்பிவிடுவார்.

ஒவ்வொரு நாளும் காலையில் படத்தைத்தூக்கி வைத்துப் பார்ப்பாராம். சிறியன் சொல்லுவான்."

"பாவமடா சிறி இன்னும் எத்தனைகாலம் சிறி அந்த மனுசனின் வாழ்க்கை? இருக்கின்ற கொஞ்சக்காலத்தை குடும்பத்தோடு சேர்ந்து,மகிழ்ந்து வாழ்ந்து கழிப்பதுபோல் வருமா? என்று நான் பலமுறை சிறியனிடம் சொல்லியிருக்கிறேன்."

மனுசி கெட்டிக்காரி அனைத்தையும் வெட்டி ஆளும் என்று மனுசியைப்பற்றிப்புகழும்போது தொண்டை கரகரக்கும் அந்தப் பிரிவின் தவிப்பை என்னால் பலமுறை உணர முடிந்தது.

ஐயா மனைவியை இப்போதெல்லாம் அதிகமாகக் காதலித் தார். எனக்கு மனைவி புராணத்தைக்கேட்டு காதிரண்டும் புளித்து விட்டது. சிறியன் வந்து நிற்கும் காலங்களில் மாட்டுப்பட்டதுண்டு.

"எப்படிண்ணன் சமாளிக்கிறியள்?" என்று அவன் என்னைக் கேட்பான்.

"பாவமடா சிறி அவர் இப்ப சரியாகக்கவலைப்படுகின்றார். ஏக்கங்கள் தாகங்கள் எப்போதும் அவரது குடும்பத்தைப்பற்றியே வரும் இவரது வயதும் அப்படி.. எனியும் ஒரு வேலை இருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடப் பொழுது போய் விடும். இதுதான் எல்லாருக்குமே உள்ள கவலை. கெதியில பார் எங்களுக்கும் சில வேளை மண்டையில தட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

இப்படி நான் சொன்னால் அவன் வயதுக்குச் சிரிப்புத்தான் வரும். கெக்களம் கொட்டிச்சிரிப்பான். எனக்கும் சிரிப்பு வரும். நாங்கள் இந்த இடத்திற்கு வரும்போது எப்படியும் வேலை கிடைக்கு மென்ற நப்பாசையிருந்தது. இரண்டு வருடங்களில் பலத்த ஏமாற்றத் தைச்சந்தித்தோம்.

கொஞ்சப்பணமும், சாப்பாடும் தந்து இருக்கவிட்டால் அதைப் போல சுகம் வேறெதுவுமில்லை. அதுவும் வாழ்க்கை முழுக்க இப்படியிருக்கவேண்டுமென்று ஊரில் கடினமான வேலை செய்யும் ஒவ்வொரு வேளையிலும் நினைப்பதுண்டு.

உழவுகாலம், அரிவு வெட்டுக்காலம், பலகை அடிப்புக்காலம் தோட்டவேலையென்று அவதியுறும் போது இப்படியெல்லாம் நினைக்கத்தோன்றும். பிறந்தால் காசுக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்க வேண்டும். காலாட்டிக்கொண்டு வாழ்ந்திருக்கலாம். இந்த நினைப்பை அடியோடு மாற்றியிருந்தது. இந்த அகதி வாழ்க்கை பல அனுபவங்களை எமக்கு இது கற்றுத்தந்தது. சாப்பாடு உடு பிடவை, கைச்செலவுக்குப்பணம் இருக்க அழகான வீடு இவைமட்டும் போதுமென்றில்லை. இதற்கு மேலும் ஏதோ ஒன்று தேவை அதுதான் ஒரு தொழில் வேலை யென்பதை உணரவைத்தன.

இந்த இரண்டு வருடங்கள். ஊரில் நாம்பட்ட கஸ்ரங்களே இந்த வாழ்க்கையிலிருந்து நினைத்துப்பார்க்கையில் சுகமாகத் தெரிந்தது. உழைப்பு, அது உன்னதமானது. ஒவ்வொரு வரும் தொழில் தர்மத்தை உணர்ந்து உறுதியோடு கஸ்ரப்பட்டு உழைத் தால் நம்ம நாட்டிலும் பிரச்சனையில் பாதி குறைந்திருக்கும் போல் இங்கிருந்து பார்க்கும்போது எனக்குத்தெரிந்தது.





நம்மடை வேலையை நாம் செய்யவே களவு. பூசி மொழுகி வந்துவிட்டு உற்பத்தியில் அதிக இலாபம்வரவில்லையென்று நொந்து கொள்வதில் என்ன அர்த்தம்.இந்த அனுபவம் இங்கு வந்து பார்த்த பின்னே எனக்குக்கிடைத்தது.

தொழிலில் ஏற்றத்தாழ்வுகள் இன்றி எல்லோரும் எல்லாத்தொழி லையும் செய்யலாம் என்ற உன்னதமேம்பாடு இந்த நாட்டை முன்னேற்றியிருந்தது. இப்படிப்பட்ட நாட்டில் நாங்கள்மட்டும் சோம் பேறிகளாக வாழுகின்ற வாழ்க்கை மிகக்கேவலமாகத் தெரிந்தது.

எண்பத்தைந்தாமாண்டு வெய்யில்காலத்தில் எனக்கொரு வேலை கிடைத்தது. இங்கிருந்து இருபத்தாறு கிலோமீற்றர் சைக்கிள் ஓடவேண்டும். ஐயா நான் இவ்வளவு தூரம் சைக்கிள் ஓட மாட்டேனென்று மறுத்து விட்டார். பிறேமச்சந்திரன் குடும்பத்திற்கு இவ்வளவு கஸ்ரப்பட்டு வேலை செய்ய வேண்டுமென்று அவசியம் இருக்கவில்லை.

நானும், கிளியண்ணன், அருள்ராசா, சிறியன் நாலுபேரும் விடியப்புறம் சாப்பாடும் கட்டிக்கொண்டு புறப்பட்டோம். முதல்நாள் நான்தான்போய் வேலைகேட்டிருந்தேன். நண்பர்கள் இருந்தால் கூட்டிக்கொண்டு வா என்று அந்த முதலாளி சொன்னான்.

எவ்வளவு சம்பளம் என்றே கேட்கவில்லை. கேட்டால் வேலை இல்லையென்று சொல்லி விடுவானோ என்ற பயத்தில் பெடிய ளுக்கு வந்து சொல்ல செம புழுகு.

ஐயாவுக்கு மாத்திரம் இயலாமை கருதி முகம் வாடியிருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டார். நாங்களும் போக முதலாளி யும் வந்தான். கண்ணுக் கெட்டியதூரம்வரை தன்னுடைய தோட்ட மென்றான் அங்கே சீனிக்கிழங்குதான் நட்டிருந்தான். எப்படியும் இரண்டு மூன்றுமாதம் வேலை செய்யலாம் என்று கிளியண்ணன் சொன்னார். எல்லோரும் எனக்கு நன்றி சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அப்போது மகிழ்ச்சியும் கொஞ்சம் சங்கடமாகவும் இருந்தது நாற்பது மணித்தியாலம் வேலை செய்திருப்போம். வேலை செய்தோம் என்பதைவிட முறிந்தோம் என்பதே பொருத்தம். அப்படி வேலை. எங்கள் வேலையைப்பார்த்து தொடர்ந்து அவன்வேலை தரவேண்டும் என்கின்ற ஆதங்கத்தில். அவனே மெதுவாக என்று சொல்லுமளவிற்கென்றால் பாருங்களேன்.

அன்று, உளவு இயந்திரத்தில் பிடுங்கிய கிழங்குகளை ஏற்றச்சொன்னான். வோர்க்கை என்று சொல்லுகின்ற ஆயுதம் அதனால் குற்றி ஏற்றவேண்டும். குத்தும்போது இரண்டு மூன்று கிழங்குகளும் குத்துப்படும். இங்குள்ள உழவு இயந்திரம் மிகவும் உயரமானது. சிலகிழங்குகள் ஏழெட்டுக்கிலோ வென்றுவரும் எறியும் போது சிலதுகள் விழாது ,திருப்பிப்பெட்டியோடு அடிக்கவேண்டும். பயங்கரக் கஸ்ரமானவேலை. அதை அனுபவித்தவர்களுக்குத்தான் அந்தக்கஸ்ரம் விளங்கும். தலையெல்லாம் கிறு கிறுத்து என்னவோ செய்தது.

இவ்வளவு நாளும் சேர்த்து வைத்த உடம்பின் மினுக்கங்கள் வேர்வையாக வெளியேறிக் கொண்டிருந்தன. அருள்ராசா அழகாகச் சொன்னான் அவன் கொஞ்சம் தமாஸ்ப்பேர்வழி. "சிவா அண்ணன் அம்மாவிட்ட குடிச்சபால்எல்லாம் வெளியில வருகிது. என்ன கிளியண்ணண் மூன்றுமாதம் வேலை செய்யப்போறியளோ?"

"நாளைக்கு நான் வரேல்லையப்பா" சிறியன் அழுதான்.

நான் அழுதது என்மனதுக்குத்தான் தெரிந்தது.

எப்படியும் இந்த வேலைக்கு பத்து மார்க் சம்பளம் தரவேண்டும். கிளியண்ணன் சொன்னார்

ஏற்றிமுடிய வேலை முடிந்தது மிச்சத்தை நான் மெசினால் பிடுங்குவேன் என்றான். அப்பாடா என்றது உள்மனம் அவனுடைய வீடு அதிகதுாரம் இருக்கவில்லை. வீட்டிற்குப்பின்னால் உள்ள





புற்தரைமேல் போடப்பட்டிருந்த மேசை மீது விதம்விதமான சாப்பாடு வகைகள் வந்து சாப்பிடும்படி அன்பாக அவன்மனைவி கூப்பிட்டாள்.

"இதுதான் சம்பளமாக்கும்"அருள்ராசா பகிடி விட்டான்

வயிறு நிறைந்த பசி விதம் விதமான வடிவங்களில் இறைச்சி. பணத்தை மிச்சம்பிடித்து வீட்டை அனுப்பிறதற்காக கடைகளில் பார்த்து வாயூறிய பதார்த்தங்கள் மேசைமேல் குவிந்து கிடந்தன. போனால் போகட்டும் என்று ஒரு பிடி பிடித்தோம். கிளியண்ணன் பிறவிச்சைவம் அவர் மச்சம் சாப்பிடவில்லை. அவர் ஏன் சாப்பிடு வதில்லையென்று அவர்களுக்கு விளங்கவைக்க மிகவும் சிரமப் பட்டோம்.

அப்போதுதான் அவர்கள் நீங்கள் யார் எதற்காக வந்திருக் கிறீர்கள் என்பதைக்கேட்டறிந்து மிகவும் கவலைப்பட்டார்கள். இவையெல்லாம் விளங்கவைக்க எங்களுக்குள்ள யேர்மன் மொழி அறிவு மிகவும் சிரமப்பட்டது.

சாப்பிட்டு முடித்து அவர்கள் தந்த கடித உறையைப் பிரித்துப்பார்த்தபோது தலையைச் சுற்றியது. சாப்பிட்ட சாப்பாடு உடன் செமித்தது போல் பதறல் எடுத்தது. எல்லோரும் நானூறு மார்க் ஒவ்வொருவருக்கும் வரும் என்று கணக்குப் போட்டிருந்தார் கள். மணித்தியாலம் இரண்டு ருபாய் வீதம் எண்பது டி மார்க்குகள் அதற்குள் இருந்தன.

எல்லோருடைய முகங்களும் வெளிறிப்போயிருந்ததை நான் பார்த்தேன்.

கிளியண்ணன் "இவனொரு பொறுக்கி, இரக்கமற்றவன் எங்களைக்கொண்டு முறிமுறியென்று முறிச்சுப்போட்டு ,இதென்ன சம்பளமே"என்று இரைந்தார்.

அவனிடம் இது போதாது என்று கேட்டும் அவன் மேலதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சதமும் தரவில்லை. எங்களுக்கு இது ஒருபாடம் சம்பளத்தைக் கேட்டுத்தான் வேலை செய்திருக்க வேணும்.

இரண்டு மார்க் என்று அவன் சொல்லியிருந்தாலும் நாங்கள் கிடந்த கெடுவுக்கு வேலை செய்திருப்போம் என்று அருள்ராசா சொல்லிச் சிரித்தான்.

பின்பு நாம் எல்லோரும் ஒன்றாக இருக்கும்போது என்ன சிவாண்ணை சீனிக்கிழங்கு பிடுங்கப்போவமோ என்று சொல்லிச் சிரிப்பது பகிடியாயிற்று.

அதன்பிறகு வேலை தேடுவதை நிறுத்தியிருந்தேன். அப்படிப் போனாலும் இதுகஸ்ரமான வேலையென்றால் கேட்கும்போதே கிடைக்கக்கூடாது என்று உள்மனம் சொல்லும்.ஒரு ஆதங்கத்தில் கேட்பதுதான்.

அம்மாவின் இந்தக்கடிதம் வந்தபின்பு என் மனநிலை வெகுவாகப் பாதித்திருந்தது. எப்படியாவது வேலைசெய்ய வேண்டு மென்பதில் தீவிரமாக இருந்தேன். அந்த வேலை அன்று கிடைக்கு மென்று நான் நினைக்கவேயில்லை. தொழில் அனுமதிப்பத்திரத்தை தானே நிரப்பி அனுப்புவதாகவும் நாளைக்கு விடிய வேலைக்கு வரும்படியும் முதலாளி சொன்னான்.

அந்தவேலை எங்களிடத்திலிருந்து பதினைந்து கிலோ மீற்றர் வரும். போக்குவரத்தில் பிரச்சனை இருக்கவில்லை என்னோடு வேலை செய்யும் எயவின் என்பவர் எங்கள் கிராமத்தைத் தாண்டியே வேலைக்குப் போய்வந்தார்.

அவருக்கு அந்த நேரத்தில் வயது அறுபத்தைந்துக்குமேல் இருக்கும். நல்ல உயரமும் உடற்கட்டும் நிறைந்த யேர்மனியர். நான் பப்பா என்று கூப்பிடுவேன்.

அந்தப் பிரதேசத்தின் நீர் ஓடும் வாய்க்கால் எல்லாம் எங்கள் முதலாளி கயின்ஸ்மாயா குத்தகைக்கு எடுத்துப் பின் புல்லு வெட்டித் துப்பர வாக்குவான் அதில்தான் எங்களுக்கு வேலை.





மூன்றுபேர் ஒன்றாக வேலை செய்தோம். எயவின் பப்பாவுக்கு எழுத்தறிவு இல்லை, அதனால் ஜினி என்பவனே முதல்தர தொழிலாளி. அவன் என்னைவிட இளமையானவன்.

என்னைப்பொறுத்தமட்டில் இந்த வேலையும் கஸ்ரமானதே. நம்ம நிலையில் கஸ்ரத்தையும் சுமக்கத்தயாராகஇருந்தேன். முதல் நாள்வேலை பப்பாவையும் மெசினையும் இழுத்துப்பிடிக்கவேண்டும். கொஞ்சம் விட்டால்கூட பப்பா மெசினோடு தண்ணீருக்குள் விழுந்திடு வார். இப்படி இரண்டு மூன்று கிலோமீற்றர் தொடருவேன். எனது கழுத்தைச்சுற்றி கயிற்றை வளைத்துப்பிடிப்பேன். என்னால் முடியாமல் கை சோரும். சீக,சீக என்று (இழு இழு வென்று)பப்பா கத்துவார். தைரியத்தை வரவழைத்து மீண்டும் இழுப்பேன.

இந்த இடையில் ஐயாவும் பூ, வியாபாரத்தை ஆரம்பித்தார். காலையில் றோசாப் பூக்களை வாங்கி இரவு உணவு விடுதிகளில் கொண்டு சென்று விற்பது. காதலியோடு இருப்பவர்கள் இரண்டு மயக்கத்திலும் தங்களை மறந்து அதிக விலை கொடுத்து வாங்கிக் கொடுப்பார்கள். உழைப்புப் பரவாயில்லையென்று ஐயா சொன்னார்.

முதல்மாதச்சம்பளம் ஆயிரத்து முந்நூறு டி மார்க் வீட்டிற்கு அனுப்பி அந்த எளியவனின் காசைக்கொடுக்க வேண்டும். வங்கிக்குப் போய் விண்ணப்பப் படிவம் நிரப்பியபின் காசை எடுத்துக்கொடுப் போம் என்று கால்சட்டைக்குள் கையை விட்டேன். கை கால்வரை சென்றது. பணத்தைக் காணவில்லை. இதயம் பலமடங்கு வேகத் துடன் அடிக்கத்தொடங்கியது. வங்கியில் இருந்தவளுக்கு விடயம் புரிந்தது. பரிதாபமாக என்னைப்பார்த்தாள்.

எவ்வளவு கஸ்ரப்பட்டு சேர்த்த அந்தப்பணம் ஐயோ என்ர காசு, என்ர காசு கதற ஆரம்பித்தேன்.கண் விழித்தபோதுதான் நான்கண்டது கனவு என்று அறிந்துகொண்டேன்.

தேகம் நெருப்பாய் கொதித்தது, வேலையின் கொடுமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகம் வீங்கி வேதனையில் துடித்தது. அப்போது அந்த வேலைக்குப்போய் ஒரு கிழமைதான் இருக்கும். அதற்கிடையில் சம்பளம் வாங்கி வீட்டிற்கு அனுப்பப்போன எனது ஆதங்கத்தை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். அதிகாலை எழும்ப முடியாமல் எழுந்து வேலைக்கு ஆயத்தமானபோதுதான் ஐயா அந்தக்கடிதத்தைக் கொண்டுவந்து தந்தார். அது தொழில் திணைக்களக்கடிதம் உடைத்து வாசித்தபோது இடிந்து போனேன்.

எனது அந்த வேலைக்கு அனுமதி மறுத்திருந்தார்கள். எச்சரிக்கைவேறு.

காய்ச்சல் நிற்க முடியவில்லை. என்ன செய்யப்போறாய் என்று ஐயா கேட்டார்.

என்னநடந்தாலும் நான் போகத்தான் போறன். அவனுக்கு இந்தக்கடித்ததைக் காட்டப்போவதில்லை. நடக்கமுடியாமல் கால்கள் பின்னின. உடல் குளிரில் குதறியது ஆனால் நான் வேலைக்குப்போகிறேன்.





# ஆத்ம திருப்தி

**- மீனா சிவலிங்கம் Hennef**

இரவு நேர ஊதல் காற்று அவனை மெல்லத் தாலாட்ட அதனை கண் மூடி ரசித்தபடி முற்றத்து நிலவொளியில் ஈஸி சேயாரில் ரவி சாய்ந்திருந்தான். சத்தம் மெல்லமாக இருந்தாலும் வானொலியில் வந்த இரவுநேர ஒலிபரப்பு கேட்பதற்கு மனதிற்கு இதமாக இருந்தது.

பழைய சினிமாப் பாடல்கள் அவனை மிகவும் கவர்ந்த பாடல்கள் அவன் காதில் தேனாக வந்து பாய்ந்தன.

வானத்திலே பால் நிலா முகில் கூட்டத்தில் மறைந்து ஒழிந்து எட்டிப் பார்த்து ஆகா எத்தனை அழகை அள்ளிச் சொரிகிறது. எத்தனை முறை பார்த்தாலும் தினமும் பார்க்கத் தூண்டும்

இந்த அழகிய காட்சியை ரசிக்க தெரியாதவன் மனிதன் அல்ல என எண்ணத் தோன்றியது ஒருகணம் அவனுக்கு. ஓடும் மேகங்களை தூது விட்ட கதைகள் ஞாபகத்துக்கு வர அவனும் ஓடும் மேகங்கள் உரு மாறி மாறி வரும் காட்சிகளை ரசித்தபடி இருந்தான் எத்தனை மனநிறைவு இந்த நேரத்தில் அவனுக்கு ஏற்பட்டது.

ஐந்து ஆண்டுகள் வெளிநாட்டு வாழ்க்கை தந்த அனுபவ பாடம் ஒரு ஜெயில் வாழ்க்கை. சொந்தநாட்டை விட்டுப் பணம் தேடவும் அமைதியை தேடியும் ஓடி அலைந்து

ஏஜன்சிக்கு இருந்த பணத்தை எல்லாம் கொடுத்து கண்டது என்ன? ஜேர்மனியில் ஒரு இயந்திர வாழ்க்கைதான் கண்ட மிச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் நம்ப மாட்டார்கள் இன் சனத்தவர். ஜேர்மன் வாழ்க்கையைப்பற்றி. 'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பது போல' வெளிநாட்டிலை ஏதோ அள்ளிக்குவிக்கப் போறதாக நினைத்து ஓடிப்போய் நாய்படா பாடுபட்டு வந்தவன். சொன்னாலும் யாரும் நம்ப மாட்டினம். இவர் தான் நல்லா சம்பாதிச்சிட்டு வந்திட்டார். இப்ப நாங்கள் போய் நல்லா வந்திடுவம் என்று தான் இப்படி சொல்கிறான் என்று பக்கத்து வீட்டு பாட்டிகூட சொல்லேக்கை அதுக்கு மேலை என்ன கதை யாருக்கு அவன் எடுத்து சொல்ல?

அம்மா கூட நம்பலை ஏன் ராசா எல்லாரும் வெளிநாட்டுக்கு போய்த்தானே நல்லா வருகுதுகள். நீ நல்லா படிச்சனி. அங்கை போய் நல்ல வேலையை எடுத்து நல்லாய் வராமல் திரும்பி வந்து நிக்கிறாய் என்னதான். எனி செய்ய போகிறாய்? என்று அம்மாவின் கேள்வி

அப்பா சிவராசா, பிழைக்கிற பிள்ளைதான் எங்கை போனாலும் பிழைக்கும் ஊருக்குள்ளை விலை போகாத மாடு வெளிநாட்டிலை விலை போகுமா? என ஒரு குத்தல் கதையோடை நிப்பாட்டி விட்டார்.

ஆனால் அவரது நண்பன் கந்தசாமிமாமா வந்த போது அவர் சொல்லியது காதில் கேட்டது

இவன் ஏதோ போய் நல்லா வரப்போகிறான் என்று சொல்லி மகளுக்கு கல்யாணத்துக்கு என்று சேர்த்து வைத்திருந்த காசை எல்லாம் ஏஜன்சிக்காரனுக்கு கட்டி அளந்ததுதான் மிச்சம்

பெடியன் போன கையோடை ஐந்து வருடம் ஏதோ ஊர் பார்த்துவிட்டு திரும்பி வந்திருக்கிறான். இப்ப வேலையும் இல்லை இருந்த மாஸ்டர் வேலையையும் விட்டாச்சு எனி திருப்பி கிடைக்குமோ தெரியலை வளந்த பொடியனோடை ஒன்றும் கதைக்க முடியல்லை என்று அவர் குறைபட்டது அவனுக்கும் கேட்டது.





அவனது துயரம் யார் அறிவார். அது என்ன வாழ்க்கையப்பா நினைத்தாலே ஐந்து வருடத்தை அநியாயமாக தொலைத்து விட்ட வேதனைதான் மிஞ்சும். பாசையும் தெரியாத ஜேர்மன் நாட்டில், படித்துப் பட்டம் பெற்று, அந்த சொந்த ஊரான யாழ் நகரிலேயே யாழ் இந்துக் கல்லூரியில், தான் படித்த அதே பாடசாலையில் மாஸ்டராக வேலை பார்த்த போது அவன் கண்ட மன நிறைவு அவன் வாழ்ந்த கடைசி ஐந்து வருடத்திலும் காணவில்லை. சும்மா மற்றவர்கள் போகினம். திடீரென்று பணம் பணமாக வீட்டுக்கு அனுப்புகினம். கொஞ்ச நாளிலேயே பணக்காரராகி வாழ்க்கையில் உயர்ந்து விடலாமென்று அவன் தங்கையும் அம்மாவும் தினம் சொல்ல கேட்டுத்தான் அவனும் இருந்த வேலையையும் விட்டு விட்டு போனான். போய் பார்த்த பின்தான் தெரிந்தது எப்படி எல்லாம் தமிழ் சனம் அங்கே வாழுது என்பது.

இங்கே சாதி மதம் என்று பார்த்து வாழ்ந்த சனங்களும் வீட்டை துப்பரவாக்க ஒரு ஆளும் தோட்ட வேலைக்கு ஒரு ஆளும் என வாழ்ந்தவர்களின் பிள்ளைகளும் அங்கே அந்நியன் வீட்டு கழிவறைகளை அதுவும் பெண் பிள்ளைகள் தனியாகப்போய் கழுவுவதும், இரவு பகல் என்று பாராமல் ரெஸ்ரோறண்ட்களில ஆண்கள் கோப்பை கழுவி துப்பரவாக்கி நாலு காசு சேர்த்து இங்கே ஊருக்கு வரேக்கைமட்டும் பெரிய சொகுசாக ஜீன்சும் பொப் வெட்டிய தலைமயிரோடும் வந்து இறங்கி சோ காட்டுவதால் ஏதோ வெளிநாடு போனால் அள்ளலாம் என நினைத்துத்தான் சனம் அள்ளுப்படுகுதுகள்.

படித்து பட்டம் பெற்றவனுக்கு பாசை தெரியாத அந்த ஊரில் என்ன வேலை இருக்கு? இலங்கைத்தமிழன் என்று சொன்னாலே ஒரு இளக்காரமாகத்தான் ஜேர்மன்காரன் கூடுதலாக நினைக்கிறான்.

இவங்கள் இங்கே பஞ்சம் பிழைக்க வந்த மாதிரியும் எல்லாரையும் ஒரே மாதிரி படிக்காத சனம் என்றுதான் அநேகம் பேர் நினைக்கிறாங்கள். அப்படி இல்லாமல் ஒரு நல்ல உடை உடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் கலர் புல்லாக வெளியிலே போனால் கண்ட ஜேர்மன் காரன் உடனே சொல்கிறான் உனக்கென்ன சோசல் காசு தருகுது நீங்கள் நல்ல திரியலாம்தானே என எரிச்சுல் மூட்டிவிடுவான்.

கொஞ்ச நாள் ரவியும் ஒரு ரெஸ்ரேறன்ட்டில் வேலை செய்து பார்த்தான். அவனால் முடியல்லை.

குனிந்து வளைந்து கழுவி துடைத்து, அப்பா அந்த குளிருக்கை விடிய எழும்பிப்போய், பின்பு இருக்கிற அந்த கைமுக்கு (விடுதிக்கு) வந்தால் சாப்பாடு வேற அவனே சமைக்கணும். உடுப்பு தோய்த்து குளித்து வர அவன் பசியே போய் விடும் இதை எல்லாம் விட அவனோடு கூட இருக்கிற மற்ற தமிழ் பொடியள் கூட அவனை ஒரு படித்தவனாகவோ மாஸ்டராக இருந்ததாகவோ யாரும் கணிப்பதில்லை. அங்கே எல்லோருக்கும் சமத்துவம்.

அவன் ஜேர்மனியில் அசூல் (Asyl) அடித்தபோது அவனுக்கு கிடைத்த இருப்பிடம் ஒரு வீடல்ல. அது இடிந்த நிலையில் இருந்த பழைய பாடசாலை. அதில்தான் ஒவ்வொரு ரூமிலும் மூவராக நிறையப்பேர் தமிழர் மட்டுமன்றி வேறே நாட்டவரும் சேர்ந்தே இருந்தனர். பொதுவான கிச்சன் பொதுவான ரொயிலற் அவனுக்கு அந்த வாழ்க்கை அருவருப்பைத்தான் தந்தது. அம்மா அப்பாவோடு ஊரிலே சந்தோசமாக துப்பரவான வீட்டில் வாழ்ந்து பழகியவனுக்கு இந்த வாழ்க்கை

எப்படி இருக்கும். ஒன்றிலுமே அவனுக்கு என்று ஒரு பிரிவசி (Privacy) இல்லை. ஒரு புத்தகம்கூட அமைதியாக வாசிக்க முடியாது. பக்கத்தில் பியர் போத்திலும் கையுமாக ஒரே அட்டகாசம். தனியா வந்ததாலே சுதந்திரம் நாட்டுக்கே கிடைத்த மாதிரி சில தமிழ் பொடியள் ஒரே கொண்டாட்டம்.

சிகரட் புகை பூட்டின அறைக்குள் இருந்து புகைத்து ஒரே புகை மண்டலம். அவனால் அந்த மணத்தை சுவாசித்துக் கொண்டு எப்படி இருப்பது. பல தடவை இதுபற்றி மற்ற பொடியளுக்கு சொல்லி சண்டை வந்ததுதான் மிச்சம்.





அவை உடனே சொல்லுவினம் ரவி நாங்கள் இவ்வளவு பேரும் வெளியிலை போறதைவிட நீர் ஒருஆள் எழும்பி வெளியிலை போகலாம்தானே என்று. கடைசியாக அவன் கவுஸ் மாஸ்டரிடம் சொல்லி, பெரிய சண்டை வந்தபிறகு தான் அவனுக்கு தனிய ஒரு றூம் கிடைத்தது. ஆனால் அங்கை உள்ள ரொயிலற்றுக்கு போறதென்றால் கியூவில் தான் விடிய நிக்கணும். அத்தோடை அவன்தான் அடிக்கடி அத்தனைபேரும் பாவித்த ரொயிலற்றை கழுவி துப்பரவாக்க வேண்டும். ஏனெனில் வேறு யாருக்குமே அது பற்றி அக்கறை இல்லை.

கிச்சினில் அவன் வாங்கி வைக்கிற சாமான்கள் எல்லாம் களவு போய்விடும். கழுவித் துப்பரவாக கவிட்டு வைத்த அவனது பாத்திரங்களை எடுத்து சமைத்துப் போட்டு கழுவாமல் தொட்டிக்குள் எறியப்பட்டிருக்கும். வேலையால் வந்தால் கிச்சனில் இருந்து பாத்திரம்வரை கழுவி துப்பரவாக்கித்தான் அவனால் சமைத்து சாப்பிட முடியும். சீ என்று போய் விட்டது. தினமும் சண்டை அங்கு உள்ளவர்களோடு.

படுக்கப்போய் கட்டிலில் இருந்தால் அப்ப பார்த்து, வேணும் என்றோ தெரியவில்லை பெரிய சத்தமாக தொலைக்காட்சியோ றேடியோவோ அலறும்.

இதை எல்லாம் சகித்து வாழப்பழகிக் கொண்டுவர அவனுக்கு கனநாள் எடுத்தது. அவன் கொஞ்சம் கொஞ்சமாக அந்த தனிமை வாழ்க்கைக்கு தன்னைப் பழக்கிக் கொண்டுவர அந்த குளிர் ஒத்து வராமையால், அவனுக்கு ஒரே சுகயீனம். வின்ரர் முடிந்து சமர் தொடங்கேக்கை ஒரு அலர்ஜி வருத்தம் பிடித்து அது வேறை ஒரே தும்மல்.

முப்பது வயதும் வந்துவிட்டது வாழ்க்கையில் இன்னும்தான் நினைத்ததை பிடிக்க முடியவில்லை. ஒரு நல்லவேலை கிடைத்தால் தனி வீடு எடுத்துப்போகலாம் அதுக்கு நல்ல காசு வேணும் .இதற்குள் வந்த காசை திருப்பி கொடுக்கவேணும். மாதம் மாதம் அவனால் 50 ஒயிறோவுக்கு (EURO) மிஞ்சி வீட்டை அனுப்ப முடியல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளில் அவன் செய்யாத வேலையெல்லாம் செய்து விட்டான் சின்ன வயதிலேயே அவன் மனம் எனி முன்னேற முடியாது என சோர்ந்துவிட்டது. ஒரு வேளை படிக்காமல் கஸ்டத்தில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கும் அவனுக்கு ஒவ்வொரு நாள் போவதும் ஒரு யுகம் போவது போலாகிவிட்டது. ஒரு நாள் தீடீரென அவன் வேலை செய்த இடத்தில் நூடில் மெசினில் கை அகப்பட்டு இட்டு கை சுட்டு விரல் வெட்டுப்பட்டு விட்டது.

அத்தோடு சிக் லீவில் நின்று களவாக பார்த்த அந்த வேலையும் போய் விட்டது. பிறகு ஒரு மாதிரி ஒரு பக்ரறி(Factory) வேலையை தேடியெடுத்தால் அங்கே வேலை செய்கிற ஜேர்மன் காரர்களுக்கு சரியான துவேசம். அவனை மதிக்கவே மாட்டுதுகள் எப்ப பாத்தாலும் அவனை பற்றி கதைத்து சிரிப்பதே அவர்கள் வேலை.

அவனுக்கு ஆத்திரம் பத்திக் கொண்டு வரும் மனதிற்குள் நினைப்பான். அங்கை வேலை செய்கிற சக ஊழியர்கள் அதிகம் படிக்காத முட்டாள்கள் அவனோ மெத்த படித்தும் அந்த பயனை இழந்து நிக்கிறான். அதுகள் அவனை ஒரு முட்டாள் ஆக பார்க்கையில் மனம் வேதனையில் துடிக்கும்.

ஒரு நாள் அவன் கேட்டேவிட்டான். என்ன ஒரே நக்கல் அடிக்கிறியள் உங்கடை நாட்டிலை உங்கடை பாசையிலை உங்களுக்கு படிக்க முடியலை படித்திருந்தால் இதை விட நல்ல வேலை எடுத்திருப்பியள்தானே. நான் என்ர நாட்டிலை நல்லா படித்துப்பட்டம் பெற்று விட்டு அந்நிய நாட்டிலை பாசை வேறாக இருப்பதால்தான் இந்த வேலையை செய்கிறன் முட்டாள்களான உங்களோடு. அதோடு அவனுக்கு அடுத்த கிழமை வேலையை நிப்பாட்டி விட்டார்கள் .

எங்கே போனாலும் அவனுக்கு மன உறுத்தல் தான் மிச்சம்.

இப்ப புது சோசல்சட்டம் வேறு வந்து வேலை இல்லாமல் சோசல்கெல்ப்பில் இருப்பவருக்கு மணித்தியாலம் ஒரு ஒயிறோ





வேலை என்று சொல்லி றோட்டுக்கூட்ட அவனை போகச் சொல்லி கடிதம் வந்ததும் அவன் இடிந்தே போனான்.

அந்த குளிர்நாட்டிலை அத்தனைபேரும் பார்க்க அவன் தெருத் தெருவாகக் கூட்டினால்தான் அவனுக்கு எனி சோசல் காசுகொடுக்கு மாம். இந்த வாழ்வை வாழ்வதென்றால் ஊரிலேயே முனிசிபால்ற்றி யில் சேர்ந்து சொந்த நாட்டை துப்பரவாக்கி இருக்கலாமே. அன்னிய நாட்டுக்கு இவ்வுளவு பணத்தை கொடுத்து வந்து பட்டதாரியான அவன் தெரு கூட்டும் வேலைதான் விதியாச்சு.

சொந்த ஊரை துப்புரவாக்கச் சொன்னால் யாருமே செய்ய மாட்டினம். சொந்த் வீட்டை ஒருக்கா கூட்டச்சொன்னால்க்கூட செய்ய கூட்ட மாட்டினம் ஆனால் அன்னிய தேசத்திலே அதிக மான தமிழர் இதைத்தான் தம் தொழிலாக செய்யினம். இப்படி பணத்தை சேர்த்துத்தான் ஊருக்கு வந்து பவுசு காட்டித்தான், அதிகம் பேர் வெளி நாடு வந்து நாசமாய்ப் போய் நிற்கின்ற நிலையை அவனால் இப்பதான் உணர முடிந்தது.

இருக்கிற மதிப்பான வேலையை விட்டு விட்டு வந்து இப்படி கஸ்டப்பட வேண்டுமா? நாட்டிலை யுத்தம் அது இது என பல காரணம் சொன்னாலும் அப்ப என்னவோ அது சரியாகப் பட்டுது. ஆனால் இப்ப அவன் எடுத்த முடிவு பிழை என்றே மனம் சொல்லுது.

'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' எங்கே இருந்தாலும் மரணத்தின் பிடியிலிருந்து நாம் தப்ப முடியாது

ஆனால் வாழ்கின்ற கொஞ்சக்காலமாவது மனநிறைவோடு ஆத்ம திருப்தியோடு எமது மனதுக்கு பிடித்த வேலை செய்து பிடித்த வாழ்க்கையை அமைத்து வாழ்வதுதான் சிறப்பு என முடிவு எடுத்தான்.

அவன் அடுத்த நாளே, தான் ஊருக்கு போவதாக ஜேர்மன் அரசாங்கத்துக்கு சொல்லிவிட்டு போனமாதிரியே ஒரு பெட்டி யோடு கட்டுநாயக்கா விமானத்தில் வந்து இறங்கிய போது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாக சில பேர் மூன்றாக கூட நேரம் இல்லாமல் ஓடி ஓடி வேலை செய்து சிலர் அங்கே இள் வயதில் மாண்டகதைகூட அவன் அறிந்ததே. யார் என்ன சொன்னாலும் எனி அவன் மனம் மாறப்போவதும் இல்லை. தன் வேலையை விட போவதும் இல்லை.

அவனுக்கு ஆத்ம திருப்தி தரும் இந்த ஆசிரியர் வேலை அவனுக்கு சாகும் வரை போதும். கற்றதை பிரயோசனப் படுத்துவதாகவும் மேலும் அறிவை பெருக்குவதாகவும் உள்ள இந்த வேலையை விட்டு அவன் போய்ப்பட்ட அவமானம் இனி ஒரு முறை வேண்டவே வேண்டாம்.

அன்றைய பொழுது அவனுக்கு ஐந்து வருடங்களின் பின் இனிய நந்நாளாக மலர்ந்தது

அவன் உற்சாகமாக பாட்டொன்றை முணுமுணுத்த படி வெளியே உலவப்போனான்.





# கண்ணீரில் கலந்த நினைவுகள்

திருமதி.ஜெயா நடேசன் Windhagen

மனிதன் தன் வாழ்வில் நிம்மதியையும், சந்தோஷத்தையும் அனுபவிக்க வேண்டுமென்று நினைத்துத்தான் இறைவன் உலகத்தைப் படைத்தான்.

ஆனால் இந்த மாபெரும் புவியில் நித்தம் நித்தம் நடக்கும் விந்தைகளோ ஆயிரம், ஆயிரம்

தென்றல் வீசி இயற்கையோடு சிரித்து வாழும் சமயத்தில் மறுநிமிடமே, புயல் என்றும், பூகம்பம் என்றும், சுனாமிப் போரென்றும் பொங்கி எழுந்து எல்லாவற்றையும் அழித்து விடுகின்றன.

மனிதன் தன் கடமைகளைச் செய்ய மறந்தாலும், கதிரவனோ உலகம் ஒளிபெறவும், இரவு பகலென்றும், நாள் நேரம் என்றும் தர மறுப்பதில்லை. மனிதனைப்போல சிலசமயம் ஓய்வும் எடுத்துக் கொள்ளும் நிலைமையும் வரும்.

ஆனால் நான் மட்டும் எப்படி ஓய்வு எடுக்க முடியும்? இந்தச் சின்ன வயதில் தந்தையை இழந்துவிட்டு நிற்கிறோமே!

அவள் பிரிந்துபோன தன் கணவனையும், பிள்ளைகளின் எதிர்காலத்தையும் எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே படுக்கையை விட்டு எழும்புவாள்:

தன்தாயின் நிலைமையைப் பார்த்து, நான் தலைமகன் எப்படி இவைகளைப் பார்த்திருக்க முடியும். எப்படியாவது தன் அன்புத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும், மூன்று சகோதரிகளையும் காப்பாற்றியாக வேண்டுமென்று எண்ணினான் சிவசங்கர்.

ஒரு நேரச் சாப்பாடு கூட நிம்மதியாகச் சாப்பிட முடிய வில்லையே என்று எல்லாமாக இழந்து விட்ட பெருங்கவலை. எல்லாவற்றையும் யோசித்து படுக்கையிலிருந்து யோசித்து அழுதான்.

விழிகளிலிருந்து கொட்டும் கண்ணீர் தலையணையை நனைத் துக் கொண்டதை உணர்ந்தான். திடீரென படுக்கையை விட்டெ ழுந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன்னைத் தேற்றிக் கொண்டான். தன்தாய் இலட்சுமி அருகில் வந்து நிற்பதை உணர்ந்தான்.

திடீரெனத் திரும்பிப் பார்த்தான். தன்தாயின் முகத்திலிருந்து வந்த சோகத்தை உணர்ந்தான்.

எனது தாயின் எதிர்காலமே எனது நோக்கமாகும். எனது தாயின் கனவு நனவாக வேண்டும். அழிந்துபோக நான் காரணமாக இருக்கமாட்டேன். என்னில் நம்பிக்கை கொண்ட அந்தத் தாயின் கனவுகள் நனவாகும். அது என்னால் நனவாகும் என்ற பெருமிதமே போதும் என மனதுள் எண்ணிக் கொண்டான்.

தாயைப் பார்த்தால் கவலைதான் வரும். கணவனை நினைத்து நினைத்து கண்ணீருடன் வாழ்ந்தால், மகனின் எதிர்காலம் ஒன்றே வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட தாய் எனது சோகத்தை எப்படிப் புரியப் போகிறாள்.

நன்றாகப் படித்தும், எனது உயர்படிப்புக்கு உதவ எவரும் முன்வரவில்லையே. அதுதான் வசதியின்மை.

எனது நண்பர்கள் யாரும் கிட்ட இருந்தாலும் சோகங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். சோகங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நட்புகள் தேவை..





உள்ளே இருந்து கொண்டு மேலும் மேலும் யோசித்தால், மனநோய் ஆஸ்பத்திரிக்குத்தான் போகவேண்டி வரும் என நினைத்து மனதை ஓரங்கப் படுத்தினான்.

கொழும்புக்கோ, மலைநாட்டிற்கோ போய் வேலைதேடுவோம் என்று யோசித்தவாறு நடந்தபடி யாழ்-கொழும்பு நோக்கிச் செல்லும் பேருந்து நிலையத்திற்கு வந்து சேர்ந்தான்.

பஸ் ரிக்கற்றைப் பெற்றுக்கொண்டு இரண்டாவது சீட்டில் உட்கார்ந்தான்.

டேய் சிவா என்றொரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

ஏய்! மச்சான் நடா! நீயா? எங்கே எப்படா வந்தாய் என்று கேட்டவாறு அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தான்.

ஊருக்குப் போய் இரண்டு மாதங்கள். கடிதமும் வராது. புதினங்களும் எழுதமாட்டார்கள். அதுதான் கம்பனி லீவு தந்தது. அதுதான் போயிட்டு வாறன் என்றான் நடா.

என்நிலமையைப் பார்த்தாயா? அப்பா எங்கு போனார்? யார் கடத்தினார்கள்? உயிரோடு இருக்கிறாரோ? சாக்காட்டி விட்டார்க ளோ? அல்லது புதைகுழியோ ஒன்றுமே தெரியவில்லை. அம்மா, சகோதரிகள், தான் என்று தன் குடும்ப நிலையை சொல்லி முடித்தான் சிவா

நீ கொழும்புக்கு வருகிறாய் சரி. மச்சான்! கொழும்பு முந்தி மாதிரி இல்லை. திடீர் திடீரென மறித்துச் செக் பண்ணுவார்கள். நான் என் றூமுக்கு கூட்டிப் போகலாம். அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் பதிய வேண்டும்.

இங்கும் இந்த பஸ்சில் ஒவ்வொரு பொயின்றுகளிலும் (பரிசோதனை நிலையங்கள்) செக் பண்ணுவார்கள். சிங்களக் காடையர்களின் தொல்லை ஒரு பக்கம். அடையாள அட்டை, சூட்கேஸ், பேஸ் எல்லாவற்றையும் கவனமாக வைத்துக்கொள் என்று நிலவரங்க ளைச் சொல்லி முடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்சுக்குள் ஓரே பரபரப்பும் சலசலப்பும் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். இராணுவத்தினர் ஏறி ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு, பலகேள்விகளையும் கேட்டு விசாரித்து விட்டு இறங்கினர்.

எமது சுதந்திர நாட்டின் பிரஜைகள் வாழ்க்கை இப்படியாகிப் போனதில் யாரைத்தான் குறைகூற முடியும். கொழும்பு வந்தாயிற்று.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்புக் காரணமாக தெருக்களில் முதலுதவி வண்டிகள் அங்குமிங்கும் ஓடும் சத்தமும், இராணுவத்தினரின் வாகனங்களும் சிவாவுக்குப் பயத்தை உண்டு பண்ணின.

சிறிது நேரத்துள் சிவா இருந்த விடுதியை பாதுகாப்புப் படையினர் நிறைத்தனர். அங்கிருந்த இளைஞர், யுவதிகளை வலுக்கட்டாயமாகக் கூட்டிச் சென்றனர். "பாவி போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்" என்பர் அதே போன்று சிவாவும் அகப்பட்டுக் கொண்டான்.

கூட்டிப் போனவர்கள் சும்மாவா விட்டார்கள் எனக்குக் கிடைத்த சித்திரவதை விசாரணைக்குள் இருந்தபோது கழுத்தில் ஒரு சயனைட் குப்பி இருந்திருந்தால் நிம்மதியாகத் தூங்கியிருக்கலாம் என்று சிவா நினைத்துக் கொண்டான்.

வெளியே வந்து மூன்று மாசங்கள் முடிந்து கொண்டே இருந்தன. தூங்கினால் கெட்ட கனவு.

முன்புகூட தாய் ஒரு சமயம் பிரிவைத் தழுவிக் கொண்ட போது ஏற்பட்ட சோகம், வலி.....

வளர்ந்து விட்டவர்கள் பிரிவின் தாக்கத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. அது தருகின்ற சோகங்களைப் பழகிக் கொள்ள வேண்டும்.

நான் ஏன் பிறந்தேன்? நான் பிறந்த நேரம் ஒன்று நினைக்க ஒன்று நடக்கிறதே! நான் அதிஸ்டம் கெட்டவன் என்று தன்னை நொந்து கொண்டான்.





திரும்பத் தாயிடம் சென்று அவள் அன்பில் அவள் கண்முன் இருந்துவிட்டால் என்ன என்று எண்ணினான்.

தாய் சகோதரிகளிடம் செல்ல ஆயுத்தப்படுத்தினான். மறுநாளே புறப்பட்டுச் சென்று தாயைக் கண்டான்.

ஒளிந்திருந்த தாயின் எண்ணம் அவனை அப்படியே அணைத்துக் கொண்டது. தாயின் கண்கள் குளமாயின. கன்னத்தைக் கண்ணீர் நனைத்தது.

எத்தனை மாதங்கள், வாரங்கள், நாட்கள் தாய்க்குக்கூட மகனைக் கண்ட சந்தோஷத்தில் சோகங்கள் தலை மறைவாகின.

கால்களில் வீழ்ந்து வணங்கித் தொட்டுக் கும்பிட்டான். "ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் சான்றோன் எனக்கேட்ட தாய்" தாயின் நிலையில் நின்றாள்.

மகனைக் கண்டதும் சந்தோஷத்தில் என்ன செய்வதென அறியாது மகனின் கன்னத்தை வருடிக் கொண்டிருந்தாள்.

அம்மா பசிக்குது என்ற சிவாவின் குரல் கேட்டபோதுதான் மகனின் நினைவு வந்தது. எவ்வளவு நாட்களுக்குப் பிறகு மகனின் குரல் அம்மா பசிக்குது.

இதோ.. இதோ! குளிச்சிட்டு வா. இறைவனுக்கு விளக்கு வைத்து விட்டுச் சாப்பிடலாம்.

அம்மா உன் கையால் சாப்பிட்டு வெகுநாளாயிற்று. இன்று வெள்ளிக்கிழமை. மரக்கறிச் சாப்பாடு. வாய் ஊறுதம்மா தாய்க்கோ பெருமிதம். தினம் தினம் தான் சாப்பிடுமுன் மகனை நினைத்துப் பக்கத்து வீட்டுக் கண்ணனுக்கு ஒரு நேரச்சாப்பாடு கொடுத்துவிட்டுச் சாப்பிடுவாள். இன்று இப்போது கண்ணனுக்குக் கொடுக்க வேண்டியதில்லையே. தன் மகனே திரும்பி வந்து விட்டான் என்று திருப்திப் பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பிறந்து வளர்ந்த மண்ணையும், பெற்றவளையும், தகப்பனையும், உறவினர்களையும், கூடப்பழகினவர்களையும் என்று எல்லோருமே எத்தனையோ தாக்கங்கள், இழப்புகள், இடப்பெயர்வுகள், மறைவுகள், மரணங்கள் என்றும் பல சோதனைகளைச் சந்தித்த உறவை மீண்டும் அருகே கண்டு அளவளாவும் சந்தோஷத்தில் மனம் நிறைந்திருந்தான்.

என்ன அழகான தேசம். மண் பாழாய்ப் போயிருக்கிறது. கண்டு மனம் வேதனையில் சிதறிக்கிடந்தது.எங்கு பார்த்தாலும் இடிந்த கோயில்கள், பாடசாலைகள், கூரை இழந்த வீடுகள், கட்டிடங்கள் என்று வேதனையாய் காட்சி அளித்தன.

குடும்பங்கள் சீர்குலைந்து பல பிரிவுகளுடன் இருந்தார்கள். பட்டினிச்சாவு, பாலில்லாமல் குழந்தைகள் பல நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். போக்குவரத்துகள் தடை செய்யப்பட்டிருந்தன. வீதிகள் மூடப்பட்டிருந்தன.இனிமேல் எமக்கு இந்நிலைதானே என்று எண்ணினான்.

ஒரு கத்தோலிக்க குரு கொழும்பிலிருந்து வந்தபோது தன்னுடன் ஒரே பஸ் சீற்றில் அமர்ந்து பல புத்திமதிகளைக் கூறியதை நினைத்தான். சமாதானத்தை வேண்டி நிற்கும்வரை அவரை மனதிற் கொண்டான். தானும் அவருடன் சேர்ந்து அனாதைப் பிள்ளைகளை பராமரிப்போம் எனத் தீர்மானம் செய்தான்.

தாயின் தனது விருப்பத்தைக் கூறி அனுமதியைப் பெற்றான். தாயும் அதனையே விரும்பினமாதிரிச் சம்மதம் தெரிவித்து ஆசிர் வழங்கி அனுப்பி வைத்தாள்.

இதுவே இறைவனின் செயலென்று நினைத்து குருவின் மடத்திற்குப் புறப்பட்டுச் சென்றான்.





# தாயும் மகளும்

## புனிதமலர் இராஜேஸ்வரன் Elsdorf

அம்மா!. அம்மா!

என் சிந்தனை தடைப்பட்டு விடுகிறது. குனிந்து மகளைப் பார்க்கிறேன். எடுப்பான நாசி, காற்றில் அசைந்து கொள்ளும் முன் கூந்தல், குமிழ்ச்சிரிப்பு, ஒரு கணம் என் மகள்தானா இவள்! வேறு வயிற்றில் பிறந்திருக்க வேண்டியவள். எவ்வளவு அழகு. ஆடை அலங்காரம், நடை, பாவனை, பணிவு வணிகர் குலச்சாயல் தெரிகிறதே அந்த முகத்தில். வணிகர் மகளல்லவா என் மகள். பெருவணிகர் மாசாத்துவானின் பேரமகள். கசப்பான உண்மை யார் மறந்துவிட முடியும்.

இந்திரவிழாவின் போது காவிரி ஆற்றங்கரையில் என்னை விட்டுப் பிரிந்த போது இவளையும் அழைத்துச் சென்றிருக்கலாம். சென்றிருந்தால் என் மகளுக்கு இழிபெயர் ஏற்பட்டிருக்காது. கோவலர் கூட கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலைக்கு ஆளாகி இருந்திருக்க மாட்டார். மதுரை மாநகர் கண்ணகியின் கற்புக் கனலில் அழிந்திருக்காது. சேரநாட்டில் அவள் தெய்வமாகி விட்டிருக்கவும் மாட்டாள். மணிமேகலை என்ற என் மகளுக்கு அன்பு மிகுந்த அன்னையாகியிருப்பாள்.

இவளின் தந்தையைப் பெற்றவர்களிடம் இவளையும் அழைத்துக் கொண்டு நானும் சென்றுவிட நினைத்தேன். அதுகூட முடியவில்லையே! தூது சென்ற என் தோழியிடம் வேசி பெற்ற மகள் என்று......... சூதுவாதறியாத என் மகளை எடுத்தெறிந்து பேசி விட்டார்களே! ஐயோ என் மகளே! என் வயிற்றில் பிறந்ததனால் அல்லவா உனக்கும் வடுச்சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியில் படுத்துறங்கும் மகளைப் பார்க்கிறேன். எதையுமே அறியாமல் உணராமல் தூக்கம் கொள்கிறாள் அவள். கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தேன். என்னைப் புறந்தள்ளினார்கள் பரவாயில்லை. நான் வேசியின் மகள்தான். தந்தையை அறியாதவள். ஆனால் என் மகள்...................

கோவலர் பெற்ற குலமகள் அல்லவா! வேசியர் குலத்தில் பிறந்தாலும் என் அன்னையை எதிர்த்துக் கொண்டு நல்லொழுக்கத்துடன்தானே நான் வாழ்ந்தேன். மன்னரவை அரங்கேற்றத்தின்போது நான் எறிந்த மலர்மாலை அவர் கழுத்தில் விழுந்ததும், ஆயிரம் கழஞ்சு பொன் கொடுத்து அவர் என்னைத் தனதாக்கிக் கொண்டதும்............விதி! அவர்தான் உலகம் என்று வாழ்ந்தேன். அவரோடுதானே வாழ்ந்தேன். கிடைத்த ஒரே சாட்சி இவள். இவள் வணிகர் குலத்தின் விளக்கல்லவா! என்றார்கள். என்னால் என் மகளுக்குமோ இழிவுநிலை.

கோவலருக்கு மனைவியின் நினைவில்லாமலா என்னுடன் வாழ்ந்தார். நானா அவரை இழுத்து வைத்துக் கொண்டேன். என்னை ஏன் இழிவு சொல்கிறது இந்த உலகம். மனைவியின் நினைவில் அவர் இருந்திருந்தால் என்னைப் பிரிவது அவருக்குச் சிரமமில்லை. கண்ணகியிடம் மட்டுமா, பெற்றவர்களிடம் கூடச் செல்லவில்லையே அவர். அவர்களிடம் சென்று வரும்படி எத்தனை தடவை சொல்லியிருப்பேன். எதையாவது கேட்டாரா? உன்னைப் பிரிந்து வாழமுடியவில்லை. நீதான் என் உலகம் என்றார். ஆனால் நடந்ததோ வேறு.

நான் அறியாமலே, எனக்குத் தெரியாமலே அம்மா தன் குணத்தைக் காட்டிக் கொண்டாள். இவர் சொத்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அம்மாவிடம் வந்து சேர்ந்தது. அம்மாவின் குலதர்மம் அதுதானே. இவர் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றது வேறு. கௌரவமாகப் பிறந்தநாட்டில் வாழ முடியாதது ஒரு காரணமாக இருக்கலாம். நாட்டிலேயே இருந்தால் திரும்பவும் என்னுடன் தொடர்பு வந்துவிடும் என்ற பயம் காரணமாகவும் இருக்கலாம்.





போகத்தான் போனார் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டாவது சென்றிருக்கலாம். என்னிடம் கேட்டிருந்தால் என்தாயாரிடம் பறித்தாவது கொடுத்திருப்பேனே! அவரின் இறுமாப்புக்கு இரு பெண்களும் பலியாகிக் கொண்டோமே! கண்ணகிதான் வாழ்ந்தாளா? நானுந்தான் வாழந்தேனா! இருவரின் பெருமூச்சுகளும் தான் இவருக்கு அவலச்சாவைக் கொண்டு வந்ததா! இதுவும் விதிதானா? விதிதான். விதிமேல் பழிபோடுவது மிகவும் சுகமானது என்னையறியாமல் கண் கலங்கிப் பெருமூச்செறிந்து கொள்கிறேன்

மடியில் படுத்திருந்த மகள் அசைந்து படுத்துக் கொள்கிறாள். ஏனோ என் மனம் கனத்துக் கொள்கிறது. அம்மாவோடு செல்கிறோம் என்பதைத் தவிர ஏதாவது தெரியுமா? எங்கே போகிறோம் என்றாவது கேட்பாளா? கேட்டாள் சிரித்துக் கொள்வாள். சிரித்துக் கொண்டே சொல்வாள் " என் அம்மா என்னை எங்கு கொண்டு சென்றாலும் அது நல்லவழியாகத்தான் இருக்கும். நான் ஏன் பயம் கொள்ள வேண்டும் என்று.

என்பயம் எனக்குத்தான் தெரியும். எங்கே என்தாய் அவளைத் தன்வசமாக்கி விடுவாளோ என்று என் கைக்குள்ளேயே வைத்து வளர்த்தேனே. அப்படி இருந்தும் என் மகளுக்கு வேசிப்பட்டம் சூட்டிவிட்டாரே மாசாத்துவன். என்னை விரட்டி விட்டு இவளை, தன் வாரிசை அரவணைத்திருக்கலாமே. கோவலரின் மகள் என்பதை நெற்றியும், கண்களும், எடுப்பான நாசியும், கவரும் சிரிப்பும் சொல்லாமல் சொல்லவில்லையா அவர்களுக்கு.

வேண்டாம் இந்த நகர வாழ்க்கையே வேண்டாம். இவ்வுலக வாழக்கையே வேண்டாம். எங்காவது...... அமைதி வேண்டும். ஆன்மீக வாழ்வு வேண்டும். யாருக்காவது உதவி செய்ய வேண்டும். உண்மை நெறி வேண்டும். உள்ளத்தூய்மை வேண்டும். உலக ஆபாசங்களைத் துறக்க வேண்டும். ஆசையே துன்பத்தின் ஆரம்பம். ஆசையே துன்பத்தின் எதிரி. ஆசையைத் துறத்தலே பேரின்பம்.

அதோ தூரத்தில் வெளிச்சம் தெரிகிறது. ஏதாவது அன்ன சத்திரமாகத்தான் இருக்க வேண்டும். வண்டிக்காரரிடம் விசாரிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாதவித்தாயே! அது ஒரு அன்ன சத்திரம். வழிப்போக்கர்களும், ஆண்டிகளும் இளைப்பாறும் இடம். தங்கிச் செல்லலாம். ஆனால் நீங்கள் செல்லவேண்டிய பௌத்த தர்மமடம் சிறிது தூரம்தான்" என்றான் வண்டிக்காரன்.

அவ்விடத்துக்குச் செல்வோம். நெடுந்தூரம் வந்ததில் காளைகளும் களைத்து விட்டன. தண்ணீரும் தீவனமும் கொடுங்கள். சிறிது நேரம் தங்கிச் செல்லலாம் என்றேன் நான்.

அன்னசத்திரம் நெருங்கி விட்டது. மகளே மணிமேகலை எழுந்திரு. இங்கு சிறிது இளைப்பாறலாம். உன் ஆபரணங்களைக் கழற்றிக் கொடு. அவள் அப்போதாவது....... ஒவ்வொன்றாகக் கழற்றுகிறாள். ஒவ்வொரு ஆபரணமும் கழற்றும் போதும் கணத்துக்குக் கணம் தெய்வீகக் களை தெரிகிறது அவள்முகத்தில். ஆபரணங்கள் களைந்த நிலையில் என்மகள் மணிமேகலைத் தெய்வமாகவே தோன்றுகிறாள். அவளின் இரு கரங்களையும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன்.

ஏன் அம்மா அழுகின்றாய் என்னும் என் மகளிடம், உன்னைப் பெற்றதற்காகப் பெருமைப்படுகின்றேன். இந்த ஆபரண முடிச்சை அன்னச்திரக் காவலரிடம் கொடு. ஏழைகளுக்கு அதன்மூலம் உணவு கிடைக்கட்டும். திரும்பவும் அவள் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன்.


என் மகள் யாரென்பது எனக்குத் தெரியும். உலகத்தின் பசிப்பிணி அகற்றும் அன்னபூரணி அவள். உலக மக்களின் வயிற்றுப்பசியைப் போக்க வந்தவள். ஞானப்பசியை ஊட்ட வந்தவள். தர்மநிலையை உணர்த்த வந்தவள்.

திரும்பவும் வண்டியில் ஏறிக்கொள்கிறோம். பயணம் தொடர்கிறது. மகளிடம் சொல்கிறேன். அதோ தெரிகிறதே பௌத்த தர்மசாலை. அதுதான் இனி எங்களின் உறைவிடம் மகளே! அவள் புன்சிரிப்புடன் என்மீது தலைசாய்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org